
# கேட்டிருப்பாய் காற்றே...

(பத்து நாடகங்களின் தொகுப்பு)

## கல்லூரி நாடகங்கள்

## தொகுதி - 02



பா.இரகுவரன்

# கேட்டிருப்பாய் காற்றே...

(பத்து நாடகங்களின் தொகுப்பு)

**கல்லூரி நாடகங்கள்**
**தொகுதி - 02**

## பா.இரகுவரன்

**தேடல்வெளியீடு – 09**

# Kēddiruppāi Kātte...

College Dramas, Part - 02

---


**A Collection of Ten School Dramas.**

**V.B.Raguvaran - Sc.Spe (Trd). BA (Hons)**
**(Special in Drama & Theatre)**

Brahmin Street,
Thumpalai,
Point Pedro.


| | |
|---|---|
| First Edition | - 2019.09.12 |
| Language | - Tamil |
| Copyright | - Mrs.Ranjitha Raguvaran |
| ISBN | - ISBN 978-955-43055-4-0 |
| Pages | - xi + 137 |
| Size | - B5 (25cm x 17.6cm) |
| Computer Design | - P.Thurai |
| Art | - T.Jeyatheepan, (Teacher) |
| Printers | - Theepan Printers, Point Pedro |
| Price | - 500/= |

# சமர்ப்பணம்



பருத்தித்துறை
பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை
1903 - 1968

பேராசிரியர் கா.சிவத்தம்பி முதல் பல தமிழ் பேராசிரியர்களை உருவாக்கியவரும், தமிழில் இயற்பண்பு நாடகங்களின் முன்னோடியும், "காதலியாற்றுப்படை" என்ற நூலில் பருத்தித்துறையைப் பற்றிய தகவல்களை வெளிப்படுத்தியவருமாவார்.

# உள்ளே


| | |
|---|---|
| வாழ்த்துரை - 01 | i |
| வாழ்த்துரை - 02 | ii |
| வாழ்த்துரை - 03 | iv |
| முன்னுரை | v |
| நன்றிகள் | xi |
| 01. ஏறுவெயில் (2016) | 01 |
| 02. பயணம் (2007) | 15 |
| 03. டெங்கு மங்கிடவே (2010) | 27 |
| 04. மீண்டும் தொடங்கும் மிடுக்கு (2015) | 40 |
| 05. ஒளி நமக்கு வேண்டும் (2009) | 52 |
| 06. தொ(ல்)லைக்காட்சி (2008) | 67 |
| 07. செல்லும்வழி இருட்டு (2019) | 80 |
| 08. A9 (2003) | 92 |
| 09. பரமார்த்தகுருவும் சீடர்களும், பாகம் - 01 (2002) | 108 |
| 10. பரமார்த்தகுருவும் சீடர்களும், பாகம் - 02 (2018) | 119 |
| முடிவுரை | 135 |
| சுயவிபரங்கள் | 136 |

# வாழ்த்துரை – 01

"கேட்டிருப்பாய் காற்றே" என்ற நூல் இரகுவரனின் 09வது நூலாகும். விஞ்ஞான ஆசிரியர் என்ற தொழிலுக்கு அப்பால் நாடகம், நாட்டுக்கூத்து, இலக்கியவாசிப்பு, சிறுகதைப் படைப்பாளி, நாட்டாரியல், சமூகவரலாறு, சுற்றுச்சூழலியல், மரபுரிமை போன்ற பல்வேறு அழகியல் முகங்களையும் மிகப் பொருத்தமாகச் சூடிக்கொண்டவர் இரகுவரன். மேம்போக்கான ஈடுபாடு கொள்பவர் அல்ல. ஒவ்வொன்றிலும் தன் ஆளுமையை ஆழ விதைத்துச் செல்பவர். தனக்கென தனிமுத்திரைகளையும் பதிக்கவும் தவறவில்லை.

இந்நூலில் மொத்தம் பத்து நாடகங்கள் உள்ளடங்கியுள்ளன. இவை ஹாட்லிக் கல்லூரியிலும், ஞானசம்பந்தர் கலைமன்றத்திலும் மேடையேற்றப்பட்டவையாகும். இவற்றில் பெரும்பாலானவற்றை நான் நேரில் பார்த்து இரசித்திருக்கிறேன்.

இவற்றைப் படிக்கும் போதும், அதற்கு மேலாக நாடக மேடையில் நிகழ்த்தப்படும் போதும் அவை உங்கள் மனதில் ஆழப் பதிந்துவிடுவதுடன் பல புதிய தரிசனங்களையும் சிந்தனை ஊற்றுக்களையும் திறந்துவிடுவதை உணர்வீர்கள். காரணம் இவை சாதாரண நாடகங்கள் அல்ல. நவீன நாடகங்கள். நாளாந்த மனித வாழ்வின் கோலங்களின் சில சுவாரசியமான பதிவுகளாக இருக்கும் அதேநேரம் குறியீடுகளும், வாழ்வியல் கருத்துக்களும் இணைந்திருப்பதால் நுகர்வுச்சுவைக்கு அப்பால் சிந்தனை அகலிப்பையும் தருவனவாக அமைகின்றன.

நண்பன் இரகுவரன் அவர்களை உயர்தர மாணவனாக இருந்த காலம் தொடக்கம் அறிவேன். ஆசிரியகலாசாலை மாணவனாக, பட்டதாரியாக, கடமையுணர்வுடன் வழிகாட்டல் திறன்மிக்க ஆசிரியராக, நூலகப்பொறுப்பாளராகவும் இருந்து வருகிறார். இப்பொழுது இளைப்பாறும் பருவம்வரை நெருங்கிப்பழகியிருக்கிறேன். என்னுடைய நெருங்கிய நட்புவட்டத்தில் உள்ள, ஒரு சிலரில் முக்கியமானவராகவும், குடும்ப நண்பராகவும் இருப்பது மகிழ்ச்சி தருகிறது.

அமைதியான குணம் கொண்ட அதே நேரம் புதிய எல்லைகளைத் தாண்டி முன்னகர வேண்டும் என்ற உற்சாகமும் செயற்திறனும் மிக்கவர். இதனால்தான் அவரால் ஆசிரியப் பணிக்கு அப்பால் சமூக செயற்பாடுகளிலும் ஈடுபட முடிகிறது.

அவரது பணிகள் மேலும் சிறந்தோங்கவும் இன்னும் பல நூல்களை வெளியிடவும் பல நாடகங்களை அரங்கேற்றவும் அவரது மணிவிழாக்காலத்தில் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டொக்டர் எம்.கே.முருகானந்தன்
05.09.2019.

# வாழ்த்துரை – O2

நண்பர் திரு.பா.இரகுவரன் அவர்களின் மணிவிழாவையொட்டி வெளியிடப் படவுள்ள அவரின் நாடகநூலுக்கு வாழ்த்துரை வழங்குவதுகுறித்து மகிழ்ச்சி யடைகின்றேன். நண்பர் இரகுவரன் ஏறத்தாள 35 ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு அறிமுகமானவர்.

டொக்ரர் எம்.கே. முருகானந்தன் அவர்களின் இல்லத்தில் மாதந்தோறும் இடம்பெற்றுவந்த அறிவோர்கூடல் நிகழ்வில் அறிமுகமாகி இறுக்கமான நட்பு எம்முள் வளர்ந்தது. இரகுவரன் அவர்கள் நாடகமும் அரங்கியலும் என்ற பாடத்தை துறைபோகக் கற்றவர். அப்பாடத்தில் சிறப்புப்பட்டம் பெற்றவர். கற்பித்தலோடு நின்றுவிடாமல் பல நாடகங்களைத் தானே எழுதி அவற்றைத் தனது மாணவர்களைக் கொண்டு மேடையேற்றி வருபவர். அவரின் மாணவர்கள் நாடகப்பயிற்சியின் போதும் அரங்காற்றுகையின் போதும் மிகவும் உற்சாகமாக பங்குகொள்வதை நான் கண்டிருக்கிறேன். இதனாலே இவருக்குப்பின்னாலே ஒரு மாணவர் கூட்டம் இருக்கும்.

நாடகமும் அரங்கியலும் உயர்கல்விக்கான ஒரு பாடத்துறையானபின் பல திறமையான நெறியாளர்களை உருவாக்கியுள்ளது. அவர்களுள் நண்பர் இரகுவரனும் முக்கியமான ஒருவர். ஏனைய நெறியாளர்களைவிட இரகுவரன் அவர்களிடமுள்ள ஒரு சிறப்பம்சம் மரபுவழி நாடகங்களில், கூத்துக்களிலும் அவர் கொண்டுள்ள நாட்டமும் ஈடுபாடும் ஆகும்.

வடமராட்சியைச் சேர்ந்த கூத்தர்களதும், இசை நாடக கலைஞர்களதும் வரலாறு தொடர்பான பல தகவல்களை அவர் சேகரித்து வருவதோடு அவற்றைப் பதிவு செய்தும் வருகிறார். இப்படியான கலைஞர்கள் பலரை நேரடியாகச் சென்று சந்தித்து அவர்களுக்கு ஊக்கமளித்து வருவதை நான் அறிவேன். கலைஞர் ஆர்.எஸ். ஆனந்தனின் சமூகத்தில் 1960களில் ஆடப்பட்ட "செட்டிவர்த்தகன்" எனும் நாட்டுக்கூத்தை கலைஞர் ஆர்.எஸ்.ஆனந்தனுடன் இணைந்து நெறியாள்கை செய்து, தானும் ஒரு பாத்திரத்தை ஏற்று அறிவோர்கூடலில் ஆண்டு விழா ஒன்றில் 1994 இல் அரங்கேற்றியிருந்தார். இந்நிகழ்வில் வடபகுதியிலுள்ள பல்வேறு இலக்கியக்காரர்களும், பேராசான்களும் நாடகக்கலைஞர்களும், நாடகபாடத்தை யாழ்பல்கலைக்கழகத்தில் பயின்றுவரும் மாணவர்களும் கலந்துகொண்டு இக்கூத்தைப் பார்த்து இரசித்தனர்.

நான் நடிக்கும் இசைநாடகங்கள் எங்கே நடந்தாலும் அங்கு வந்து நாடகத்தைப் பார்த்து உற்சாகமூட்டுவார். நாம் இருவரும் அவரது வீட்டில் பல நாட்கள் பல மணி நேரங்கள் இசைநாடகம் பற்றியும், கூத்துக்கள் பற்றியும் கலந்துரையாடியுள்ளோம். எனது தந்தையாரான அண்ணாவியார் எஸ்.தம்பி ஐயா மீதும் அவர் மிகுந்த மதிப்பு வைத்திருந்தார்.

இரகுவரனின் மற்றொரு சிறப்பம்சம் அவர் நாட்டுபுறவியல் ஆய்வாளராக விளங்குவதாகும். "ஊரும் வாழ்வும்" (தும்பளை கிராமம் பற்றியது), "பருத்தித்துறையூராம்" போன்ற நூல்களில் வடமராட்சி மக்களின் குறிப்பாக பருத்தித்துறை பிரதேசமக்களின் உணவு, உடை, பழக்கவழக்கங்கள், சடங்குகள், வரலாறுகள் போன்றவற்றை விளக்கியுள்ளார்.

இரகுவரனின் நூல்களும் நாடகங்களும் பல பரிசுகளைப் பெற்றுள்ளன. இன்று தமிழில் நாடகாசிரியர்கள் அருந்தலாக உள்ள நிலையில் இரகுவரன் அவர்கள் சிறந்த சிறுவர் நாடகங்களையும், வளர்ந்தோருக்கான நாடகங்களையும் எழுதிவரும் நாடகாசிரியராகவுள்ளார். கேட்டிருப்பாய் காற்றே என்ற பெயரில் வெளிவரும் இந்நாடகத் தொகுப்புநூல் பத்து கல்லூரி நாடகங்களை உள்ளடக்கியுள்ளது. எவரும் நெறியாள்கை செய்யக்கூடியவகையில் நெறியாளருக்கான குறிப்புகளும், அரங்கு ஆற்றுகையின்போது நடிகர்களின் இடநிலையை மேடையில் குறிக்கும் விளக்கப்படங்களும் இந்நூலில் தரப்பட்டுள்ளன.

இரகுவரன் அவர்கள் தனது தாய் தந்தையரை மிகவும் நேசித்தார். அவரின் அம்மா நோயுற்று வீழ்ந்து படுக்கைப்புண் வந்த நிலையிலும் கூட அவரை நன்றாகக் கவனித்து படுக்கைப்புண்ணுக்கு மருந்து தடவி வந்தார். ஒரு சமயம் அவரை அவரது வீட்டில் சந்திக்கச் சென்றவோது அம்மாவின் உடம்பை புரட்டி முதுகுப்புண்ணைக்காட்டி அதற்கு மருந்தும் தடவி விட்டதை கண்டபோது நெகிழ்ந்துபோனேன். இன்றும் இக்காட்சி என்னில் பதிந்திருக்கிறது.

நண்பர் இரகுவரன் மணிவிழா காணும் இன்றைய நாளில் அவருக்கு நிறைந்த நலமும், நீண்ட ஆயுளும் வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். அவர் மேலும் தமது பணியைத்தொடர வாழ்த்தி இறையாசியையும் இறைஞ்சுகிறேன்.

கலாநிதி த.கலாமணி,<br>
கலை அகம்,<br>
அல்வாய்.

# வாழ்த்துரை – O3

முத்தமிழ்களில் ஒன்றான நாடகக்கலை ஆனது தொன்றுதொட்டே எமது மண்ணோடு பின்னிப் பிணைந்ததாகும். நாடகம் என்றதும் எமது நினைவுக்கு வருபவர் திரு.பா.இரகுவரன் அவர்களே.

இரகுவரன் சேர் எமது மன்றத்தின் பொது செயலாளர் என்பதைவிட தனிப்பட்ட முறையில் அவர் எனக்கு சகோதரனுக்கு ஒப்பானவர். சிறுவயது முதலே நாடகத்தின் மீதான அவரின் ஈர்ப்பை நான் நன்கறிவேன். அவரின் நாடகங்கள் அலங்கரிக்காத எமது மன்ற ஆண்டுவிழாக்கள் இல்லை என்றே சொல்லலாம். அந்த அளவிற்கு எமது அரங்கிற்கும் அவருக்கும் நீண்டகால பந்தம் உண்டு. குறுகிய காலத்திலேயே மன்ற மாணவர்களை நெறிப்படுத்தி தரமான நாடகங்களை எமக்கு அளித்து மன்ற விழாவினைச் சிறப்பாக்குவதில் பெரும்பங்கு அவருக்கு உண்டு.

நாடகத்துறையில் மட்டுமன்றி தமிழர் பாரம்பரியங்களை பேணுவது, இயற்கை சூழலை பாதுகாப்பது.... போன்ற பல விடயங்களை மக்களுக்கு எடுத்துரைக்கும் பெரும் பணிகளை பலகாலமாகச் செய்து வருகின்றார்.

இரகுவரன் சேர் அரங்கேற்றிய நாடகங்களின் பத்து மூலப்பிரதிகளை நூலாக வெளியிடுவது எமது மண்ணுக்கும் மன்றத்திற்கும் பெருமை சேர்க்கும் விடயமாகும். இவர் பணி மேன்மேலும் தொடர வாழ்த்தி எல்லாம்வல்ல முதல்வி அம்மன் ஆசிகளை வேண்டுகின்றேன்.

திருமதி.இ.யோகரத்சிதம்
காப்பாளர்,
ஞானசம்பந்தர்கலை மன்றம்,
பருத்தித்துறை.

# முன்னுரை

## "வெளி" தனில் அசையும், அலையும் மானுடனாய்க் கிடைத்ததொரு வாழ்வு

12.09.2019 ஆம் நாளான இன்று எனக்கு அகவை அறுபது ஆகின்றது. என்னைப்பற்றிய விபரங்கள் சிலவற்றை வெளிப்படுத்த வேண்டியது காலத்தின் கடமையாக முன்னிற்கின்றது. செயற்பாடுகள் பற்றி பதிவுசெய்வது ஆவணப்படுத்தல் ஆகின்றது. இது சமகால, எதிர்கால வரலாற்றிற்கு பெரிதும் உதவி நிற்கும்.

குடும்பத்தில் தனிப்பிள்ளையாக பிறந்து வளர்ந்தேன். எனது தந்தையாரின் வாசிப்புப்பழக்கமும், புத்தகச் சேகரிப்புகளுமே எனது பொழுது போக்குகளில் ஒன்றாக இருந்தன. தகப்பனார் கொழும்பில் வேலை செய்த காலத்தில் அம்புலிமாமா போன்ற சஞ்சிகைகளை வாங்கி எனக்கு அனுப்பிவைப்பார். அம்புலிமாமாவைப் பல தடவைகள் வாசிப்பேன். அடுத்த அம்புலிமாமா எப்பொழுது எனது கைக்குக் கிட்டும் என ஏங்கி நின்றது எனது சிறுவயதுக்காலமாகும். எனது ஏழாவதுவயதில் (1966) இருந்தே அம்புலிமாமாவை வாசிக்கத் தொடங்கிவிட்டேன்.

சித்திரக்கதைகள், துப்பறியும் கதைகள் சரித்திரக் கதைகள், சமூகக்கதைகள் என எனது வாசிப்புப்பழக்கம் படிப்படியாக வளர்ந்து சென்றது. 8 ஆம் வகுப்புப் படிக்கும் போது (1972) அதாவது எனது 13 வயதில் இருந்து "கல்கி" சஞ்சிகையை வாராவாரம் பருத்தித்துறை நகரில் இருந்த "வடலங்காபுத்தகசாலையில்" வாங்கிப்படிக்கத் தொடங்கினேன். அத்துடன் வீரகேசரிப் பிரசுரங்களாக சில ஆண்டுகள் தொடர்ந்து வந்த இலங்கை எழுத்தாளர்களின் நாவல்கள் எனது வாசிப்பை மேலும் வளர்ந்தன. அத்துடன் ஊரில் புத்தகங்களை வைத்திருந்த ஒருசில வீடுகளில் புத்தகங்களை இரவல் வாங்கி வாசித்து நகர்ந்ததொருகாலம்.

### பருத்தித்துறை நகர சபை நூலகம், சிறுகதைகள் பிரசுரம்.

பருத்தித்துறை தெருமூடி மடத்துக்கருகில் அமைந்திருக்கும் பருத்தித்துறை நகர சபை நூலகம் எனது வாசிப்புக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது. 1979, 1980 களில் இங்கு தென்னிந்தியச் சஞ்சிகைகளான கல்கி, கலைமகள், ஆனந்தவிகடன், குமுதம், மஞ்சரி, கலைக்கதிர்...... போன்றவை ஏராளமாகக்கிடந்தன. அத்துடன் தினசரிப் பத்திரிகைகளை வாசிக்கும் பழக்கத்திற்கு இந்த நூலகமே எனக்குத் தொடக்கமாகியது.

1980 களில் 5, 6 சிறுகதைகள் எழுதியிருக்கிறேன். அவை டொமினிக் ஜீவாவின் மல்லிகை சஞ்சிகையிலும், சிரித்திரன் சஞ்சிகையும் வெளிவந்தன. 1982இல் சிரித்திரன் சஞ்சிகை நடாத்திய பாரதி நூற்றாண்டு விழா சிறுகதைப் போட்டியில் 2ஆம் இடம் எனது

"காக்கை குருவி எங்கள் சாதி" என்ற சிறுகதைக்குக் கிடைத்தது. பதுங்கு குழி வாழ்க்கை வைத்து எழுதிய "சூரியனும் கறுத்துப்போச்சு" என்ற சிறுகதை பலரின் பாராட்டைப் பெற்றது, 1987இல் எழுதிய கல்வாரி என்ற சிறுகதை எனக்கு மிகவும் பிடித்தது. வாசிப்புப் பழக்கமே என்னை பல்வேறு துறைகளுக்குள் நுழைந்து செயற்பட அடிப்படையாய் இருந்து வருகிறது என்பேன்.

1. தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயில்
2. தும்பளை மேற்கு சனசமூக நிலையம்

மேற்படிகோயில் கூத்துக்களுக்குப் பெயர்போனது. 1968 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து இங்கு அரங்கேறும் இசைநாடகங்களைப் பார்க்கும் தீராமோகம் என்னுள் பீறிட்டுப் பாய்ந்தது. எத்தனையோ இசைநாடகங்களையும், காத்தவராயன் சிந்துநடைக்கூத்தையும் பல தடவைகள் பார்த்துள்ளேன். இந்த நாடகங்களே எனது நாடக ஆர்வத்துக்கு காரணமாக அமைந்தன.

மேலும் அருகில் இருந்த "மாதனை"க் கிராமத்தில் சிறந்த இசை நாடகக் கலைஞர்கள் வாழ்ந்தார்கள். மாதனைக் கலாமன்றம், மாதனைக் கலைவாணி மன்றம் என இரண்டு இசைநாடகக் குழுக்களும் இங்கு இருந்தன. இந்தக் கலைஞர்களும் எனது நாடக ஆர்வத்துக்கும், அறிவுக்கும் காரணமாய் அமைந்தனர்.

1976ஆம் ஆண்டில் எமது தும்பளை மேற்கு சனசமூகத்தைப் புனருத்தாரணம் செய்து நடாத்துகையில் எனது உறவினரான திரு.நடராஜா இரகுநாதன் எனக்கு மல்லிகை, கணையாழி போன்ற இலக்கிய சஞ்சிகைகளை அறிமுகப் படுத்தினார். மேலும் நாங்கள் இருவரும் இணைந்து திரு.ந.கணேஸ்வரன் (அமரர்) திரு.வி.விஜயகுமார் ஆகியோரையும் சேர்த்துக் கொண்டு "குயிலோசை" என்ற கையெழுத்துச் சஞ்சிகையை 6 வருடங்கள் நடாத்தினோம். அவ்வேளை எனது சிறுகதை, கவிதை விமர்சனங்கள், ஓவியம் என்பவற்றின் வெளிப்பாட்டிற்கு குயிலோசை சிறப்பான களம் அமைத்துக் கொடுத்தது.

ரஷ்ய நூல்கள் :

ரஷ்யாவின் சிறந்த நூல்கள் மிகக்குறைந்த விலையில் யாழ்ப்பாணத்தில் கிடைத்தன. உலகம் போற்றும் ரஷ்ய எழுத்தாளர்களின் நூல்களை மிக ஆர்வத்துடன் வாசித்தேன். அதேவேளை கால்மார்க்ஸ் லெனின் என்ற பெயர்களுடன் இடதுசாரி சிந்தனைகளும் ஓரளவு அறிமுகமானது.

எனது பாடசாலை நண்பன் திரு.ச.தமிழ்மாறன் பல்வேறு இடங்களில் இருந்த நண்பர்களிடம் பெற்ற புத்தகங்களை எனக்கு வாசிக்கத்தந்தான். விரைவில் வாசித்துவிட்டுக் கொடுத்துவிடுவேன். மேலும் யாழ்ப்பாணத்தில் இருந்து அ.யேசுராசா

வெளியிட்டு வந்த "அலை" என்ற கலை இலக்கிய சஞ்சிகை என்னுள் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

திரு. து.குலசிங்கம் அவர்களுடனான தொடர்பு :

1981ஆம் ஆண்டில் புலோலி கிழக்கைச் சேர்ந்த திரு.து.குலசிங்கம் அவர்களின் நட்பு என்னைப் பரந்து விரிந்த கலை இலக்கிய உலகத்துக்குள் கொண்டு சென்றது. அவ்வேளை இவருடன் நானும் உதவியாளராகச் செயற்பட்டு "யதார்த்தா" கலை இலக்கிய மன்றம் என்ற பெயரில் மாதா மாதம் பௌர்ணமி இலக்கிய ஒன்றுகூடல்களை அவரது வீட்டில் சில வருடங்கள் நடத்தினோம். வடமாராட்சியில் இலக்கிய ஆர்வலர்கள் பலரின் அறிமுகமும் நட்பும் கிடைத்தது. இவரது புத்தகக்களஞ்சியத்தில் இருந்து பல்வேறுவகையான நூல்களும், இந்தியாவில் இருந்துவரும் பல கலையிலக்கியச் சஞ்சிகைகளும் எனக்கு அறிமுகமாயின.

டொக்ரர் எம்.கே.முருகானந்தம், தெணியான், கலாநிதி த.கலாமணி, செ.யோகராசா, குப்பிழான் ஐ.சண்முகலிங்கம், இ.றஞ்சகுமார், எஸ்.கே. விக்கினேஸ்வரன் போன்ற நண்பர்களின் அறிமுகம் யாழ்ப்பாணச் சமூகத்தைச் குறிப்பாக வடமராட்சிச் சமூகத்தையும் விளங்கவைத்ததோடு கலை இலக்கிய அறிவு விசாலிப்புக்கும் உதவினர். டொக்ரர் எம்.கே.முருகானந்தனின் மருத்துவ, விஞ்ஞான எழுத்துக்களும், விஞ்ஞான ஆசிரியரான எனக்கு வாய்பாக அமைந்தன. திரு.சொ.தவராஜா அவர்கள் நாட்டுக்கூத்து வெளிக்கள ஆய்வில் என்னுடன் துணையிருந்து என்னை உற்சாகப்படுத்தினார்.

பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை :

1988 – 1989 என இரண்டு வருடங்கள் கலை இலக்கிய நாடகத்துறையில் எனக்கு வசந்தகாலமாகும். அப்போது இக்கலாசாலை கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையுடன் இணைந்து இருபாலையில் செயற்பட்டது. தமிழ் மன்றத்தின் தலைவராக அவ்வேளை நான் தெரிவு செய்யப்பட்டு இயங்கிய பொழுது கலை இலக்கிய ஒன்றுகூடல்களை அவ்வப்போது நடாத்தி வந்தேன். விஞ்ஞானமன்றத்தின் சார்பாக போதை என்ற தொகுப்பு நூலை வெளியிட்டேன். போதைப்பொருள் பாவனை மிகுந்த சமகாலத்திற்கு இந்நூல் பெரிதும் உதவும். எனவே மீள்பதிப்புச்செய்ய வேண்டும்.

1988இல் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நாடகப்போட்டி வெவ்வேறு கற்கைநெறி வகுப்புக்களுக்கிடையே நடைபெற்றது. "மீண்டும் தொடங்கும் மிடுக்கு" என்ற நாடகத்தை நான் எழுதி நெறிப்படுத்தியிருந்தேன். அந்நாடகம் பலராலும் பாராட்டப்பட்டது. இவ்வேளைதான் தற்போதைய கலாநிதி சி.ஜெயசங்கர், கலாநிதி க.ஶ்ரீகணேசன், கலாநிதி பாக்கியநாதன் அகிலன் போன்ற நண்பர்களையும் கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம், பேராசிரியர் மௌனகுரு, க.சிதம்பரநாதன் போன்ற ஆசான்கள் பலரின் தொடர்பையும் பெற்றுக்கொண்டேன்.

1989இல் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் களப்பயிற்சியுடன் கூடிய சிறுவர் நாடகங்களைத் தயாரித்து பாடநெறி பிரிவுகளுக்கிடையே போட்டியும் நடைபெற்றது. இந்த காலகட்டமே சிறுவர் நாடகங்களைப் பற்றிய ஆரம்ப அறிவும் அனுபவமும் என்னுள் பதிந்துகொண்டது.

பின்னர் 1989இல் வாரயிறுதி நாட்களில் திரு. குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் நாடக அரங்கக்கல்லூரி யாழ்பாண திருமறைக் கலாமன்றத்தில் வாரயிறுதி நாட்களில் நடாத்திய ஒருவருட நாடககளப்பயிற்சியில் பங்குபற்றி பரீட்சையில் சித்தியெய்தி சான்றிதழும் பெற்றுக்கொண்டேன். வட இலங்கை சங்கீத சபையினரின் நாடகமும் அரங்கியல் பரீட்சையில் பிரிவு 5 வரை பரீட்சை எழுதி சித்தியடைந்தேன். இங்கு கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம், பேராசிரியர் சி.மௌனகுரு, கலாநிதி க.சிதம்பரநாதன், பிரான்சிஸ் ஜெனம் ஆகியோர் களப்பயிற்சியை வழங்கினர்.

இதன்பின் சி.ஜெய்சங்கர் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பிரபல பாடசாலைகளில் சிறுவர் நாடகங்களையும், வளர்ந்தோருக்கான நாடகங்களையும் ஒத்திகைகளின் மூலம் அரங்கேற்றி வந்தார். அவரோடு சென்று நாடக ஒத்திகைகளையும் நாடக அரங்கேற்றங்கள் பலவற்றையும் நான் கண்டு இரசித்து நாடக அனுபவங்களைப் பெற்றுக்கொண்டேன்.

1989 குழந்தை ம.சண்முகலிங்கமும் பேராசிரியர் சி.மௌனகுருவும் இணைந்து நெறிப்படுத்திய மகாகவி உருத்திரமூர்த்திம் "பாநாடகமான" புதியதொரு வீடு ஒத்திகைகளை நான்கு மாதங்களாக நான் நேரடியாக கண்டும், கேட்டும் நல்லதொரு அனுபவத்தைப் பெற்றுக்கொண்டேன். இக்காலப்பகுதியில் பேராசிரியர் சி.மௌனகுருவின் மட்டக்களப்பு கூத்து ஆட்டங்களை ஓரளவேனும் அறிந்துகொள்ள முடிந்தது.

அறிவோர் கூடல் நண்பர்கள்:

1990ஆம் ஆண்டில் டொக்ரர் எம்.கே.முருகானந்தம், திரு.து.குலசிங்கம் ஆகியோருடன் நானும் இணைந்து அறிவோர்கூடல் நண்பர்களின் ஒன்றுகூடல்களை மாதாமாதம் நடத்திவந்தோம். பல்வேறு துறைசார்ந்த வல்லுநர்களை உரையாற்றவைத்து பின் உரையாற்றிய விடயத்தைப் பற்றிய கலந்துரையாடல் மூலம் மேலும் அறிவும் தெளிவும் பெற்றுக்கொள்ள முடிந்தது. 1996ஆம் ஆண்டு வரை இந்த ஒன்றுகூடல் சிறப்பாக நடைபெற்றது.

ஹாட்லிக் கல்லூரி, ஞானசம்பந்தர் கலைமன்றம்

01.01.1990 இல் நான் ஹாட்லிக் கல்லூரிக்கு நியமனம் பெற்று வந்தவுடன் 150 வது ஆண்டு விழாவுக்கான நாடகமாக "ஆச்சி சுட்ட வடை" என்ற சிறுவர் நவீன நாடகத்தை

நெறியாள்கை செய்தேன். இதன் எழுத்துரு குழந்தை ம.சண்முகலிங்கத்தினுடையதாகும். ஹாட்லிக்கல்லூரியில் இன்றுவரை 40 இற்கு மேற்பட்ட நாடகங்களை அரங்கேற்றி யுள்ளேன். குழந்தை ம.சண்முகலிங்கம், பேராசிரியர் சி.மௌனகுரு ஆகியோரின் நாடகங்களுடன், நான் எழுதியநாடகங்கள் பலவற்றையும் நெறிப்படுத்தினே.

1991 – 1996 காலப்பகுதியில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் வெளிவாரி பட்டப்படிப்பில் நாடகமும் அரங்கியலை சிறப்புப்பாடமாக பயின்று சிறப்புச் சித்தியெய்தினேன். கலாநிதி சி.ஜெயசங்கர் நெறியாள்கைசெய்த குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் நாடகங்களையும், கலாநிதி. கந்தையா ஸ்ரீகணேசன் நெறிப்படுத்திய, பேராசிரியர் சி.மௌனகுருவின் நாடகங்களையும் பார்த்து அனுபவங்களைப் பெற்றேன்.

ஹாட்லிக் கல்லூரியில் மேடையேறிய பல நாடகங்ளை ஞானசம்பந்தர் கலை மன்றத்திலும் வருடாவருடம் மேடையேற்றினேன். இம்மன்றத்தில் சிறந்த பல நடிகர்களை உருவாக்க முடிந்தமை மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

1996ஆம் ஆண்டு ஹாட்லிக்கல்லூரியில் நாடகமும் அரங்கியலும் பாடநெறியை முதன்முதலாக ஆரம்பித்தேன். 2008ஆம் ஆண்டு வரை நாடகம் அரங்கியல் பாடத்தைக் கற்பித்தேன். இவ்வேளை சகோதரப் பாடசாலையான மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையிலும் நாடகமும் அரங்கியலும் பாடத்தைத் தொடங்கினேன். மேற்படி இரண்டு கல்லூரியிலும் பல்வேறு மன்றங்களின் நாடகமுயற்சிகளுக்கு துணையாக இருந்தேன்.

வடமராட்சியில் 10 இற்கு மேற்பட்ட பாடசாலைகளில் ஏராளமான சிறுவர் நாடகங்களைப் பழக்கி அரங்கேற்றியுள்ளேன். சிறுவர் நாடக போட்டிகளில் பங்குபெற வாய்ப்பளித்தேன். அதேவேளை வடக்கு மாகாணமட்ட சிறுவர் நாடக போட்டிகளுக்கு நடுவராக யாழ்ப்பாணம், உரும்பிராய், கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களுக்கு சென்று சிறந்த அனுபவங்களைப் பெற்றுக்கொண்டேன்.

1994ஆம் ஆண்டு நண்பர் ஆர்.எஸ். ஆனந்தன் அவர்களுடன் இணைந்து "செட்டி வர்த்தகன்" என்ற நாட்டுக்கூத்தை அறிவோர்கூடலில் மூன்றாவது ஆண்டு விழாவில் களரி ஏற்றினோம். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலிருந்து பேராசிரியர் கா.சிவத்தம்பி, குழந்தை ம.சண்முகலிங்கம், கலாநிதி க.சிதம்பரநாதன், சி.ஜெயசங்கர், ஸ்ரீகணேசன் முதலாம் நாடக அரங்கியல் விரிவுரையாளர்களும் மாணவர்களும் தனித்த பேருந்து ஒன்றில் வந்திருந்தனர். இவர்களுடன் நுண்கலைத்துறை விரிவுரையாளர்களும் மாணவர்களும் டொமினிக்ஜீவா, செங்கையாழியான் போன்ற இலக்கிய கருத்தாக்களும் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

1995, 1996 காலப்பகுதியில் விலாசக்கூத்தை அமரசிங்கம் குழுவினரோடு தயாரித்து புற்றளைப் பிள்ளையார் கோயிலில் அரங்கேற்றினேன். சிந்தாமணி, பாஞ்சாலி சபதம், போன்ற விலாசக்கூத்துகள் குறிப்பிடத்தக்கவை.

பாரம்பரிய நாடக தேடுதலில் "நாட்டை" என்ற பருத்தித்துறை நாட்டுக்கூத்தான "செட்டி வர்த்தகனை" திரு.ஆர்.எஸ். ஆனந்தனின் உதவியுடன் 1994இல் களரி ஏற்றியதுமட்டுமன்றி வடமராட்சியின் முன்னாள் நாட்டுக்கூத்தின் கூத்தர்களையும் அண்ணாவிமார்களையும் இந்த நாட்டுக்கூத்தை அறிந்தோர்களையும் நேர்முகங்கண்டு தொகுத்துப்பெற்ற விடயங்களை "வடமராட்சியில் நாட்டுக்கூத்து" என்ற நூலாக 2006ஆம் ஆண்டு வெளியிட்டேன். இந்நூல் பல்வேறு பரிசில்களையும் விருதுகளையும் எனக்குப் பெற்றுக்கொடுத்தன. எதிர்வரும் ஆண்டுகளில் "வடமராட்சியில் விலாசக்கூத்து" என்ற நூலை வெளியிட உத்தேசியுள்ளேன்.

பல்வேறு கிராமங்கள் பற்றிய வரலாறுகளையும், பண்பாட்டையும் முதியவர்களுடனான நேர்முகம் மூலமான தகவல்களைப்பெற்று நூலாக்கம் செய்து வருகிறேன். இந்தவகையில் 2001ஆம் ஆண்டு தும்பளை கிராமம் பற்றிய நூல் ஒன்றை "ஊரும் வாழ்வும்" என்ற பெயரில் வெளியீடு செய்தேன். 2012 இல் "பருத்தித்துறையூராம்" என்ற நூலையும் வெளியிட்டேன். இந்நூலை இலங்கையில் உள்ளவர்கள் மட்டுமன்றி புலம்பெயர்நாடுகளில் வசிக்கும் பருத்தித்துறை மக்கள் தாராளமாக வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

எமது மரபுரிமைகளை அதாவது முதுசங்களை இயன்றளவு பேணிப் பாதுகாக்கவும், ஆவணப்படுதிக்கொண்டு வருகின்றேன். மரபுரிமைகள் பற்றிய கட்டுரையொன்றை பருத்தித்துறை பிரதேசசெயலக மலரில் எழுதியுமுள்ளேன். பருத்தித்துறை தெருமூடிமட புனரமைப்பிலும் என்னாலான பணிகளை செய்துகொண்டு வருகின்றேன். மேலும் மரபுரிமைக் கட்டிடங்கள் மற்றும் மரபுரிமைச் சொத்துக்கள் பற்றிய பாதுகாப்பும் ஆவணப்படுத்தலும் தொடர்ந்து வரும் ஆண்டுகளில் செய்வதற்கு உத்தேசித்துள்ளேன்.

உலக சுற்றுச்சூழல் மாசடைந்து செல்வதும், பச்சை வீட்டு விளைவு வாயுக்களின் அதிகரிப்புப்பற்றி குறிப்பிட்டளவு அறிந்து வைத்திருக்கிறேன். இந்த வகையில் சுற்றுச்சூழலியல், இயற்கை மரபுரிமை நூலாக "கண்டல் காடுகள்" என்ற நூலை 2017ஆம் ஆண்டில் எழுதி 2018 இல் வெளியிட்டேன். இவ்வாறு பல்வேறு துறைகளிலும் என்னால் இயன்றளவு தனித்தும், கூட்டாகவும் செயற்பட்டு எதிர்காலத்திற்கு நிச்சயமாக வளம் சேர்ப்பேன் என்பது எனது அசைக்கமுடியாத நம்பிக்கையாகும்.

திரு.பா.இரகுவரன்

# நன்றிகள்

ஹாட்லிக்கல்லூரியில் 1990 முதல் இன்றுவரை (2019) சேவையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள்.

நாடகங்களில் நடித்தும் இசைக்கருவிகளை வாசித்தும் பேருதவியாக இருந்த மாணவர்கள்.

1990களின் முற்பகுதியில் இசையமைப்பு வழங்கிய செல்வி சறோஜா ஆசிரியர் மற்றும் செல்வன் ராகவன் அவர்கள்.

கடந்த 20 ஆண்டுகளாக எனது நாடகங்களுக்கு இசையமைத்தும் பாடல் பாடியும் உதவும் திரு.த.பார்த்தீபன் ஆசிரியர் அவர்கள்.

ஆசிரியர் தினத்தில் ஆசிரியதின நாடகங்களில் நடித்த ஆசிரியர்கள், ஆசிரியைகள்.

எனது நூல்களுக்கு சிறப்பான முறையில் ஓவியம் வரைந்து உதவும் திரு.து.ஜெதீபன் ஆசிரியர்.

அரங்கு அமைப்பில் ஈடுபடும் மாணவர்கள்.

பார்வையாளராக கடந்த 30 வருடங்களாக அமைந்த ஹாட்லிக்கல்லூரி மாணவர்கள், மெதடிஸ்த உயர்தர பாடசாலை ஆசிரியர், மாணவிகள். குறிப்பாக அதிபராக இருந்த திருமதி.செல்வமலர் சுந்தரேசன் அவர்கள்.

ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் காப்பாளர் கிளி அக்கா என்கின்ற திருமதி.இ.யோகறஞ்சிதம், மற்றும் நிர்வாகக் குழுவினர், நடிகர்கள், பார்வையாளர்கள்.


சிறந்தமுறையில் ஒலி அமைப்பையும் ஒளி அமைப்பையும் மேற்கொண்டுவரும் திரு.தம்பி அண்ணாவின் வாணி சவுண்ட் சேவிஸ்.

கடந்த இரு வருடங்களுக்கு முன்பு பாடசாலைகளில் நாடகத்துறை சேவைக்காக பாராட்டுக்கள், கௌரவிப்புக்கள், விருதுவழங்கல் செய்த ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர் (வடமராட்சி), திரு.சி.நந்தகுமார் அவர்கள் மற்றும் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள்.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர்களாக சேவையாற்றிய திரு.க.ஜெயசீலன், திரு.ஆ.சிறி ஆகியோர்கள்.

கலாசார உத்தியோகத்தர் செல்வி செல்வசுகுணா (வடமராட்சி கிழக்கு), திரு.சிவஞானசீலன் (பருத்தித்துறை)

இந்நூலை சிறப்பான முறையில் அச்சாக்கம் செய்ய உதவிய தீபன் பதிப்பக உரிமையாளர் சி.தீபானந் அவர்கள் மற்றும் ஊழியர்கள்.




ஏறுவெயில்

# ஏறுவெயில்

## ஆசிரியர் தின நாடகம்
**2016**


### பாத்திரங்கள்

01. இராசதுரை (Raja Sir)
02. அதிபர்
03. ஆசிரியர் T1
04. ஆசிரியர் T2
05. ஆசிரியர் T3
06. ஆசிரியர் T4
07. காமினி (சாப்பாட்டுக்கடை முதலாளி)
08. கணேஸ் (லூஸ் கணேஸ் - மூளை வலுக்குறைந்த இளைஞன்)
09. மாணவன் 1
10. மாணவன் 2
11. மாணவன் 3
12. மாணவன் 4
13. மாணவன் 5

## காட்சி - 01

பாடல்

இனிதென ஆவது
குருவாய் ஆவது
இனிதென ஆவது
குருவின் பீடம்
தரணியில் சிறந்தது
பயன்வேண்டாத
ஆசிரியத்துவம்
நனி சிறந்தது புவிதனில்
குருவெனும் பேறு//....




(பாடல் முடிந்த பின் சீன் திறக்கப்படும்)

{இராஜதுரை (Raja Sir) மாஸ்ரர் அந்த கிராமப்புற School இற்கு இடமாற்றம் பெற்று அந்த ஊருக்கு முதன்முதலாக வருகிறார்}

Raja Sir - என்ரை, பெயர் இராஜதுரை Raja Sir எண்டு சுருக்கமாகச் சொல்லுவினம்.

இந்த ஊர் School இற்கு இடமாற்றம் கிடைச்சிருக்கு. முதன் முதலாக இந்த ஊருக்கு இப்பதான் வந்திருக்கிறன்.

இன்னுமொரு முக்கிய விசயம் எனக்கு அடிக்கடி இடமாற்றம் கிடைக்கும். தண்ணியில்லாக் காடு எண்டு சொல்லுவினமே. சரியான கஷ்டப் பிரதேசங்களுக்கு இடமாற்றங்கள் அடிக்கடி வரும்.......

கணேஸ் - வந்தேனே.... ஹேய்

பாடல்

வந்தேனே மகாராஜன் வந்தேனே.....
வந்தேனே கணேசராஜன் வந்தேனே.
கணேசராஜன்!!!
தாம் தீம் தத்தித் தரிகிணதோம்

(ராஜா சேரைப் பார்த்துவிட்டு)
அட...... புது ஆள் வேலைக்கு வந்து இருக்கிறார் போலை!
ஐயா..... நான் உங்களை ஒரு நாளும்
காணேல்லை...... நீங்கள் ஊருக்குப் புதுசே?

Raja Sir - நான் இண்டைக்குத்தான் முதன்முதலா
இந்த ஊருக்கு வாறன்.
நீர் என்னை இதற்குமுன் கண்டிருக்க மாட்டீர்.....

கணேஸ் - பாத்தியளே பாத்தியளே, ஆள் ஊருக்கு புதுசு எண்டு
நான் சொன்னது சரிதானே?
நான் சரியான கெட்டிக்காரன்.... என்ன?

Raja - ஓ..... உம்மைப் பாத்த உடனை
தெரிஞ்சுகொண்டன் - நீர் சரியான
கெட்டிக்காரன் என்று....

கணேஸ் - அது..... அச்சா.... அச்சா...
உண்மை.... உண்மை
உங்களுக்கும் தெரியுது.
காமினி முதலாளிக்கும் தெரியுது.
மற்றாக்களுக்கு என்னைப்
பற்றி விளங்குதில்லை.
எல்லாரும் சரியான மொக்குகள்.

காமினி - மோடையா....
ஹரி மோடையா....

Raja Sir - தம்பி உங்கடை பெயர் என்ன?

கணேஸ் - கணேசராஜா
லூஸ் கணேஸ் எண்டால் தான்
எல்லாருக்கும் தெரியும்.

Raja Sir - லூசோ...... ஆர் நீரோ?
அப்பிடி இல்லை....
நீர் மிகவும் தெளிவான ஆள்.....

கணேஸ் - நீங்கள் ஆரையா......?
எங்கை போறியள்?

Raja Sir - நான் ஒரு ஆசிரியர்
இடமாற்றம் பெற்று இந்த ஊரிலை உள்ள
School இற்கு படிப்பிக்க வந்திருக்கிறன்.

| | |
|---|---|
| கணேஸ் | - நீங்கள் Sir ஓ..... (விழுந்து கும்பிடல்) |
| Raja Sir | - நடுத்தெருவிலை இப்பிடி விழுந்து... கூடாது<br>எழும்புங்கோ கணேஸ்.... |
| கணேஸ் | - எனக்கு ஆசிரியர்மாரை நல்லா<br>பிடிக்கும்<br>படிப்பிக்கிற தெய்வமெல்லே...<br>எனக்கும் ஆசிரியராவர விருப்பம்தான்<br>ஆனால் நான் படிக்கேயில்லை..<br>படிக்கேலாமல் இருக்கு.<br>எல்லாம் குழப்பமா இருக்கு. |
| Raja Sir | - குழப்பம் எங்க இருக்குதோ<br>அங்கை தான் தெளிவு ஏற்படும்.<br>அமைதி ஏற்படும்.<br>சாந்தி உண்டாகும். |
| கணேஸ் | - Sir நீங்கள் என்ன பாடம்<br>படிப்பிக்கிறனீங்கள்? |
| Raja Sir | - Maths..... |
| கணேஸ் | - Maths ஓ.....<br>அது தானே என்ரை மர மண்டேக்கை<br>துப்பரவா ஏறேல்லை.<br>Maths தெரிஞ்சால் கெட்டிக்காரராம்<br>என்ன Sir....? |
| Raja Sir | - அப்பிடி நான் சொல்லமாட்டன். |
| கணேஸ் | - பின்னை எப்பிடிச் சொல்லுவியள்? |
| Raja Sir | - ஆளுக்கு ஆள் வெவ்வேறை ஆற்றல், ஆளுமை இருக்கு<br>உலகத்திலை தெரிய வேண்டியதுகள் கனக்க இருக்கு... |
| கணேஸ் | - அச்சா... அச்சா....<br>அங்கை.... அது காமினி<br>முதலாளி<br>இவர் கணித சேர் எங்கட School க்கு புதுசா வந்திருக்கிறார். |
| காமினி | - "ஆய்போவன்" - வணக்கம் Sir |
| Raja Sir | - வணக்கம் சகோதரா.... |

காமினி - நீங்க எந்த இடம் Sir?

Raja Sir - யாழ்ப்பாணம்
எனக்கு நல்லா சிங்களம் தெரியும்.
சிங்களப் பகுதிகளிலையும் வேலை செய்திருக்கிறன்.

காமினி - மிச்சம் நல்லம் Sir
ஒரு சைக்கில் தரவா....?
School க்கு கொண்டு போங்க.

Raja Sir - கேட்டதற்கு நன்றி முதலாளி. ஆனால்
எனக்கு சைக்கில் வேண்டாம்.
நடக்கிறது உடம்புக்கு நல்லது.
தினசரி மாலை நேரம்
நான் Walking போறனான்.

காமினி - நல்லம்... நல்லம் Sir
அந்த School மற்ற Sir மார்களுக்கும்
நான் தான்
சாப்பாடு அனுப்புறது.
உங்களுக்கும் அனுப்பட்டா Sir?


Raja Sir - கட்டாயம்... அனுப்பிவிடுங்கோ...

## காட்சி - 02

பாடல்

ஓடிப்படி
தேடிப்படி
நாடிப்படி....
நற்குருவை இனம் காணல்
நல்வாழ்வின் பெரும் கொடையன்றோ

பரீட்சைக்காலத்தில்
பக்குவமாய் ஓய்வெடு
இடையிடையே சிரித்து மகிழ்
உணவில் கவனம்
உடலிலும் கவனம்
யோகா செய்திரு
மூச்சுப்பயிற்சி
முடிவு வரை தொடர்க....




(ஆசிரியர்கள் பாட வேளையில் Staff room க்குள் இருந்து கடதாசி (Cards) விளையாடுகின்றார்கள்)

கம்மாரிஸ்.... ஹே..... ஹே......
வெற்றி.... வெற்றி.....
இன்னுமொரு றவுண்ட் விளையாடுவம்.
வடிவா சவள் பண்ணு
போடு.....
துரும்பு.....
வெட்டு.....
எடுத்துவை......
கம்மாரிஸ்.... ஹே..... ஹே.....

(Raja Sir கணேசுடன் School இற்குள் வருகிறார். மாணவர்கள் சூழ்ந்து கொள்கின்றனர்)

மாணவன் - ஐயா நீங்கள் ஆர்....?
ஊருக்குப் புதுசே.....?

கணேஸ் - அவர், ஊருக்குப்புதிசுதான். ஆனால் ஆள் பழசு.

மாணவன் - கொஞ்ச நேரம் Foot ball விளையாடுவோம் வாறியளே.....?

கணேஸ் - டேய் அவர் புதுசாவந்திருக்கிற Sir அடா
(மாணவர்கள் ஒடுகின்றனர்)

கணேஸ் - ஓடி ஒழிக்கிறதிலை எங்கடை பெடியள் கெட்டிக்காரங்கள்.

Raja Sir - பாட நேரத்திலை மாணவர்கள் எல்லாரும் விளையாடிக்கொண்டிருக்கினம். என்ன இது....?

கணேஸ் - இஞ்சை பள்ளிக்கூடத்துக்கு வாறது ஒண்டாச் சேர்த்து விளையாடத்தானே Sir.

Raja Sir - கணேஸ் பகிடி விடாதையுங்கோ. உங்களுக்கு காரணம் விளங்கும்.

ஆசிரியர்கள் - வெற்றி...... வெற்றி......

எங்களை வெல்லேலாது. எதிர்கிறவர் கடைசியிலை தோல்விதான்.

கணேஸ் - Principal Sir இஞ்சை வாங்கோ
புது Sir வந்திருக்கிறார்.
(Principal வருகிறார்)


Raja Sir - இந்தாங்கோ Sir Appointment letter.

அதிபர் - வாழ்த்துக்கள், சந்தோசம்
கைகுடுங்கோ.....

Raja Sir - Sorry Sir நான் கைகுடுக்கிறதில்லை.
வணக்கத்தைத் தெரிவிக்கிறன் Sir.

அதிபர் - வணக்கம், வணக்கம்
அது நல்ல முறை....

ஆசிரியர்கள் 1 - வில்லங்கமான கேஸ் போலயிருக்கு.
2 - வந்த உடனையே முரண்டு பிடிக்குது.
3 - தட்டி நிமித்திப் போடலாம்....




அதிபர் - Sir மார் இஞ்சை ஒருக்கா வாங்கோ (வருகின்றனர்)
புது சேர்... வந்திருக்கிறார்.
கணிதமும்
ஆங்கிலமும் படிப்பிப்பார்.
பெயர் இராசதுரை
Raja Sir என்று கூப்பிடலாம்.

Raja Sir - வணக்கம்...

ஆசிரியர்கள் - வணக்கம்... வணக்கம்
அப்ப இனியென்ன கவலை.....?
School கொடிகட்டிப் பறக்கப்போகுது


அதிபர் - முதல்லை Sign பண்ணுங்கோ Sir.
பக்கத்திலை Quarters இருக்கு Bag க்கை வைச்சிட்டு படிப்பிக்க ஆயுத்தமா வாருமன். நான் Time Table போட்டு வைக்கிறன்.

Raja Sir - நன்றி Sir
கணேஸ், உங்களுக்கும் நன்றி
போட்டுவாங்கோ....

ஆசிரியர்கள் - வந்ததும் வராததுமா புது Sir இந்த லூசனோடை Friend ஆயிட்டார்.

கணேஸ் - Sir... நான் லூஸ்தான் ஆனாலும் லூசா இல்லை.
நீங்கள் லூஸ் இல்லை.
ஆனால் லூசா இருக்கிறியள்.
நான் போட்டுவாறன்....

(Raja Sir Quarters க்குச் செல்லுகிறார். ஏனைய ஆசிரியர்கள் Staff room க்குச் செல்கின்றனர்)





(Raja Sir Quaters க்குச் செல்கிறார்)

## காட்சி - 03

(மாணவர்கள் வகுப்பில் இல்லை. வெளியில் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்)

Raja Sir - வகுப்பிலை ஒருத்தரையும் காணேல்லை. இப்பிடி விடக்கூடாது.
பாடநேரம் பாடம் நடக்கவேணும்.
(Raja Sir, Principal லின் Office க்கு செல்கிறார்)

Raja Sir - Sir Class சிலை மாணவர் ஒருவரையும் காணேல்லை.



அதிபர் - ஒருத்தரையும் காணேல்லையோ ஏன்... அங்கை பாருங்கோ விளையாடிக்கொண்டிருக்கிறாங்கள்.

Raja - Sir நான் Class Room லை ஒருத்தரையும் காணேல்லை எண்டுதான் சொல்லுறன் Sir.

அதிபர் - அட...... அதை விடுங்கோ மாணவர் வகுப்பிலை நிண்டால் படிப்பிக்கிறது, இல்லாட்டில் நீங்கள் பேசாமல் போறதுதானே?

Raja Sir - இது நீதி இல்லை Sir.

அதிபர் - என்ன காணும் வந்தண்டே நீதி, அநீதி பற்றி எனக்கு விளங்கப்படுத்த வந்திட்டீர்? இஞ்சை இதுதான் நீதி. இதுதான் நடைமுறை.
(Raja Sir அதிர்ச்சியடைந்து நிற்கிறார்)

கணேஸ் - நீதி, அநீதி அவரவர் உணர்வோடை கலந்திருக்க வேணும்.
செய்யிற தொழிலுக்கு சம்பளம் எடுக்கிறது நீதி.
செய்யாத தொழிலுக்கு சம்பளம் எடுக்கிறது அநீதி - சமூகவிரோதச் செயற்பாடு.... உலகத்திலை எல்லாரும் லூஸ் கேஸ் போலைதான் இருக்கு..... அநீதிக்கு இடமளிக்கக்கூடாது. சொல்லிப்போட்டன்....
எனக்கு கோபம் வந்துதெண்டால்... தெரியும்தானே?

காமினி - இண்டைக்கி காலமையிலை இருந்து ஒருத்தரும் Hotel லுக்கு வரேல்லை. என்ன வாழ்க்கையடா இது...
Hotel க்கு ஆட்கள் வந்தால் தானே தொழில் நடக்கும்....
பாப்பம்.... பாப்பம்.....

Raja Sir - சம்பளம் தருவியள்தானே Sir?

அதிபர் - ஓ...... 20ம் திகதி உடனை எடுத்துத்தருவன்.

Raja Sir - எடுக்கிற சம்பளத்துக்கு ஓரளவெண்டாலும் விசுவாசமா தொழில் செய்ய வேணும். சும்மா இருந்து சம்பளமெடுக்க மனச்சாட்சி இடம் கொடாது Sir.

அதிபர் - சும்மா ஏன் இருப்பான். அங்கை பாருங்கோ (Cards விளையாடும் ஆசிரியர்களை காட்டுகிறார்)

ஆசிரியர்கள் - போடு Jack. ஆளை வெட்டு, இந்தா துரும்பாலை வெட்டிட்டன் வெட்டு, அடி (Cards - கடதாசி விளையாடுகிறார்கள்)

Raja Sir - Sorry Sir அது என்னாலை ஏலாது....
பிள்ளைகள் 11ம் வகுப்பு ஆட்கள் உடனே வாங்கோ...

(Raja Sir விளையாடிக்கொண்டிருக்கும் மாணவர்களைக் கூப்பிடுகிறார்)
மாணவர் வருதல்
பாடம் படிப்பித்தல் - (இவ்வேளை வகுப்பறை கற்றல் கற்பித்தல் நிகழ்வுகளை ஊமமாய் வெளிப்படுத்தலாம்)

**பாடல்**

கடமை, கடமை, கடமை
கடமையைச் செய்
உடையது நாடி ஓடி வரும்
கடமை தவறுதல் - பெரும்
மடமை என்றே தெளி
நாளும், கோளும்
நம் வசமாகும்
மண்ணும் விண்ணும்
கைவசம் சேரும்
உள்ளொளி பெருகிடும்
உண்மையின் பெருக்கில்
கடமையின் வழிநில்.

## காட்சி - 04

1). அதிபர்
2 - 5 (T1, T2, T3, T4) ஆசிரியர்கள்
6). கணேஸ்
7). காமினி

T1 - புதுசா வந்தவர் பிள்ளைகளை நல்லா மடக்கி வைத்திருக்கிறார்.

T2 - வசியம்... வசியம் வைச்சிட்டார் போலை இருக்கு

T3 - மாணவர்களைக் கொண்டு பூமரங்களுக்குத் தண்ணி ஊத்துறார், பள்ளிக்கூட வேலியை அடைக்கிறார்.

T4 - புதிசு, புதிசா மரங்கள் நடுகிறார். தான் Principal எண்ட நினைப்பு

6). - எங்கடை Principal லிட்டை Raja Sir பற்றி போட்டுக்குடுக்க வேணும்.

கணேஸ் - அடி சக்கை....
அம்மன் கோயில் புக்கை
விஷ ஊசி ஏத்துறாங்கள்.
தலை குழம்பப் போகுது

குழப்பம் வந்தால்தானே தெளிவுவரும்
பாப்பம், பாப்பம்...

காமினி - ஒருத்தனும் நல்லா இருக்கக்கூடாது
நான் மட்டும் நல்லா இருக்கணும்.
நாங்களும் வேலை செய்யிறது இல்ல
மற்றாக்களும் செய்ய விடுறது இல்ல
உலகம் நாறி மணக்கட்டும்.
எனக்கு வியாபாரம் நடந்தாச் சரி.

T1 - கணேஸ் இஞ்சை ஒருக்கா வா

கணேஸ் - என்ன Sir ?

T2 - வாற கிழமை நாங்கள் ஊருக்குப்போறம்

T3 - பயறு, மரக்கறிகள் மலிவா வாங்கித்தா என்ன




கணேஸ் - பயறு எத்தினை கிலோ வேணும் Sir.....?

T2 - ஆளுக்கு 10, 10 கிலோவா 30 கிலோ

கணேஸ் - ஊராக்களிட்டை மலிவா வாங்கித்தாறன் Sir.

T3 - குரக்கன் அதிலையும் ஐவ்வஞ்சு கிலோ வாங்கித்தா

கணேஸ் - Sir எனக்குக் கொமிசன் காசு கூட்டித்தரவேணும்.

T1 - அதுக்கென்ன தரலாம்...

காமினி - எல்லாமே பிஸ்னஸ்தான்.
கடவுளோடை பிஸ்னஸ்.
அம்மாவோடை பிஸ்னஸ்.
பெண்சாதி யோடை பிஸ்னஸ்.
பிள்ளைகளோட பிஸ்னஸ்.
உலகம் இயங்கிறதே பிஸ்னஸிலை தான்.

கணேஸ் - பிஸ்னஸ் இல்லாட்டில்
சூரியன், சந்திரன், பூமி, நட்சத்திரங்களெல்லாம் வேலை விட்டிடும்.
இயங்கமாட்டாது.

இதுதான் உண்மை....
நல்லா யோசிச்சுப் பார்த்தால் எல்லாம் விளங்கும்.

## காட்சி - 05

இடம் - அதிபர் அலுவலகம், T1, T2, T3, T4 அதிபர் அலுவலகத்திற்குள் வருகின்றனர்.

T1 - என்ன Sir கூப்பிட்டனீங்களாம்?

அதிபர் - இந்த School க்கு நான் Principal லோ? அல்லது Raja Sir, Principal லோ?

T2 - நீங்கள் தான் Sir

அதிபர் - இஞ்சை நடக்கிறதுகளைப் பார்த்தால் அப்பிடித் தெரியேல்லை.

T3 - எனக்கும் அப்படித்தான் Sir தெரியுது. Raja Sir தான் அதிபர் போலச் செயல்படுகிறார். பாத்தியளோ பாத்தியளோ அதுதான் கேட்டனான்.

T1 - Raja Sir ஐ மாணவர்களெல்லாம் சுத்திச் சுத்தி வருகுதுகள்

T2 - தாய், தகப்பன்மார் Raja Sir ஐ வீட்டுக்குக் கூப்பிட்டு சாப்பாடு கொடுக்கினம்.

T3 - Raja Sir பின்னேரத்திலை Maths பாடத்தோடை ஆங்கிலத்தையும் காசு வாங்காமல் ஓசியா சொல்லிக் கொடுக்கிறார்.

அதிபர் - ஊராக்கள் எல்லாம் அவரைத்தான் தூக்கிப்பிடிக்கிறாங்கள். Raja Sir, Principal ஆக இருந்தால் தங்கடை பிள்ளைகளும், ஊரும் முன்னேறுமாம்....

T1 - உந்தக் கதைகளுக்கு விடக்கூடாது Sir

கணேஸ் - தொழில்லை நேர்மை இருக்கவேணும் பாருங்கோ. தாறு மாறாக தொழில் செய்தால் பலனும் அப்பிடித்தான் கிடைக்கும்.

காமினி - தொழில்லை சுத்துமாத்து இருக்கக்கூடாது. தொழில் செய்யிறது பிழைச்சால் வாழ்க்கையே பிழைச்சுப்போடும்.

T2 - உவரை இப்பிடியே விடக்கூடாது.

T3 - விடக்கூடாது.

T1 - அவர் பெரிய ஆளே?

T2 - அது தானே...?

T3 - நாங்கள் ஆரெண்டு காட்டவேணும்

அதிபர் - இஞ்சை கிட்டவாங்கோ
(காதுக்குள் மெதுவாகச் சொல்லுகிறார்)

T1 - அப்பிடித்தான் செய்யவேணும்.

T2 - இரண்டு, மூண்டு நாளுக்கை செய்ய வேணும்.

கணேஸ் - நாங்கள் ஆரெண்டு காட்டுற இடத்திலத்தான் காட்ட வேணும்.
மீன் பிடிக்கிறவன் கடலுக்குள்ளை காட்ட வேணும்.
தோட்டக்காரன் நிலத்திலைகாட்ட வேணும்.
வாத்தியார்..... ஹா..... ஹா....
அதை விட்டிட்டு சூரியனுக்கும், சந்திரனுக்கும், நட்சத்திரங்களுக்கும் நாங்கள் ஆரெண்டு காட்டப்
போறது வீண்வேலை பாருங்கோ..

காமினி - கடை வைத்திருக்கிறவன் வாடிக்கையாளரின்ரை நம்பிக்கைப் பெற வேணும்.
- இந்த ஊரிலை இருக்கிற சிங்கள ஆக்கள் மட்டுமில்ல, தமிழ், முஸ்லிம் ஆக்களும் என்ரை கடையிலதான் வாடிக்கையாளராக இருக்கினம்
தொழில் நேர்மை மிச்சம் முக்கியம் பாருங்கோ...

## காட்சி - 06

(Raja Sir விடுமுறைக்கு வீட்டுக்குச் செல்கிறார்.)

மாணவர்

1 - Sir நீங்கள் ஊருக்குப் போறீங்களாம் அப்பா தந்து விட்டவர்.
2 - வீட்டிலை தந்து விட்டவினம்
3 - இந்தாங்கோ Sir
4 - இது எங்கடை வீட்டாலை தந்தவினம்

Raja Sir - ஐயோ இதெல்லாம் எனக்கு ஏன்?
நான் கேட்டனானே?
எனக்கு வேண்டாம்.


மாணவர்

1 - மறுக்காதையுங்கோ Sir, வீட்டிலை கவலைப்படுவினம்.

2 - ஊருக்கு போட்டு கெதியா வாங்கோ Sir (இதைப்பார்த்து ஏனைய ஆசிரியர் பொறாமை கொள்ளல்)

3 - போட்டு வாங்கோ Sir.


Raja Sir - (நடந்து செல்கிறார்... அவர்மீது தாக்குதல் இடம்பெறுகிறது)
ஆ அடியாதையுங்கோ...
ஐயோ... அம்மா...
ஆ...
காமினி கொட்டனுடன் ஓடிவருகின்றான்.




காமினி - அடோய்.... ஆரடா.....
பண்டிங்களா!
(கொட்டனால் அடித்துத்துரத்துகின்றான்)

கணேஸ் - உண்மைக்கும், நேர்மைக்கும் பின்னாலை ஏதோ ஒரு சக்தி இருக்குது. அது எந்நாளும் காப்பாற்றும். நீங்கள் பயணத்தைத் தொடருங்கோ Sir.

*** முற்றும் ***




பயணம்

# பயணம்

## கல்லூரி தினம், பரிசளிப்பு விழா நாடகம்
2007

பாத்திரங்கள்

01. கந்தையா - முதியவர் (வயது 62)

02. கந்தையாவின் மனைவி

03. சிவராசா - கந்தையா தம்பதிகளின் இறந்துபோன ஒரே மகன்

04. கனகு (கனகசபை) - நடுத்தர வயது (56)

05. மயிலர் (மயில்வாகனம்) நடுத்தர வயது (58)

06. மாணவர்கள் 4, 5 பேர்

07. இளைஞன்

08. பஸ் சாரதி

09. பஸ் நடத்துநர்

10. பொது மக்கள் சிலர்

மேடையில் அங்கும் இங்கும் சைக்கிள்கள், மோட்டார்சைக்கிள்கள் ஓடித்திரிகின்றன. மனிதர்கள் இந்த வாகனங்களுக்குள் சிக்காமல் கிளித்தட்டு விளையாடுவது போல தப்பியும், விழுந்தும்... பொதுமக்கள் நடமாடுகின்றனர்

பாடல்

பயணம்.... பயணம்
பயணம்.... பயணம்


கருவறை தொடங்கிய பயணம்
கல்லறை தேடிடும் பயணம்

வாழ்வினை முடித்திடப் பயணம்
வசந்தத்தை இழந்திடப் பயணம்

(இவ்வேளை ஒருவர் குறுக்காக ஓடிவர விபத்திலிருந்து மயிரிழையில் தப்புதல்)

விதிகளை மீறிய பயணம்
மதியின் பேதமைப் பயணம்

இறைவன் வகுத்த பயணம்
மனிதன் விதித்த பயணம்




மேற்படி பாடல் பாடப்பட்டிருக்கும் போது ஒருவர் (கந்தையா) தனது மனைவியுடன் மிக்க சோகத்துடன் தளர்நடை நடந்து வந்து வீதியின் அருகில் உள்ள - மைல்கல்லுக்கு (கல்லறை) மாலை சூட்டிவிட்டு இருவரும் அழுதபடி இருத்தல்.

தாய் - (கந்தையாவின் மனைவி) மேனை..... கவனமாப் பாத்துப் போட்டுவா ராசா

கந்தையா - அவன் போட்டான், அவன் போட்டான்.

மனைவி - அவன் வருவான்.... வருவான். தம்பி ராசா... கவனமாப் போட்டுவா மேனை. வாகனங்கள் யமக்கோலத்துடன் ஓடித்திரியிற காலம். கவனமாய் பாத்துப் போட்டுவா ராசா....




கனகு வருகிறார் . கந்தையாவை கைத்தாங்கலாகத் தூக்கி நடத்தியபடி செல்லுகிறார். மனைவியும் அழுதபடி பின்தொடருதல்.வெளியேறுதல்.
5, 6 பேர் சைக்கிளில் இருந்து மற்றவரின் தோளில் கைபோட்டபடி நடு ரோட்டை மறித்தபடி பயணம் செய்கின்றனர்.

கனகு - நாசமாய் போவாங்கள்
கண்டறியாத சைக்கிள் ஓடுறாங்களாம்
தாய், தேப்பன் மாரின்ரை புழுத்த வளர்ப்பு....
என்ர கோவத்துக்கு வருகுது வாயிலை....
படிக்கப் போறாங்களாம்... வாத்திமார் உங்கை என்னத்தைச் சொல்லிக் கொடுக்கிறாங்கள்.
கண்டறியாத படிப்பு... படிக்கப் போறாங்களாம்... வளப்பிணிகள்.

(இந்த நேரம் மேடையின் பின்பகுதியில் சிலர் சைக்கிளில் இருந்தும், நிலத்தில் நின்றும் கதைத்துக் கொண்டிருக்கின்றனர். மேடை இவ்வேளை வீதியாகின்றது)




ஒருவன் - 1. டேய் ஹெல்மெற் கனகு!
2. கனக்கக் கதைச்சியோ...
3. ஹெல்மெற் போட்ட மண்டை சிதறும்.
4. காலடிச்சு முறிப்பம்...
5. கதைக்கிறதை யோசிச்சுக் கவனமாக் கதைக்க வேணும்.

கனகு - (பயந்து விடுகிறார்) ம்.... ம்... என்னத்தைச் சொல்லுறது. இந்தக் காலத்துப்பெடியள், பெட்டைகள் விஷமம் கொண்டு ஓடித்திரியுதுகள். நான் வாயை மூடிக்கொண்டு வீட்டை பாதுகாப்பாகப் போய்ச் சேருவதுதான் புத்திசாலித்தனம். அநியாயத்தை தட்டிக்கேக்கத்தான் வேணும். அதுக்கு மாற்றான் வலிமையும் என் வலிமையும் சரியா தெரிந்து கொண்டுதான் செயற்பட வேணும்.
(கனகு போனபின்)
- இருவர் எதிர் எதிராகப் பாதையில் சைக்கிளில் வருதல். மோதுதல். விழுதல். எழும்பிச் சண்டையிடல்.

1ம் ஆள் - டேய் உனக்குச் சைக்கிள் ஓடத்தெரியாதேடா? ராஸ் கல்

2ம் ஆள் - ஆருக்கடா சைக்கிள் ஓடத் தெரியாது...?
எந்த Side ஆலை சைக்கிள் ஓடுற தெண்டு உனக்குத் தெரியாதே...?
உனக்கொரு Trouser ஒரு... Shirt....
டேய்.... டேய்....
(அடிக்கப்போதல்)


1ம் ஆள் - உடம்பிலை கை வைக்காதை. பிரச்சனையை வாயாலை **பேசித் தீர்ப்பம்.**
கிட்ட வராதை....
சொல்லிப் போட்டன் வில்லங்கம் வரும்.

2ம் ஆள் - வர்றது வரட்டும்... வா.... சண்டை போடுவம்.
ஆண் பிள்ளை என்றால் சண்டையிலை சாகோணுமடா தெரியுமே...?

- இருவரும் கைகலப்பில் ஈடுபடல், கட்டிப்புரளுதல், ஆட்கள் பலர் ஓடிவந்து இருவரையும் விலக்கிப் பிடித்தல். (சில செக்கன்கள் இந்தக் காட்சியில் உறை நிலையில் நிற்பர்)

விலக்குப்பிடிக்க வந்தவர்கள் (A, B, C, D, E)

கை கலப்பில் ஈடுபடுபவர்கள் (x, y)




விலக்குப்பிடிக்க வந்தவர்களில் ஒருவன் (1ம் ஆளின் ஊரவன்) : எங்கடை ஊரவனிலை கைவைச்சிட்டாய்.... இனி நீயோ... உங்கடை ஆட்களோ இந்த Town க்கு வாறதைப்பாப்பம்....

மற்றவன் - எங்கடை ஊராக்களின்ரை சண்டித்தனம் தெரியும் தானே? இப்ப Town க்கை தானே நிக்கிறம். ஆண்மை இருந்தால் எங்களிலை தொட்டுப் பாருங்கோடா பாப்பம்.....
நீங்கள் பொண்ணையங்கள்.
ஆரை வெருட்டுறியள்
போங்கோடா...

ஒருவன் - பொறு... பொறு... ஆட்களைக் கூட்டிக்கொண்டு வாறம்.

பொது மக்கள் - தம்பி.... தம்பி....
அதெல்லாம் வேண்டாம்.
தர்க்கப்பட்டது போதும்....
போங்கோ

இரண்டு ஊரவரும் அடிபட பொதுமக்களுக்கு எவ்வளவு இடைஞ்சல் எண்டு தெரியும் தானே?
பொலிஸ், கோடு (நீதிமன்றம்) வழக்கு..... எண்டு அலைய வேண்டாம்.
காசை பிறக்கிறாசிமாருக்கு தாரைவார்த்துச் கொடுக்கவும் வேண்டாம்.

1வது ஆள்- நான் றோட்டிலை இடப்பக்கமாகத்தான் சைக்கிள் ஓடி வந்தனான். அவன்தான் Wrong Side இலை வந்து என்னோடை மோதினவன்.
பிறகு கதைக்கிறாங்களாம் கதை... உங்கடை சண்டித்தனத்தை வேறை ஆருக்கும் காட்டுங்கோ.

பொதுமக்கள் - தம்பிமார் தர்க்கப் படாதையுங்கோ... தயவுசெய்து சண்டைபோடாமல் வீட்டுக்குப் போங்கோ...

1வது ஆளின்
ஊரவன் - இப்பபோறம் அடிவாங்க வேணுமெண்டால் எங்கடை ஊருக்கு வாங்கோடா பாப்பம். ஒரு மயிர்கூட திரும்பிப் போக விடமாட்டம்.

பாடல்

காற்றைப் பிரி....
கடலைப் பங்குபோடு
வானத்தை கூறுபோடு
இதயத்தை இறைச்சிக்காய்
ஏலம் போடு
வேண்டாத வீரம்
விலை போனாலும் பயனில்லை
விதிகள் இல்லாத வாழ்வும்
ஒரு வாழ்வோ மனிதா...
முரண்பாடுகள் எல்லாம்
வன்முறைகள் ஆக வேண்டாம்
மனிதா கேள்.

மேற்படி காட்சி முடிய, பாத்திரங்கள் வெளியேற
கந்தையாவும் மனைவியும் மாலையுடன் அழுதழுது வருகின்றனர். கந்தையா மைல்கல்லுக்கு மாலையிடுகிறார்.

மனைவி - தம்பி.... ராசா...
கவனமாய் பாத்துப் போட்டு வாடா ராசா

கந்தையா - அவன் போயிட்டான்
அவன் போயிட்டான்
அவன் போயிட்டான்
இல்லை... இல்லை
அவன் வருவான், வருவான்
(இருவரும் அழுதல்)

இறந்த மகன் - அம்மா... அப்பா போட்டுவாறன். (பின் நோக்குக் காட்சி - Flash back)




தாய் - ஓமப்பு கவனமா போ ராசா. இருட்ட முன்னம் வந்திடுராசா...

மகன் - ஓமம்மா நான் போறன்

(கனகு என்கின்ற கனகசபை ஹெல்மெற் போட்டு கைத்தடியை ஊண்டியபடி மிண்டி, மிண்டி நடந்து வருகிறார்)

மயில்வாகனம்
(மயிலர்) - கனகு இதென்னப்பா கோலம்?
என்னப்பா நடந்தது...?
விழுந்து முறிஞ்சனியோ...?

கனகசபை
(கனகு) - சும்மா விழுந்து முறியிற அளவுக்கு இன்னும் தளர்ந்து போகேல்லை மயில்வாகனம். என்ரை உடம்பிலையும், மனதிலையும் நல்ல தெம்பு இருக்குது.

மயிலர் - ஓ.... ஓ.... கனகசபையெண்டால் சும்மா ஆளே... அந்தக் காலத்திலை "சாண்டோ கனகு" எண்டால் வலுபிரபல்யம், எழுப்பமான ஆள். தெரியாதே எனக்கு...?
நெஞ்சிலைலொறி ஏத்தினதும், கழுத்திலை கயிறு போட்டு பஸ்சை மந்திகைச் சந்தியிலை இருந்து பருத்தித்துறை Town வரை இழுத்துக்கொண்டு வந்ததும்.
பல்லாலை மோட்டசைக்கிளைத் தூக்கினதும்......

கனகு - மயில்வாகனம்! நிப்பாட்டு. கதையை நிப்பாட்டு. மோட்டச் சைக்கிள் எண்டு எனக்கு முன்னாலை உச்சரிக்கக் கூடாது. மோட்ட சைக்கிளாம் மோட்டச் சைக்கிள்... யமன்ரை மோட்டசைக்கிள்... யமன்ரை வாகனம் மோட்டச் சைக்கிள் எருமை.

மயிலர் - கனகு....!
கோவப்படாதை... என்ன நடந்தது. சொல்லப்பா?

கனகு - எங்கடை ஒழுங்கையிலை நான் வலது பக்கமா வேலி ஓரமாக நடந்து போனனான். இளந்தாரிப் பெடியள் 2 பேர் அந்தத் தெருவாலை போன பெட்டைகளுக்கு தங்கடை மோட்டச் சைக்கிள் ஓட்டத்தைக் காட்டப்போய்... எனக்கு மேலையெல்லே மோட்டச் சைக்கிளை

ஏத்திப்போட்டு ஓடிப்போட்டாங்கள்.
மூண்டு மாசமா யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலை கிடந்திட்டு போனகிழமைதான் வந்தனான்.
தலை மண்டையிலை நல்லகாயம், தலைதப்பினது தம்பிரான் புண்ணியம்தான்.




மயிலர் - சனத்துக்குக் காசுமெத்திப்போச்சு. கண்டவன், நிண்டவனெல்லாம் மோட்டச்சைக்கிளைவாங்கி கண்மண் தெரியாமல் ஓட்டங் காட்டுறாங்கள். இதுகளைப் பெத்ததுகளும் சாகிறதுக்கு நேர்ந்துவிட்டிருக்குதுகள்.

கனகு - எனக்கு இப்ப மோட்டச்சைக்கிள் ஓடுறவங்களைக் கண்டால் பிடிச்சுக் கொல்ல வேணும் போலை இருக்கு.
ஆரும் மோட்டச் சைக்கிளைப் பற்றிக் கதைச்சால் விசர் பத்திக்கொண்டு வருகுது.
நடந்து போகேக்கையும் ஹெல்மற் போட்டுக்கொண்டு நான் போகத் தொடங்கிவிட்டன்.


மயிலர் - நாங்கள் கவனமாக வீதி ஓரமாகப் போனாலும் விடுகிறாங்கள் இல்லை. அடிச்சு விழுத்திப்போட்டு ஆட்கள் ஓடி மறைஞ்சிடுறாங்கள். யார்க்கெடுத்துரைப்போம். யாரிடம் நோவோம்?
சரி ...... போட்டுவாறன். தெருவிலை கவனமாகப் பாத்துப்போ....
(இருவரும் பிரிந்து போகின்றனர்)

(மாணவர்கள் 05 பேர் சைக்கிளில் செல்லுதல். முதல் 04 பேரும் எதுவித சைகையும் (Signal) காட்டாமல் கவனமின்றிச் சைக்கிளைத் திருப்புகின்றனர். ஒருவன் மாத்திரம் நின்று நிதானித்து இடது புறம் சைகையைக் காட்டி, இடதுபுறம் திரும்பிச் செல்கின்றான்)

கனகு - தம்பி... தம்பி கொஞ்சம் நில்லு ராசா

மாணவன் - என்னப்பு.....?

கனகு - அருமையான பிள்ளை ஆற்றை பிள்ளை நீ.



மாணவன் - பொன்பல்லுப்புவனேந்திரம் மாஸ்ரற்றை மகன்.

கனகு - அதுதானே பார்த்தன். அருமையான குடும்பத்திலை வழிகாட்டல்களோடு வளர்ந்த பிள்ளை யெண்டு நல்லாத் தெரியுது.
நீ அந்த College இலை படிக்கிற பிள்ளை போலத் தெரியுது.

மாணவன் - ஓமப்பு, எங்கடை School இலை Teachers மாரும், Principal உம் நாங்கள் வீதியிலை எப்படிப் பயணிக்க வேணுமெண்டு அடிக்கடி ஞாபகமூட்டிவிடுவினம்.

கனகு - கண்டியே.... கண்டியே நான் ஆளின்ரை செயலைப் பார்த்த உடனை. எந்தக்குடும்பம், எந்த School எண்டு கண்டு பிடிச்சிட்டன்.

மாணவன் - அருமையான குடும்பம் எண்டு சொல்லுறியள் எந்த School ஐ படிக்கிறன் என்றதையும் சொல்லுறிள்.
என்னண்டு சரியாகக் கண்டுபிடிச்சுச் சொல்லுறியள் ஐயா?

கனகு - ஒரு பிள்ளை றோட்டிலை சைக்கிள், மோட்டசைக்கிள் எண்டு வாகனங்களை எப்பிடி ஓடிக்கொண்டு போறான். எப்பிடிச் சந்தியிலை திரும்புறான் இடம், வலம் பார்த்து ஓடுறான் இப்பிடி வீதிப் போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடிக்கிறதை வைச்சுக்கொண்டு அவனைப் பற்றிச் சொல்லிப்போடலாம்.
ஏன் அவன்ரை நண்பர்கள் எப்பிடி இருப்பினம் எண்டு கூடச்சொல்லலாம்.
அங்கை முன்னாலை போகுதுகள் 04 தறுதலைகள், அதுகள் அந்த School ஐ தானே படிக்கினம்.

மாணவன் - அது.... அது... தெரியேல்லை ஐயா. இல்லை... எனக்குத்தெரியாது.

கனகு - என்ன இல்லை... ஓ..... நீ அருமையான பெடியன் எதிலையும் நிதானமும் அவதானமும் தேவை. மற்றவங்களுக்கு முன்னோடியாக நடந்து எடுத்துக்காட்டாக இருகிறவன் நீ.
வாழ்க்கை ஒரு நீண்ட பயணம். அதை 100 மீற்றர் ஓட்டப்போட்டியென்று நினைச்சு வேகமாக ஓடி முடிக்கக்கூடாது.
இதை மற்றாக்களுக்கும் சொல்லு மேனை. சிநேகிதர்களிட்டை எடுத்துச் சொல்லு மேனை.

மாணவன் - ஓமையா. இனி கட்டாயம் செய்யிறன். என்ரை சிநேகிதர்களைச் சேர்த்துக் கொண்டு வீதிப்போக்குவரத்துப் பற்றி பொதுமக்களுக்கு எடுத்துக் கூறிக்கொண்டே இருப்பன்.

கனகு - வீதி நாடகங்கள் அதுதான் தெருக்கூத்துகள் இதை இலங்கையிலை தெருவெளி அரங்கு எண்டு சொல்லுவார்கள்.
மக்களிடம் நாங்கள் கொண்டுபோய் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேணும்.

மாணவன் - உயிரைக் காக்கிறது, ஊனங்களைத் தவிர்கிறதுக்குமாகப் பாடுபடுகிறது நல்ல செயல் தானே ஐயா?

கனகு - முதல்லை போய் செயலிலை இறங்குங்கோ தம்பி.

கந்தையாவும் மனைவியும் வழமைபோல மாலையுடன் வந்து மைல் கல்லுக்கு மாலையிடுகின்றனர். (இவர்களில் ஒருவர் மாலை போடுவதாகவும் வைத்துக்கொள்ளலாம்).




(பின்னோக்குக் காட்சி)

மகனின் குரல் - அம்மா... போட்டுவாறன். அப்பா... போட்டுவாறன்.


தாய் - போட்டுவா ராசா.... கவனமாப் பாத்துப் போகவேணும்.

கந்தையா - அவன் போட்டான் அவன் போட்டான் இல்லை.. இல்லை அவன் வருவான்.

மகனின் குரல் - ஐயோ... அம்மா.... அப்பா...

இவ்வேளை மோட்டார் சைக்கிளில் ஒரு இளைஞன் (மேடையில்) வருகிறான். இவர்கள் அழுவதைக் கண்டதும் மோட்டார் சைக்கிளை நிற்பாட்டிய பிறகு இவர்களை நோக்கி நடந்து வருகிறான்.

இளைஞன் - றோட்டிலை நிண்டு கொண்டு Uncle ..... ஏன் அழுகிறியள்? Aunty என்ன இது...? உங்களுக்கு என்ன நடந்தது?




கந்தையா - அங்கை ஒரு சத்தம்... மகன்ரை குரல்...

மகனின் குரல் - அம்மா... அப்பா... போட்டு வாறன்... போட்டுவாறன்.

தாய் - போட்டுவா ராசா கவனமாப் பார்த்துப் போக வேணும்.

இளைஞன் - அன்றி என்ன சொல்லுறியள்?
கந்தையா - அவன் வரமாட்டான்... இல்லை... இல்லை அவன் வருவான்.

இளைஞன் - ஐயா...!
ஆர் போனது?
ஆர் வாறது?
எனக்கு ஒண்டுமே விளங்கேல்லை.

(கனகு வருதல்)

கனகு - தம்பி... என்ன யோசிக்கிறீர்...? வந்தவன் போட்டான். போனவன் வரமாட்டான்.

இளைஞன் - எனக்கு ஒண்டுமே விளங்கேல்லை. ஒரே குழப்பமாக இருக்கு.


கனகு - போனமாதம் இவையளின்ரை ஒரே ஒரு மகன் சிவராசா... பள்ளிக்கூடத்து பஸ்சிலை போக வெளிக்கிட்டவன்.

(மகன் சிவராசா புத்தகப்பையுடன் வருகிறான்) - **பின்னோக்குக் காட்சி.**

மகன் - அம்மா... அப்பா.. போட்டுவாறன். இண்டைக்கு வரப்பொழுதுபடும் தேடாதையுங்கோ. தெருவிலைவந்து காத்துக்கொண்டு நிக்காதை யுங்கோ.

தாய் - போட்டு வா ராசா. கவனமா... பாத்துப் போக வேணும். (பஸ் வருதல் சிவராசா பஸ்சில் ஏறுதல்)

பஸ் பல மாணவர்களால் உருவாக்கிச் செய்து காட்டப்படும். (உடல்களால் பஸ்ஸை அமைப்பர்)




(இடையில் நடத்துனர் இறங்குகின்றார்)

நடத்துநர் - ஆர் இறக்கம்?
கெதியா முன்னாலை வந்து இறங்குங்கோ...
வாங்கோ... வாங்கோ....
(இவ்வேளை பஸ் சாரதி இறங்கி வந்து அருகில் உள்ள கடைக்குச் சென்று சாராயம் குடிக்கிறார்)

- கெதியா கெதியா மிச்சக் காசைத்தாங்கோ.

(பஸ் ஓடுகின்றது)

பஸ்சில் ஒருவன் - இறக்கம்... இறக்கம்

நடத்துநர் - ஆர் இறக்கம் எண்டு சொன்னது? கெதியா இறங்குங்கோ.

சாரதி - ஒருவரும் இறங்கேல்லை. என்ன சேட்டையே விடுகிறியள்? என்னைப்பற்றியும் என்ரை பஸ் ஓட்டத்தைப் பற்றியும் தெரியேல்லை. ஓடிக்காட்டுறன்.....


ஒருவர் - Office இக்கு நேரம்போகுது வேகமாப் போங்கோ...

இன்னொருவர் - முன்னாலை போற பஸ்ஸை முந்திக்கொண்டு போங்கோ..

சாரதி - இப்பபாருங்கோ என்ரை ஓட்டத்தைக் காட்டுறன்.

பயணிகள் சிலர் - ஓடுங்கோ... முந்துங்கோ...

(திடீரென்று பஸ் பெருஞ் சத்தத்துடன் விபத்துக்குள்ளாகின்றது)
பஸ் ஆக இயங்கியவர்கள், பயணிகள் சாரதி, நடத்துநர் மேடையில் படுகாயங்களுடனும், உயிரற்ற நிலையிலும் விழுகின்றனர்.
(பொருத்தமான இசை)
பலர் ஓடிவந்து தூக்குதல்.




பாடல் தண்ணீர் விட்டோ வளர்த்தோம்
சர்வேசா இப்பயிர்களை
கண்ணீரால் காத்தோம்
கருகத் திருவுளமோ
எண்ண மெலாம் நெய்யாகி
எம் உயிராய் வளர்த்த
வண்ண விளக்கிதுகள்
மடியத் திருவுளமோ...
(மேலும் பலர் ஓடிவந்து தூக்குதல், உதவுதல்)
(கந்தையா, மனைவி ஓடிவருதல். பாடல் தொடர்கிறது)
அப்பனும் மனம் அதிர

அன்னையும் மனம் உதிர
தவமிருந்து பெற்ற
தங்க மகனிவன்
தன் பாட்டில் செல்கின்றான்
தவிக்குதையா பெற்ற நெஞ்சங்கள்
(கந்தையாவும், மனைவியும் அழுதுகுளறி நிலத்தில் உருண்டு புரளுகின்றனர். பாடல் தொடருகிறது)

கனகு - நடந்த விபத்திலை இவையளின்ரை மகன் சிவராசா அகாலமா செத்துப் போனான்.
அதுக்குப்பிறகு இப்பிடித் தான் இரண்டு பேரும் விபத்து நடந்த இடத்திற்கு வாறது, அழுகிறது. போறது.... நாட்கள் போய்க் கொண்டிருக்கின்றன.

இளைஞன் - ஐயோ பாவம்
விபத்துக்கு முக்கிய காரணம் என்ன ஐயா?


கனகு - பிரயாணிகளின்ரை அவசரம்.
போட்டிக்கு வாகனங்களை ஓட வைக்கிறதிலை மகிழ்தல்.
சாரதி மது போதையிலை ஓடினது.
அதிவேகம்.
(கந்தையாவும் மனைவியும் அழுதபடி போகின்றனர். கனகுவும் போகின்றார்)
இளைஞன் அவர்களைப் பார்த்தபடி நிற்கின்றான். பிறகு மோட்டார் சைக்கிளை ஓட்டத்தயாராகின்றான். கனகு திரும்பி வருகின்றார்.
தனது ஹெல்மெற்றை இளைஞனுக்கு அணிவித்து விடுகின்றார்.




கனகு - தம்பி... தெருவிலை பயணங்களிலை எங்கடை தலைவிதி இருக்குது. விதிகளை அனுசரித்துப் போனால் நாங்கள் எங்கடை தலைவிதிகளை சிறப்பாக நீடித்து வாழலாம்.

பாடகர் - பயணம்... பயணம்... பயணம்
பயணம்... பயணம்... பயணம்
வாழ்வினைத் தேடிடும் பயணம் - இது
வசந்தத்தை நாடிடும் பயணம்
விதிகளை கவனித்த பயணம்
புது விதியினை எழுதிடப் பயணம்
மெதுவாய் செல்வோம் நாமே - அதி
வேகம் தவிர்ப்போம் நாமே
வீதியில் பூமழை சொரிவோம் நாமே.

*** முற்றும் ***




டெங்கு மங்கிடவே

# டெங்கு மங்கிடவே

## பரிசளிப்பு விழா நாடகம்
## 2010

### பாத்திரங்கள்


01. அரசன்
02. மந்திரி
03. இளவரசன்
04. கோமாளி
05. டெங்கு நோய்

பொதுமக்கள் + எடுத்துச்சொல்லிகள் குறைந்தது 10 பேர் இவர்களில் சிலர் தேவைக்கேற்ப பொதுமக்களாகவும் நுளம்புகளாகவும் மாறுவர். மற்றும் பாடகர் / பாடகர்குழு / இசைக்கலைஞர்

மேடையில் குறைந்தது 15 பேர் நடிப்பில் பங்குபற்றுவர்.

(போட்டி நாடகங்களில் தேவைக்கேற்ப பொதுமக்கள் + எடுத்துச் சொல்லிகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம்)

(மக்களும் எடுத்துச்சொல்லிகளும் மேடையில் தோன்றிப் பாடி ஆடுகின்றனர்)




பாடல்

வந்தோமே வந்தோமே - இலங்கையின்
மைந்தர் நாங்கள்
தந்திடவே தந்திடவே - நல்ல
நாடகம் தந்திடவே

(வந்தோமே)

தத்தித்தா... தித்தித்தோம்
தரிகிடதோம்... தித்திதோம்

முரசறைவோன் - (டும்... டும்... டும்...)
எச்சரிக்கை.... எச்சரிக்கை
மகாஜனங்களே..... எச்சரிக்கை
மகா ஜனங்களே... விழிப்புடன் இருங்கள்.

ஒருவன் - ஓய் நிப்பாட்டும். இப்ப நாங்கள் விழிச்சுக்கொண்டுதானே இருக்கிறம்... நித்திரைகொள்ளுறமே?

முரசறைவோன் - பொத்துவாய் (கேள்வி கேட்டவனின் தலையில் முரசு அறையும் தண்டினால் அடிக்க... கேள்வி கேட்டவன் குளறிக்கொண்டு ஓடுகிறான்...)

முரசறைவோன் - மகாஜனங்களே... எங்கள் நாட்டில் விஷக் காய்ச்சல் ஒன்று பரவிவருகிறது. இதனால் பலர் இறந்து விட்டார்கள். பொது இடங்களில் மக்கள் கூட்டமாக ஒன்று கூடுவதைத் தவிர்த்துக்கொள்ளவும். காய்ச்சல் தொற்றியோரைக் கூடாரத்துக்குள் தனிமைப்படுத்திவையுங்கள். இது இளவரசனின் கட்டளை...

ஒருவன் 1 - வாருங்கள் கூடாரங்களைத் தயார்பண்ணி காய்ச்சலுள்ளோரை அதற்குள் தனிமைப்படுத்திவைப்போம்.

ஒருவன் 2 - இது இளவரசனின் கட்டளையாகும்.
3 - மாமன்னன் என்ன செய்து கொண்டு இருக்கிறாரோ?

**அரசன் - வரவுப்பாடல்**

துலங்கிடும் நாடாம் அழகாபுரியில்
இலங்கிடும் மன்னன் அழகராசன்
வளம் பெறு ஆட்சிதன்னில்
குழம்பிய நிலையில் குதித்தோடி வந்தானே.

ஒருவன் - ராஜாதிராஜ, ராஜகம்பீர, ராஜமார்த்தாண்ட ராஜகுல திலக மாமன்னன் அழகராசன் வருகின்றார்..... வருகின்றார்..... பராக்... பராக்....

பாடகர் - அரசன் **ஆட்டத்தரு** ( பாடல்)
ராஜாதிராஜ ராஜகம்பீர
சூராதி சூர சூரகம்பீர
தீராதி தீர தீர கம்பீர
ராஜ மகாராஜன் வந்தேனே//
(இரண்டு கால்களையும் ஒன்றாக்கி முயல்போல் பாய்ந்து பாய்ந்து வந்து கழுத்தை முன்நீட்டி ஆடுதல்)

**கோமாளி - பாடல்**

தீராதி தீர, தீரகம்பீர
கோமாளி நானும் வந்தேனே

பிரதாப் - அரசன் - டேய் கோமாளி! நிறுத்தடா உன்பாட்டை. யார் எப்போது பாடவேண்டும். எப்படிப் பாடவேண்டும் என முதலில் உனக்குத் தெரிந்திருக்க வேண்டும். தெரிகிறதா?

கோமாளி - அறிவேன் மன்னா அறிவேன். தங்களுக்கு அருகில் நிற்க, நிற்க என்னையும் அறியாமல், தங்களின் வீர உணர்வு எனக்குத் தொற்றிவிட்டது. மன்னிக்க வேண்டும் மன்னா.

அரசன் - கோமாளியாரே, மகிழ்ந்தேன் உமது பதிலால். மலரோடு சேர்ந்த நாரும் மணம் வீசும்... ஆனாலும்..... எனக்குப் பயம் பயமாய் வருகின்றதே....

கோமாளி - ஹா... ஹா.... என்னைக் கண்டு பயப்பிட வேண்டாம். மன்னவா... பயப்பிடவேண்டாம்.

அரசன் - டேய் கோமாளி பகிடி விடாதை. விஷக்காய்ச்சல் வந்து நான் செத்துப் போடுவேனோ என்றுதான் பயமாய் இருக்கு.

கோமாளி - பயப்பிட வேண்டாம் மன்னவா நான் அருகில் இருக்கும்போது எந்தக்கொடிய காய்ச்சலும் தங்களை நெருங்காது.

அரசன் - உண்மையாக!

கோமாளி - உண்மையாக

அரசன் - சத்தியமாக!

கோமாளி - சத்தியமாக

அரசன் - நான் உன்னை நம்புகிறேன் ஆனாலும் கை, கால், தலை எல்லாம் நடு நடுங்குகின்றனவே.... என்ன செய்ய...?

கோமாளி - மன்னவா! பயந்துநடுங்கும் கோழையுறுப்புகள் உங்களோடு ஒட்டியிருக்கக்கூடாது. வெட்டி எறியவேண்டும். (கோமாளி வாளை உருவுவது போல் பாவனை செய்கிறான்)

அரசன் - ஐயோ... ஐயோ... வெட்டாதை... வெட்டாதை (மன்னன் சுற்றி ஓடுகிறான்) கோமாளி துரத்திக்கொண்டு ஓடுகிறான்.

மந்திரி - (மிக விரைவாக வருகின்றார்) கோமாளி நிறுத்தடா உன் விளையாட்டை மன்னரை நோக்கி வாளை ஓங்கியது பெருங்குற்றம். உன்னை என்ன செய்கிறேன் பார்.

அரசன் - மந்திரியாரே.. கோமாளியை ஒன்றும் செய்ய வேண்டாம். பயந்து நடுங்கும் இந்த உறுப்புக்களைத்தான் அவன் வெட்ட வந்தான். என்னை வெட்ட வரவில்லை.

மந்திரி - (தனக்குள்) அட அநியாயம். இப்பிடி ஒரு அரசன் இந்த நாட்டுக்குத் தேவையா?

அரசன் - மந்திரியாரே இளவரசனை அழையுங்கள்.

மந்திரி - இளவரசர் வரமாட்டார்.

அரசன் - ஏன்... ஏன்.... என்ன காரணம்?

கோமாளி - ஒரு வேளை விஷக்காய்ச்சல் வந்து... மேலை போட்டார் போலை....

மந்திரி - முட்டாள்...

அரசன் - உண்மை /// நான் முட்டாள் என்று ஒத்துக்கொள்கிறேன். ஆனால் மந்திரியாக இதை வெளியே சொல்லுதல் நாட்டு நலனுக்கு நல்லதல்ல.

மந்திரி - மன்னா... நான் கோமாளியைத்தான் முட்டாள் என்று கூறினேன் தங்களை அல்ல.

அரசன் - அப்படியா மகிழ்ச்சி. (தூரத்தில் எதையோ உற்றுப்பார்க்கிறான்) கோமாளி அதென்ன பெருங்கூட்டம் தெரிகிறது?

கோமாளி - அதோ அதோ எதிரிகள் பெரும் படையோடு அரண்மனையை நோக்கி

வந்துகொண்டிருக்கிறார்கள். துலைஞ்சம் எல்லாரும் ஓடித்தப்புங்கோ (மன்னனும் கோமாளியும் ஓட முயலுதல்)

மந்திரி - யாரும் அசையக்கூடாது அப்படியே நில்லுங்கள். எமது நாட்டு மக்கள் தான் அரண்மனையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள்.

அரசன் - அப்பாடா... எமது நாட்டு மக்களா... நான் பயந்தே விட்டேன்.

கோமாளி - நான் பயப்பிடவே இல்லை. ஹி... ஹி.... ஹி...

மக்கள் - மன்னர் மன்னா எங்களரசே காப்பாற்றுங்கள் கொடிய விஷக் காய்ச்சலால் பலர் பீடிக்கப்பட்டு இறந்து விட்டார்கள்.
பலர் இறந்து கொண்டிருக்கிறார்கள்
அரசே... அடைக்கலம்.

**மக்கள் - பாடல்**

போச்சே மன்னா போச்சே மன்னா - எங்கள்
உயிரெல்லாம் பாழாகிப் போச்சே மன்னா
போச்சே மன்னா போச்சே மன்னா விஷக்காய்ச்சலால்
நாளெல்லாம் இழவாகப் போச்சே மன்னா.
எங்கள் ஐயாவே மகராஜாவே
அடைக்கலமே அடைக்கலமே!

அரசன் - மக்களே அஞ்ச வேண்டாம்.

கோமாளி - நான் இருக்கிறேன் அஞ்ச வேண்டாம்

மந்திரி - அறிவும், ஆற்றலும், வீரமும் கொண்ட எங்கள் இளவரசன் விஷக்காய்ச்சல் பற்றிய விபரங்களை அறிந்து அதற்குரிய பரிகாரங்களை ஆராய்ந்து வர நேற்றே புறப்பட்டுவிட்டார்.

கோமாளி - அப்பாடா! இனி ஒருத்தருக்கும் விஷக்காய்ச்சல் வராது. இளவரசருக்குத் தான் வரும்.

மந்திரி - கோமாளி! நாவை அடக்கிப்பேசு.

கோமாளி - மன்னிக்கவும் மந்திரியாரே விஷக்காய்ச்சலை அடக்கிவிட்டுத்தான் இனி மதிப்புக்குரிய மந்திரியாருடன் வாய் திறந்து பேசுவேன்....
மன்னர்.... மன்னா.... சற்று இங்கேவாரும். முக்கியமான விடயமொன்று பற்றி உங்களுடன் நான் பேச வேண்டும்.

அரசன் - சொல்... சொல்.... உடனே சொல்

கோமாளி - பாடல்

அழகாபுரியில் அருமையாக ஆட்சி செய்து வரும்
அதி வீர தீர புத்தி கொண்ட அரசரே கேளும்.
ஆடையின்றி 500 பேர் அரசமரத்தை 05 தரம் சுற்றிவர வேண்டுமே மன்னா. சுற்றி வரவேண்டுமே மன்னா.
அத்தர சுத்தர மந்திரமதை ஆனமுறையிலே அடிவயிற்றில் இருந்தே ஒலி எழுப்பி ஓத வேண்டுமே மன்னா

டங்கு டிங்கு டெங்குச் சடங்கை செய்திட வேண்டுமே
நோய்களும் பேய்களும் ஓடி மறையுமே (அழகாபுரியில்)

அரசன் - அருமையான யோசனை. பெருமைமிக்க சிந்தனை. எனது முப்பாட்டன் காலத்தில் கொள்ளை நோய் வந்தபோது இந்தச் சடங்கைச் செய்துதான் மக்களைக் காப்பாற்றினார்கள் என்பதை அறிவேன் நான்.


கோமாளி - அப்படியே செய்வோம். மந்திரியாரே... மக்களே வாருங்கள் அந்தச் சடங்கினைச் செய்வோம். (சடங்கு நடைபெறுகிறது)

கோமாளி - டங்கு டிங்கு டெங்கே போ/// ஓம் றீம் கறீம்///

சடங்கு நிகழ்வுகள் நடைபெறுகின்றன இந்நேரம் "டெங்கு வைரஸ்" அரங்கில் நுழைந்து சடங்கில் ஈடுபட்டவர்களை அடித்துத் துன்புறுத்தல்

இளவரசன் வருதல்.
டெங்கு காய்ச்சலை சண்டையிட்டுப் பிடித்தல்
மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர்.

கோமாளி - அரசே டெங்கைப் பாய்ந்து பிடியுங்கள். அப்பாடா அதை இளவரசன் பிடித்து வைத்திருக்கிறார்.
அப்பாடா... தப்பினம்
இளவரசன் வந்துவிட்டார்
விஷக்காய்ச்சலை சிறைபிடித்து விட்டார்.
(மக்கள் சிலரும் இப்போது விசக்காய்ச்சலை சுற்றி வளைத்துப் பிடித்தபடி நிற்கின்றனர்.)




இளவரசன் - எமது நாட்டு மக்களைப் பிடித்திருக்கும் கொடியவனே உன்னைப் பற்றிய விபரங்களைக் கூறு. நானும் மக்களுக்கு விளக்குகின்றேன்.

டெங்குக்காய்ச்சல் - சொல்கிறேன் ஐயா, ஒருவகை வைரஸ் கிருமி காரணமாக டெங்கு என்னும் பெயருடைய காய்ச்சல் நான் உருவாகின்றேன்.

ஒருவன் - அப்ப நோய்க்காரணி வைரஸ்
வைரஸ் நோயெண்டால் மருந்து கண்டுபிடிக்கிறது கஷ்டம்.

இளவரசன் - டெங்கு... ம்.... ஆடிப்பாடிச் சொல்லு. அப்பொழுதுதான் ஆனந்தமாக இருக்கும்.

டெங்கு - டெங்கு வந்தேனே.. காய்ச்சல்//
டெங்கு வந்தேனே..
உலக மக்கள் அதிர
உயிர்கள் எல்லாம் உதிர
அதிரடி பீரங்கி ஆகாய வாணங்கள் அட்டகாசமாய் முழகிடவே (டெங்கு)

கோமாளி - டெங்கு... போடா டெங்கு நீ ஒரு லொங்கு. விரைவில் மங்கு.

இளவரசன் - டெங்குக்காய்ச்சலை உருவாக்கும் வைரஸ்கிருமியின் பெயரைக் கூறிடுவாய்... கூறிடுவாய்.

டெங்கு - சொல்கிறேன் இளவரசே - அது "ஆபோ" வைரஸ் கிருமியாகும்.

ஒருவன் - டெங்கு என்ற பெயர் எந்த மொழிக்குரியது....?

டெங்கு - ஸ்பானிய மொழி....
- ஸ்பானிய மொழிக்குரியது

ஒருவன் - ஸ்பானிய மொழியில் டெங்கு என்ற சொல்லின் அர்த்தம் என்ன இளவரசே...?

இளவரசன் - எலும்பு முறிக்கும் காய்ச்சல் என்று அர்த்தம்.

3, 4, 5 - அப்பப்பா... எலும்பை முறிக்கிற மாதிரி அவ்வளவு வேதனை தரும்

டெங்கு - ஆம் அந்தளவிற்கு கொடிய நோய் தான்.

அரசன் - ஐயோ... கேட்கவே பயமாய் இருக்கு... எலும்பெல்லாம் கடும் வேதனையாய் இருக்கு... ஐயோ.... ஐயோ... தாங்க முடியவில்லையே... (அரசன் அழுகிறார்)

மந்திரி - (இரசியமாக) மன்னா பொதுமக்கள் முன்னால் நிற்கிறார்கள் தாங்கள் இப்படி அழலாமா...?

கோமாளி - அதொண்டுமில்லை பொதுமக்கள் இந்தநோயால் எவ்வளவு கஷ்டப் படுகிறார்கள் என்பதை நினைத்து அரசர் அழுகிறார்.

பொது மக்கள் - அரசே... நீங்கள் அழக்கூடாது நாங்களும் அழுது விடுவோம்.
- எங்களை நினைத்து அரசர் அழுகிறார். அரசன் என்றால் அரசர் தான்
- அழகாபுரி அரசர்//

- வாழ்க


கோமாளி - டெங்கு நோய் வந்து அரசர் செத்துப் போகாமல் நீடூழி வாழ்க

அரசர் - டேய் கோமாளி என்னைப் பயப்பிடுத்தாதையடா...

இளவரசன் - டெங்கு வைரஸ் எப்படி மனிதருக்குள் தொற்றுகிறது என்பதை தெரிவிப்பாயாக...

டெங்கு - நுளம்புகளின் உடலுக்குள் டெங்கு வைரஸ் ஒளிந்திருக்கும் அந்த நுளம்பு மனிதனைக் கடிக்கும் போது மனிதனின் இரத்தத்துக்குள் செல்வதால் டெங்கு நோய் உருவாகின்றது.

கோமாளி - ஐயோ நுளம்புப் படை வருகுது துலைஞ்சம். அரசே, பொது மக்களே ஓடுங்கள்.




மந்திரி - இளவரசே வெண்ணெய் திரளும் நேரத்தில் சட்டியை உடைக்கிறான் இந்தக் கோமாளி. இளவரசே... கட்டளையிடுங்கள்

இளவரசன் - யாரும் ஓடக்கூடாது. நாட்டு மக்களுக்காக டெங்குக் காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை மறக்க வேண்டாம்.

அரசன் - நானாவது ஒடுவதாவது கொஞ்சம் முன்னே வந்து நாட்டு மக்களுக்கு டெங்கு பற்றி விளக்கம் கொடுக்கலாம் என்று விரைவாக நடந்தேன். அவ்வளவுதான்.

கோமாளி - அதுதானே... நான் ஓட விடுவனே....?

**நுளம்புக் கூட்டம் வருகை - பாடல்**

நுளம்புக் கூட்டம் ஒன்று கூடி
வந்தோமே (தெய்)
டெங்குக் காய்ச்சல் பரப்ப
நாங்கள் வந்தோமே (தாம்)
குலுங்கக்குலுங்க ஆடி ஆடி
வந்தோமே (தெய்)
செடி கொடிகள் குப்பையுள் இருந்து
வந்தோமே (தாம்)

நுளம்பு - ஈடிஸ் இஜிப்ரஸ் ///

ஈடிஸ் அல்போஜிடஸ் ///

டெங்கு - இவர் ஈடிஸ் இஜிப்ரஸ் வகை நுளம்பு
இவர் ஈடிஸ் அப்போஜிடஸ் வகை நுளம்பு

இளவரசன் - இந்த இரண்டு வகை நுளம்புகளும் டெங்கு நோயைப்பரப்பும்.

ஒருவன் - அப்ப நோய்க்காவி நுளம்பாகும்.

மந்திரி - நுளம்புகள் கடித்து
- எத்தனை நாட்களுள்
டெங்கு நோய் உண்டாகும் ?

இளவரசன் - மாண்புமிகு மந்திரியாரே கேளும்
- நுளம்பு கடித்து **2 - 7** நாட்களுள் டெங்குக் காய்ச்சல் உண்டாகும்.

கோமாளி - அதாவது நுளம்பு கடித்து ஒரு கிழமைக்குள்ளேயே நோய் உண்டாகும்.

இளவரசன் - தற்போதைய காலகட்டத்தில் டெங்கு நோய்க்கான மருந்துகள் ஏதும் கண்டுபிடிக்கப்படவில்லை....

கோமாளி - ஐயோ... ஓ... ஓ.....

மந்திரி - டெங்குக் காய்ச்சலின் தாக்கத்தைக் குறைத்திட வழியுண்டா இளவரசே.....?

இளவரசன் - ஆம் வழிமுறைகள் இருக்கின்றன.

கோமாளி - வழிவகைகள் உண்டு.... உண்டு...

மந்திரி - இளவரசே! டெங்குக்காய்ச்சலின் தாக்கத்தை குறைக்கும் வழி முறைகளை இயம்பிடுவீர் இயம்பிடுவீர்...?

கோமாளி - இளவரசர் சொல்லப்போகிறார். எல்லாரும் கவனமாய் கேட்டிடுவீர்... கேட்டிடுவீர்...

இளவரசன் - பூரணமாய் ஓய்வெடுக்க வேண்டும் ஐயா ஓய்வெடுக்க வேண்டும்
(மக்கள் பிற்பாட்டு) பூ... ர... ண... மா... ய் ஓய்வெடுக்க வேண்டும்.
நீர் வகைகள் நன்றாகக் குடித்திட வேண்டும் ஐயா குடித்திடவேண்டும் நீர் வகைகள் நன்றாக குடித்திட வேண்டும். காய்ச்சல் தணிக்க மருந்துகள் எடுத்திட வேண்டும். ஐயா... மருந்துகள் எடுத்திட மருந்துகள் எடுத்திட வேண்டும் வேண்டும்...

ஒருவன் - காய்ச்சலை தணிக்க என்னென்ன மருந்துகள் எடுக்க வேண்டும்?

இளவரசன் - காய்ச்சலைத் தணிக்க பனடோல், பரசிற்றமோல் போன்ற குளிசைகளை வைத்திய ஆலோசனையுடன் எடுத்திடலாம்.

கோமாளி - பனடோல், பரசிற்றமோல் எடுக்கலாம்

இளவரசன் - அஸ்பிறின், டிஸ்பிறின், புறுபன் போன்ற குளிசைகளை காய்ச்சலையும், வலியையும் தணிக்க எடுக்கவே கூடாது.

கோமாளி - அஸ்பிறின், கிஸ்பிறின், டிஸ்பிறின் குஸ்பிறின் புறாபன் கிறாபன்.. இதுகளை எடுக்கக் கூடாது.

ஒருவன் (1) - 1960ஆம் ஆண்டில் முதன் முதலாக பிலிப்பைன்ஸ் நாட்டில் டெங்குநோய் இனங்காணப்பட்டது.

மற்றவர் (2) - இலங்கையில் 1965ஆம் ஆண்டில் முதன்முதலாக டெங்கு நோய் இனங்காணப்பட்டது.

3ம் ஆள் - அந்த வருசம் இலங்கையில் 02பேர் டெங்குக் காய்ச்சலினால் மரணமாயினர்

4ம் ஆள் - 2004ஆம் ஆண்டின் பின்னர் டெங்கு நோய் எமது நாட்டில் சற்றுக் கூடுதலாகப் பரவியது.

5ம் ஆள் - கடந்த ஓரிரு ஆண்டுகளில் டெங்கு நோய் எமது நாட்டில் அதிகரித்து விஸ்வரூபம் எடுத்து பலரைப் பலிகொண்டு அச்சுறுத்தி வருகிறது.

(பொதுமக்கள், இளவரசன் உத்தரத்தரு (வினா விடை முறையில்) ஏனோ என்னை எழுப்பலானாய் மெட்டு)

பாடல்

மக்கள் - இளவரசே! டெங்கு நோயின் அறிகுறிகள் எவை என்று கூறுங்கள்?

இளவரசன் - கடுமையான காய்ச்சலுக்கும், தலைவலியும், மூட்டு நோவும் தானே.

பொதுமக்கள் - வேறென்ன அறிகுறிகள் ஆ... ஆ... வேறென்ன அறிகுறிகள் வேகமாக பகல்வீர்....?

இளவரசன் - அடிவயிற்றில் நோவும், வாந்தியும் வரலாம். மூக்கு, பல்லீறு, தோலின் கீழ் இரத்தமும் கசியலாம்.

பொதுமக்கள் - வேறென்ன... வேறென்ன சொல்லுங்கள்புத்தியுள்ள இளவரசசே.....?

இளவரசன் - தோலில்.... தோலில் சிவப்புநிற கொப்பளம் போல் தோன்றுதல் டெங்கு நோயின் பிரதான அறிகுறியாகும்.

டெங்கு - (இமுபட வசனம்) ஆனாலும் இளவரசர் குறிப்பிட்ட அறிகுறிகள் சரியாகத் தோன்றாமலும் இருக்கலாம்.

இளவரசர் - உண்மை... உண்மை... காய்ச்சல் வந்தால் டெங்கு நோய்க்குரிய இரத்தப்பரிசோதனை செய்துபார்ப்பது அவசியம் அவசியம்.... அவசியமே...

(அரசருக்கு திடீர் என வலிப்பு உண்டாதல்)

அரசன் - ஆ... அ... ஆ... ஐயோ... ஐயோ...

மந்திரி - அரசே மலைபோல் உறுதியாக இருந்த உங்களுக்கு திடீர் என்று என்ன வந்து விட்டது?

இளவரசன் - அரசருக்கு வலிப்பு ஏற்பட்டுள்ளது. இவருக்கு இதுவரை இவ்வாறு ஏற்பட்டதில்லையே... தந்தையே...

கோமாளி - ஐயோ... ஐயோ... ஐயோ... ஐயையே... ஐயையே... ஐயையோ... ஏமாறிவிட்டோம். ஏமாறி விட்டோம்

மந்திரி - கோமாளி என்ன சொல்கின்றாய்....?

இளவரசன் - தாமதிக்காமல் நடந்ததைச் சொல்...?

கோமாளி - எல்லாம் போச்சு///

இளவரசன் - கோமாளி...

கோமாளி - இப்போது நீங்கள் சொன்ன அறிகுறிகளோடு சில நாட்களுக்கு முன்பு அரசருக்குக் காய்ச்சல் ஏற்பட்டது. 04 நாட்களில் காய்ச்சல் தணிந்து விட்டது. இளவரசே நாங்கள் மோசம் போய் விட்டோம்.

மந்திரி - காய்ச்சல் தணிந்துவிட்டது என்று சும்மா இருந்து விட்டோம்... இரத்தப் பரிசோதனை செய்து பார்த்திருக்க வேண்டும்.

இளவரசன் - இதோ.... மன்னரின் தோலில் சிவப்புப்புள்ளிகள் காணப்படுகின்றன. டெங்குநோயின் முற்றியநிலைக்கு ஆளாகிவிட்டார். நான் இப்போது என்ன செய்வேன்?

(அரசனின் வலிப்பு அதிகமாகின்றது)


மக்கள் - மன்னா.... எங்கள் அரசே...
அன்பின் திருவுருவே.... பாசத்தின் உறைவிடமே... மென்மையான மனம் கொண்டவரே. மக்களுக்கு தீங்குசெய்யாத பொன்மனச் செம்மலே. நீதி தவறாத உத்தமனே...

(அரசன் இறத்தல்)

இளவரசன் - தந்தையே... (அழுகின்றான்)

மந்திரி - மன்னர் மன்னவா என்னைத் தனியாக விட்டு வானகம் சென்றீரோ?
கோமாளி - ஐயோ... ஐயோ.. ஐயோ.. ஐயையே... ஐயையோ... ஐயையோ

(ஒப்பாரிப்பாடல் ஒலிக்க மன்னரைச் சுற்றி மாரடித்தல், மன்னரை பாடையில் சவமாகத்தூக்கிச் செல்லுதல்... மற்றவர் பின்தொடர்தல்)



இறந்த அரசரை பாடையில் தூக்கிச் செல்லல்.

**ஒப்பாரிப்பாடல்**

அல்லை பூ மேனியிலே
ஆகாநோய் வந்ததுவோ
பருப்போலே வந்த வினை
பாரவினை யானதெணை
மலையிலே காற்றடிக்க
மல்லிகைப்பூ வாடியதோ
கடல் மேலே காற்றடிக்க
கைவிளக்கு அணைந்ததுவோ

போகக்கால் ஏகியதோ - இந்த
பூங்காவனத்தை விட்டு
நடக்கக்கால் ஏகியதோ - இந்த
நந்தவனத்தை விட்டு

இளவரசன் - டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வு எமக்கு அவ்வேளை இல்லாமையால் எனதுதந்தையை, இந்தநாட்டின் அரசரை அநியாயமாக இழந்து விட்டோம். மக்கள் பலரையும் பலிகொடுத்து விட்டோம்.

மந்திரி - இனிமேல் எமதுநாட்டில் டெங்குக்காய்ச்சலால் உயிரிழப்பு ஏற்படக்கூடாது. அதற்கு வேண்டிய அனைத்தையும் இக்கணத்திலிருந்தே தொடங்க வேண்டும் இளவரசே.

இளவரசன் - டெங்கு நோய் நுளம்புகளின் மூலமே மனிதருக்குத் தொற்றுகின்றது. நாட்டு மக்கள் அனைவரும் தமது வீட்டையும், சுற்றுப் புறச்சூழலையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். தேவையற்று நீர் தேங்கி நிற்கும் அனைத்து இடங்களையும், பொருட்களையும் இல்லாமல் செய்துவிட வேண்டும். தேவையற்று வளர்த்திருக்கும் செடிகளை வெட்டிவிட வேண்டும் எனக்கட்டளை இடுகின்றேன்.

மந்திரி - நுளம்புவலை, நுளம்புத்திரி, மின் விசிறி என்பவற்றைப் பாவித்தும், சித்தாலேபத்தைலம், புல்லெண்ணை... மற்றும் தகுந்தமருந்துப் பொருட்களை உடலில் பூசி நுளம்புக்கடியைத் தவிர்ப்போம்.

**கோமாளி - பாடல்**

குப்பை கூழங்கள், இளநீர்க்
கோம்பைகள், பிளாஸ்ரிக்
பொருட்கள் ஐயாவே....

போத்தல்கள், மூடிகள், பொலித்தீன் பைகள்
சிரட்டைகள், ரயர்கள் அம்மாவே

தண்ணீர்த் தொட்டிகள், தண்ணீர் வாளிகள்
பூச்சாடிகள், கால்வாய்கள் ஐயாவே//

தேவையின்றி நீர் தேங்கும்
இடங்கள் அத்தனையும்
அகற்றுவோம் அம்மாவே
அகற்றுவோம் ஐயாவே


இளவரசன் - இந்த முறைகளையெல்லாம் கையாண்டு நுளம்புகளின் பெருக்கத்தைத் ஒழிப்போம்.

மந்திரி - நுளம்பு கடிப்பதையும் இயன்றளவு தடுப்போம்

கோமாளி - காய்ச்சல் வந்தால் உடனடியாக வைத்தியரைநாடி குருதிப் பரிசோதனை செய்து தேவையற்ற இறப்புக்களைத் தவிர்ப்போம்.

இளவரசன் - இன்று முதல் டெங்குநோய்க்கெதிரான மக்கள் யுத்தத்தினைப் பிரகடனப் படுத்துகிறேன்.

*** முற்றும் ***




மீண்டும் தொடங்கும் மிடுக்கு

# "மீண்டும் தொடங்கும் மிடுக்கு"

## பரிசளிப்பு விழா நாடகம்
## 2015

பாத்திரங்கள்

01. தகப்பன் - முதியவர் (வயது 65)

02. தாய் (வயது 60)

03. அண்ணா (மேற்கூறியவர்களின் மகன் - வயது 28)

04. தங்கை (மேற்கூறியவர்களின் மகள் - வயது 26)

05. உரைஞர்கள் - 5, 6 பேர்

(திரை விலகுமுன் பின்வரும் பாடல் இசைக்கப்படுகிறது)

**பாடல்**

நாட்டின் மழையுமில்லை
நல்ல விளைச்சலில்லை
தேசம் செழிப்பில்லை
செந்நெல் விளைவுமில்லை
மழையும் கிடையாது...
மன்னது சீமையிலே
தூறல் கிடையாது
சோழனது சீமையிலே

(திரை விலகுகின்றது மேடையில் நால்வர் வயல் வேலைசெய்யும் பாவனையில் உறை நிலையில் நின்கின்றனர்) உரைஞர் மேடைக்குள் நுழைகின்றார்.

பயிரும் கிடையாது
பறவைகள் நாடாது
தீந்தன பயிர்களெல்லாம்
தேசங்கள் அத்தனையும்
காய்ந்தன பயிர்களெல்லாம்
காய்கறிகளோ மெத்தவிலை
ஏரி, குளம், கிணறுகளில்
அள்ளவோ சொட்டு நீருமில்லை
ஆ..... ஆ.... ஆ.....




உரைஞர் -

1. பார்த்த இடங்களிலெல்லாம் வரட்சியின் நீட்சி தொடருகின்றது.
2. வரட்சி இராட்சதப்பல்லியாகி பூமியை விழுங்கப்போகுது.
3. மரம், செடி, கொடிகள் அத்தனையும் காய்ந்து கருகி நிற்பதைக் காண்.
4. ஏன் இப்படி ஆயிற்று...?
5. காலம் மாறி மாறிவரும். சில வேளை கடும் கோடை, சிலவேளை கடும் மழை.

1. இடையிடையே இயற்கை இப்பிடித்தான் என்று கூறும் காலமல்ல இது.
2. அப்ப என்ன காரணம்?

**தகப்பன்** - மழை இப்போதைக்கு வாறதாய் தெரியேல்லை. குளம், கிணறு எல்லாம் வத்திப்போச்சுது.

தாய் - மழை வரும்... வரும் எண்டு நம்பி ஏமாந்து போட்டம்.

அண்ணா - காய்ந்து இறுகிப்போன மண்ணைக் கொத்திக் கொத்தி நெஞ்சு நோகுது.

தகப்பன் - மலைப் பாறையை கொத்துறது போலிருக்கு.

தங்கச்சி - அண்ணா நீ நல்லாக் களைச்சுப் போட்டாய். இந்தா மினறல் வாட்டர்.

அண்ணா - எனக்கு மினறல்வாட்டர் பிடிக்காது தெரியும் தானே?

தங்கை - கிணத்திலை தண்ணியில்லை வேறை என்னண்ணா செய்யிறது. இந்தா குடி...

அண்ணா - (தண்ணீரைக் குடித்தல்) கோடை இப்பிடியே தொடர்ந்தால் மனிசரெல்லாம் மாண்டு போயிடுவர்... எத்தினை நாளைக்கு காசு கொடுத்து தண்ணீர் வாங்க ஏலும்?


தங்கச்சி - போத்தில் தண்ணியையும் விலைகூட்டி வித்தால் எங்களுக்குக் கட்டுப்படியாகாது.

தகப்பன் - கலி காலம் முத்திப்போச்சு. மழை ஒழிச்சு விளையாடுது. ஒரு சதமும் கையிலில்லை.

பாடல்

தண்ணீரோ காசுக்கு
கடைகளெல்லாம் விற்பனையாம்
கண்ணான ஊற்றுக்கள்
ஊறாமல் தூங்குதுபார்
கண்ணீரும் வரண்டு போய்
கருங்கல்லாய் ஆனதம்மா...
உண்ணீர் இல்லாமல்
ஒருயிரும் வாழாதே...

உரைஞர் 1. - இயற்கை பிழைச்சுப் போச்சு
2. - அதுக்கு என்ன காரணம்...?
3. - தரம் கெட்ட மனிசனின் தணியாத ஆசை தான் காரணம்.
4. - சூழல் மாசடைஞ்சு போச்சு மனிசரின் செயற்பாடுகளால்.
5. - சூழல் மாசடைந்ததால் இயற்கையே குழம்பிப் போச்சு....
1. - இயற்கைக்கு விசர் பிடிச்சுப்போச்சு
2. - இனிவரும் காலம் இயற்கைக்கு வினையாய் அமையும்.
(உரைஞர் செல்லுதல்)




தகப்பன் - மாரிகால நெல் விதைப்பாலை வாற விளைச்சலை நம்பியிருக்கும் மனிசர் நாங்கள்.

தாய் - மாரி மழை பொய்த்துப் போச்சு தெண்டால் எங்கடை வாழ்வில் இருள் சூழும்.

தகப்பன் - வாழ்வின் இருளை அகற்றும் வல்லமை எங்கடை கையிலில்லை.

தாய் - கடவுளுக்கு மட்டும் தான் எங்கடை வாழ்வின் இருளை அகற்றும் வல்லமை இருக்கு.

அண்ணா - கடவுள்... கடவுள்... கடவுள்... மண்ணாங்கட்டி. எத்தினை மனிசர் கொலையுண்டு போயினர். எத்தினை மனிசர் காணாமல் போயினர். இதெல்லாம் கடவுளின் வேலைதானே?

தகப்பன் - டேய் படுபாவி... கடவுளை தூற்றாதையடா தெய்வ நீசம்.. குல நாசம்.

தாய் - கடவுள் எங்களைச் சோதிக்கிறார் அப்பு...... கடவுளை நம்பினோர்க்கு கரைச்சல்கள் எல்லாம் நீங்கும்.

தகப்பன் - கடவுள் எங்களைச் சோதிக்கிறார் எண்டால் அவர் கடைக்கண் பார்வையை எங்கள் மீது வைச்சுவிட்டார் எண்டு தான் அர்த்தம்.

அண்ணா - கடைக்கண்ணாலை பார்க்கின்ற விசயம் சரிவராது. முழுக்கண்ணாலை சரியாகப் பார்க்க வேண்டும்.

தாய் - கடைக்கண் வைச்சாலே கருணை வெள்ளம் எல்லாரையும் காத்து நிற்கும். கருணை வெள்ளம்.


அண்ணா - எங்களுக்கு பிரச்சினை மழை வெள்ளம் அல்லவோ... கருணையல்ல.

தங்கை - அண்ணா நீ பேசாமல் இரு....

தாய் - கருணைக்கடலே முத்துமாரி அம்மா நீ மாரி மழையாய் வந்து காத்திடணை

பாடல்

எங்கள் மழை அரசி
முத்துமாரி அம்மன்
தங்க உடை தகதகக்கும்
முத்துமாரி அம்மன்
அன்ன நடை நடந்து கொண்டே
முத்துமாரியம்மன்
அன்புடனே வாறாவாம்
முத்துமாரியம்மன்
மாரி மழை பொய்த்தனை
முத்துமாரியம்மா
அழைக்கின்றோம் வந்திறங்காய்
முத்துமாரி அம்மா
வாரி இறைக்கும் தெய்வம்
முத்துமாரியம்மன்
மாரியாய் வந்திறங்கும்
முத்துமாரியம்மன்



உரைஞர், பிரதான பாத்திரங்கள், காவடிகள், கரகம், சன்னதம் இவற்றை மேற்கொள்ளலாம் வேறு ஆட்களும் பங்குகொள்ளலாம்.

(இப்பாடல் பாடும்போது கரகம், காவடி, சன்னதம் என்பன அபினயிக்கப்படும்)

உரைஞர் - 1. என்ன குற்றம் செய்தார்கள் இந்த மக்கள்?
- 2. பக்தியுடன் கும்பிட்டு நின்றது குற்றமா?
- 3. பொங்கல் வைத்ததில் குறையா?
- 4. பூசை செய்வதில் குறையா?
- 5. மேகமது கருக்கொண்டு இங்கு பூமியின் தாகத்தை தணியாது விட்டால்...

1. பாவம் இந்த மனிசரின் வாழ்வில் காரிருள் சூளும்
2. ஊனினை உருக்கி உனை வேண்டுகின்றோம்.
3. ஆகாய கங்கையாய் அமுதமென வந்திறங்கு தாயே.

தகப்பன் - முந்தின காலத்தில மழை இல்லையெண்டால் கொடும்பாவி கட்டி இழுத்துக்கொண்டு போய் எரிப்பினம்.

தாய் - இருபது வருசத்துக்கு முன்னால் கொடும்பாவி எரிப்பிலை நான் ஒப்பாரி வைச்சிருக்கிறன்.

அண்ணா - அம்மா கொடும்பாவி எரிப்பதெண்டால் என்ன...? கொஞ்சம் விளக்கமாக சொல்லுங்கோ...?

தங்கை - கொடும்பாவி எரிச்சால் ஏன் மழைவரவேண்டும் விளக்கமா சொல்லுங்கோ அம்மா?

தாய் - எனக்கென்ன விளக்கம் தெரியும்? முந்தினவை செய்யிறதைப் பார்த்து நானும் செய்தன்..... அப்பாவிக்கு விளக்கம் தெரிஞ்சிருக்கும்.


தகப்பன் - மழை பெய்யாமல் இருக்கிறதுக்கு தங்கடை தங்கடை ஊரில் இருக்கிற கொடிய பாவி மனிசர் தான் காரணம் எண்டு மக்கள் நம்பிச்சினம்.

தாய் - வைக்கோலால் மனிச உருவத்தில் அந்தக் கொடும்பாவியைச் செய்து ஒப்பாரி வைச்சு இழுத்துக் கொண்டுபோய் எரிப்பினம்.

மகன் - அந்தக் கொடும்பாவியை அழிச்சிட்டால் மழை வருமே...? மூடநம்பிக்கை... இதுகளுக்கு விளங்கினால் தானே...

மகள் - அம்மா நாங்களும் கொடும்பாவி எரிச்சால் என்னம்மா....?

தாய் - அப்பிடிச் செய்தால் நல்லதுதான். (தகப்பன் கைகளால் கொடும்பாவியை செய்தல்) கொடும்பாவி கட்டி இழுக்கப்படுகிறது (உரைஞரும் இதில் கலந்து கொள்வர்)




(கொடும்பாவி எரித்து வீதியால் இழுத்துச் செல்லுதல்)

பாடல்

மாபாவி சாகாளோ
மாரி மழை பெய்யாதோ
மாபாவி சாகாளோ
கோடி மழை பெய்யாதோ

வட்டிக்கு நெல்வாங்கி
வயலை விதைச்சுவைச்சன்
வட்டி வளரு தடி
வானத்து மாபாவி
கண் திறந்து பாராயோ
மாபாவி சக்களத்தி - அடி
மாபாவி சக்களத்தி
மழையைக் காட்டாயோ...

தகப்பன் - கொடும்பாவி எரிச்சு இருபதுநாள் கழிஞ்சு போச்சு. மழை வாற பாட்டைக் காணேல்லை.

தாய் - மழை வரும்... வரும்... நாங்கள் கொடும்பாவி எரிச்சபிறகு வராமல் எங்கை போறது? கடவுள் கண் திறப்பார் பாருங்கோ...

மகன் - கன காலமா கண்ணை மூடிக்கொண்டிருந்த கடவுள் உடனை கண் திறந்கிறதெண்டால் கஷ்டம்தான். இமைகள் ஒட்டிப்போயிருக்கும்.

தகப்பன் - எட தம்பி கொடும்பாவி எரிச்சதிலை பயன் இல்லாமல் போகாது. இது என்ரை வாழ்நாள் அனுபவமடா.. நடந்ததினாலைதானே பல நூறு வருஷமா திருப்பித் திருப்பி செய்து கொண்டு வாறம்.

மகன் - அது இயற்கையாகவே பிந்தினாலும் குறித்த நாளிலைதான் மழை பெய்யிற வாய்ப்புகள்வர மழைபெய்யுது. முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சுப் போடாதிங்கோ அப்பா...

தங்கை - அண்ணா..... நீ கதைக்காதை. அப்பா தனக்குத் தெரிஞ்சதை, காலங்காலமாக இருந்துவரும் நம்பிக்கையைச் செயல்படுத்துகிறார். அதை நாங்கள் விமர்சிக்கிறது முட்டாள் தனம்...

உரைஞர் -

1. கொடும்பாவி எரிக்கிறதென்பது ஒரு நம்பிக்கைதான்.
2. ஆனால் அந்தச் செயல்பாட்டுக்குள்ளையும் ஒரு விஞ்ஞானக் காரணம் இருக்கு.
3. அது என்ன விஞ்ஞானக் காரணம்...?
4. ஒரு பொருளை எரிக்கேக்கை அதுக்குள்ளை இருக்கும் நீர் - நீராவியாக வெளியேறும்.
5. இந்த நீராவி மேலே சென்று மழை மேகமாக மாறும்.

1. இதை அந்தக் கால மக்கள் தெரிஞ்சே செய்தவங்கள்?
2. அதை நான் சொல்லேலாது
3. மொத்தத்திலை கொடும்பாவி எரிக்கிறதிலை ஒரு விஞ்ஞானக் காரணம் அடிப்படையாக மறைஞ்சிருக்கு....

தகப்பன் - முழுக்க முழுக்க வயலை நம்பியிருந்த காலம் மலையேறிப்போச்சுது.

தாய் - மும்மாரி பொழிஞ்ச அந்தக் காலம் தொலைஞ்சு போச்சு.

தகப்பன் - வர, வர எங்கடைபாடு கஷ்டமாகிக் கொண்டே போகுது.

மகன் - விஞ்ஞானப் பரிசோதனைகளும் விஞ்ஞானத்தொழிநுட்ப உலகமும் சூழலை நல்லா மாசுபடுத்திக் கொண்டு போகுது.

தங்கை - இயற்கையைக் குழப்பிப்போட்டாங்கள் இயற்கைக்கு பைத்தியம் பிடிச்சுப் போச்சு.

அண்ணா - தங்கச்சி படிப்பிலை சரியானகெட்டிக்காரி நாங்கள் தான் அவளை மேலை படிக்க விடேல்லை.

தகப்பன் - அவளுக்கொரு கலியாணத்தை இந்த வருஷம் செய்யலாம் எண்டு நினைச்சன்.

தாய் - மழை இல்லை, விளைச்சலும் சரிவராமல் போச்சுதெண்டால் எப்பிடி கலியாணத்தை நடத்துறது...?

அண்ணா - எங்களை மாதிரி கமக்காரனை தங்கச்சிக்கு கட்டிக்கொடுக்க விட மாட்டன். அரசாங்க உத்தியோகக்காரனுக்குத்தான் தங்கச்சியை கொடுக்க வேணும்.... கமத்தாலை நாங்கள் படுகிற பாடு போதும்.

தாய் - அதுக்கு வாறவன் சும்மா வரப்போறானே... காசு, நகை, நட்டு எண்டு கனக்கக்கேட்பான்.

மகன் - எல்லாரும் அப்பிடியில்லை. வயலை சீதனமாக விரும்புகிற அரசாங்க உத்தியோகத்தர் கன பேர் இருக்கினம்.

(காட்சி மாறுதல்)

தகப்பன் - அங்கை பாருங்கோ மேகம்கறுத்துப்போய் இருக்கு. மழைவரும் போலை இருக்குது.

தாய் - ஈசல்களும் பறக்குது. ஈசல் பறந்தால் இப்ப மழை.

தகப்பன் - தும்பி பறந்தால் தூர மழை எண்டு சொல்லுவினம். ஈசல் பறக்குது இப்ப மழை வரும்.

பாடல்

கண்திறவாய், கண்திறவாய்
மேகமே நீ கண்திறவாய்
பூமி செழிக்க மழை
நீதானே பொழிய வேண்டும்

காலமெல்லாம் உழைத்த மக்கள்
கை கால் உரம் சேர்ந்த மக்கள்
நெஞ்சமது தளராமல்
மேகமே கண்திறவாய்
பாரினிலே உயர்த்திடலாம்
பண்பாட்டைக் காத்திடலாம்
தேரினிலே பவனிவர
மழையாகத் தான் பொழிவாய்

மகள் - மழைபெய்தால் முத்துமாரியம்மன் கோயில்வேள்விக்கு நான் பாற்செம்பு எடுப்பன்.

தாய் - பெரியதம்பிரானே உனக்கு ஆயிரம் மோதகம் அவிச்சுப் படைப்பனப்பு...


தகப்பன் - அப்பனே கதிர்காமக்கந்தா. நல்லமழை பெய்தால் அடுத்த வருஷம் உன்னட்டை பாத யாத்திரையாக வருவனனையா.

உரைஞர் -

1. மேகம் கறுத்திருக்குது மழை இப்ப கட்டாயம் வரும்.
2. காத்தல்லே அடிக்குது. காத்து மேகத்தை அள்ளிக்கொண்டு போய்விடும்.
3. மேகம் அள்ளுப்பட்டுக் கொண்டு போனால் இஞ்சை எப்பிடி மழை பெய்யும்.
4. பாவம் இந்தச் சனங்கள்.
5. காத்து நிண்டிட்டுது இஞ்சை மழை இறங்கும் போலை இருக்கு.

தகப்பன்
தாய்
மகள் } - மழை பெய்யுது


(மழையாக உரைஞர் வந்து ஆடுவர்)



பாடல்

ஊரவர் எல்லோரும் வாருங்களேன் - நல்ல
ஆனந்தத் தாண்டவம் ஆடுங்களேன்
துன்பங்கள் எல்லாமே நீங்கிடுமே - இனி
ஆனந்தம் எந்நாளும் பொங்கிடுமே

மாரி பொழிந்தது மண்ணும் நனைந்தது
காரிருள் நீங்கும் எம் வாழ்வு தனில்
குளங்கள் எல்லாமே நன்கு நிறைந்திடும்
வாய்க்கால் வழியே நீர்ப்பாயும்.
(மழை மேலும் அதிகரிக்கிறது...)




(ஆடல் பாடல் மூலம் மழைக்காட்சி வெளிப்படுத்தப்படும்)

உரைஞர் -

1. கடவுளே இதென்ன பேய்மழை
2. வெள்ளம் பெருகுது
3. வயல்கள், வீடுகள் எல்லாம் அழியுது
4. தெய்வமே மழையை நிறுத்திவிடு தெய்வமே
5. எங்களைக் காப்பாற்று
1. எங்களைக் காப்பாற்று

பாத்திரங்கள், உரைஞர், மழை, இடி... வெள்ளம் என்பவற்றுக்கு பொருத்தமான அசைவுகள் உடல் மொழிகளில் வெளிப்படுத்தல்.


பாடல்

தகதகிட, தகதகிட, தகதகிட தத்தோம்//
தீம் தகிட தீம் தகிட தீம்தகிட தித்தோம்//

தோம் தோம் தோம் தோம்...
தாம் தத்தோம்
தீம் தித்தோம்///

மழை வேண்டி தவமிருந்து வரமொன்று கேட்டோம்
பெருமழையாய் வந்திங்கு தாண்டவங்கள் போட்டே
மழையோடு காற்றும் கைகோர்த்து நின்றாட
உழைப்பெல்லாம் அள்ளுண்டு வெள்ளமாய் ஓடும

உயிர் மூச்சு வெறுவெளியில் தறிகெட்டுச்சாகும்
வறிதான இதயங்கள் தண்ணீரில் மூழ்கும்
கொடிதான விதி வந்து சதுரங்கம் ஆடும்
"வலி" தானே எம் நெஞ்சின் வாழ்வாகிப்போகும்.



அண்ணா - தங்கச்சியின்ரை கலியாணத்தை நடத்தி வைக்கவேணுமெண்டு பலரிட்டை கடன் வாங்கித்தான் நெல்லை விளைவிச்சன். எல்லாம் போச்சு.

தங்கை - அண்ணா நீ அழக்கூடாது...

அண்ணா - தங்கச்சி.... நான் அழாமல் வேறை என்னம்மா செய்யிறது?

தாய் - பட்ட கடனை எப்பிடி அடைக்கப்போறம்? வட்டிக்குமேல் வட்டி ஏறி எங்களைப் பிச்சைக்காரர் ஆக்கப்போகுது. எல்லாரும் ஒண்டா செத்துப்போனால் நல்லது.

தகப்பன் - பொத்தடி வாயை. பிரச்சினைகளுக்கு தீர்வாக சாவு இருக்கக்கூடாது. பட்டினி கிடந்தெண்டாலும் உழைச்சு வாழ வேண்டும். வாழ்க்கை போனால் திரும்பிவராது.

அண்ணா - நான் கொஞ்ச நாளைக்கு Town க்குப் போய் குஞ்சி ஐயாவின்ரை கடையிலை நிண்டு ஏதாவது உழைக்கப்போறன்.

தகப்பன் - ஒருத்தரும் ஒரு இடமும் போக வேண்டாம். இந்த வருஷம் இல்லாட்டில் அடுத்த வருஷம் விளைச்சல் வரும். மண் நம்பினவர்களை ஏமாத்தாது. வயலோடை பெரிய தோட்டமும் செய்வம்.

அண்ணா - அதுவரை நாங்கள் கூலி வேலையென்றாலும் செய்து உழைப்பம்.

தகப்பன் - வெள்ளத்தாலை அழிஞ்சவீடுவாசல்களை ஆட்கள் கட்டுகிறதிலை கூலிக்கு நிண்டு உழைப்பம்.

அண்ணா - நான் இரவு, பகலா நிண்டு உழைப்பன். கடன் காசைக் கட்டுவன்.

தங்கச்சி - அண்ணா நீ எனக்காக இரவு, பகலா உழைக்க நான் விடமாட்டன். உன்ரை உடம்பு தாங்காது. வருத்தத்தைத் தேடப்போறாய். அதுக்கு நான் விடமாட்டன்.

பாடல்

தங்கை - அண்ணா நான் விடமாட் டேன், விடமாட்டேன்.
அண்ணா - தங்கை நான் வரமாட்டேன், வரமாட்டேன்.
அம்மா என்னைக் கோவிச்சாலும்
அப்பு தான் வருந்தினாலும்
இரவு பகலாய் உழைக்காமல்
நான் வரமாட்டேன், வரமாட்டேன்.

தாய் - மேனை கொஞ்சம் நில்லடா. என்ரை தாலிக்கொடியை அடைவு வைச்சு காசெடுக்கலாம். வயலைக் கவனி, மரக்கறி தோட்டம் செய், பட்டி மாடுகளை பெருக்கு. நல்ல காலம் வரும்.

மகன் - ம்.... காசிருந்தால் கனவேலை செய்யலாம். நான் சூரியக்கலம், உயிர்வாயு தயாரிப்பு என்றெல்லாம் புதிய முறைகளை உழவுத் தொழிலுக்குப் பயன்படுத்தப்போறன்.

தகப்பன் - வயலுக்குப் பக்கத்திலை இருக்கிற பள்ளத்தை மெசின் கொண்டு ஆழமாக்கி குளமாக்கினால் தண்ணிப் பிரச்சினை தீரும்.


மகன் - ஓ....... அது நல்லவிசயம். எங்கடை மண்ணிலை நிண்டு வீறாப்புடன் எழுந்து.... மீண்டும் மிடுக்குடன் வேலைகளைத் தொடங்குவம்.

எல்லோரும் - ஓம் மீண்டும் மிடுக்குடன் வேலைகளைத் தொடங்குவோம்.

பாடல்

மீண்டும் தொடங்கும் மிடுக்கு - இது
வாழ்வை உயர்த்திடும் துடுப்பு
தாண்டும் எல்லைகள் பல கடந்து
மீண்டும் தொடங்கும் மிடுக்கு...

*** முற்றும் ***




ஒளி நமக்கு வேண்டும்

# ஒளி நமக்கு வேண்டும்

## சுனாமியில் இறந்தோருக்கான நினைவுநாள் நாடகம்
## பருத்தித்துறை சென் தோமஸ் R.C பெண்கள் பாடசாலை
## 2009

பாத்திரங்கள்

01. பிலோமினா - கணவனை இழந்த கைம்பெண், 2 குழந்தைகள்
    1. அன்ரன்
    2. ஜெனிற்றா

02. ஜேக்கப் - பல்கலைக்கழகப்படிப்புப் படித்துவிட்டு கடற்றொழில் செய்பவன். சமூக முன்னேற்றச் செயற்பாட்டாளர்.

03. ஜோசப் - பிலோமினாவின் தகப்பன் (குடிகாரன், பொறுப்பற்றவர், பின்னர் பொறுப்புள்ளவராக மாறுகிறார்)

04. சின்னராசன் - மீனவன், ஜேக்கப்பின் நண்பன்

05. யூலியா - சின்னராசனின் மனைவி

06. பேர்ணாட் - மீனவன், முற்கோபக்காரன்

07. ஜெசிக்கா - பேர்ணாட்டின் மனைவி

08. கடல்மீனவர்கள்

09. ஜெனிற்றா

10. அன்ரன்

11. ஏனைய சிறுவர்கள்

12. பாடகர் குழு

பாடல்


(Boat இல் போகும் போது படிக்கின்றனர்)
ஏலேலோ - ஜலசா//
ஏலேலோ - ஜலசா//

(பின்னணியில் படகின் உருவம் தெரிகிறது)

தொம்மை அப்பரே - எங்கள் தேவா
அந்தோனியாரே - எங்கள் தேவா
லூர்துமாதா - எங்கள் அம்மா

கடலின் பிள்ளைகள் - நாங்கள் எல்லாம்
படிப்பறியோம் - நாங்கள் என்றும்
காக்க வேணும் - எம்மை என்றும்

ஆ... ஆ... ஆ...
எத்தனை காலம் உன்னைப் பிரிந்தோம் - கடலம்மா
எத்தனை பேரை நாம் இழந்தோம் - கடலம்மா
இத்தனை கோபம் உனக்கேனோ - கடலம்மா
எத்தனை கண்ணீர் ஆறாகி கலந்ததுவோ - கடலம்மா




நாடகம் மழுவதும் கடற்கரை காட்சித்திரை
பின்னணியாக இருக்கும்.

பிலோமினா- தூரத்திலை Boat வருகுது. பிள்ளையள் நீங்கள் கெதியா பள்ளிக்கூடத்துக்கு வெளிக்கிட்டுப் போங்கோ. வலை இறக்கினதும் நான் மீன் தெரிக்கலுக்கு போக வேணும்.


அன்ரன் - அம்மா இண்டைக்கு நான் பள்ளிக்கூடத்துக்கு போகேல்லை.

ஜெனிற்றா - அப்ப நானும் போகேல்லை. உங்களோடை வரப்போறன்.

பிலோமினா- பள்ளிக்கூடத்துக்கு கள்ளமடித்தால் தோல் உரிச்சுப் போடுவன். கெதியா வெளிக்கிடுங்கோ. தெரியும் தானே என்ரை குணம்.

ஜோசேப் - இவள் ஒரு விசரி. எனக்கெண்டு வந்து பிறந்திருக்குது அவங்களுக்கு கடலிருக்கு, மீனிருக்கு உழைப்பிருக்கு. படிப்பென்னத்துக்கு? படிப்பு. கண்டறியாத படிப்பு.

பிலோமினா - ஐயா தயவுசெய்து என்ரை பிள்ளையளைப் படிக்க விடுங்கோ விடிஞ்சதும் விடியாததுமா குடிச்சுப் போட்டு வந்து பிள்ளைகளை குழப்பாதைங்கோ.




ஜோசேப் - ஆர்ரி குழப்பிறது? எங்கடை தொழிலைப் பழகவிடாமல் நீதான்ரி குழப்புறாய்... போடி...


பிலோமினா - கட்டின புருசன் போய்ச் சேர்ந்திட்டார். அவர் இல்லாமல் இந்தக் கிழவனோடை நான் படுகிறபாடு.... ஆரிட்டை சொல்லி அழ....

ஜோசேப் - எடியேய். நான் இருக்கிறன்தானே குத்திமாதிரி நானிருக்கிறன், உனக்குத் தெரியல்லையோ?

பிலோமினா - இருக்கிறியள், இருக்கிறியள். சந்தோசமா இருக்கிறியள். உங்களுக்கும், உங்கடை குடிக்குமா சேர்த்து நானெல்லோ உழைக்கிறன். பிள்ளைகள் கெதியா பள்ளிக்கூடத்துக்கு போங்கோ (பிலோமினா பிள்ளைகளை பள்ளிக்கூடத்துக்கு வெளிக்கிடுத்திவிடுதல், அவர்கள் செல்லுதல்)

பிள்ளைகள் - அம்மா Bye... Bye

ஜோசேப் - கண்டறியாத Bye.... Bye.... போட்டுவாறன் எண்டு சொல்ல வேண்டியதுதானே.



(பின்னணி - கடலில் Boat)

பாடல்

ஏலஏலோ... தத்தெய்தாம் ஏலஏலோ
ஏலஏலோ... தத்தெய்தாம் ஏலஏலோ

நடுவெய்யில் சாய்ந்ததுமே நேற்று நாங்கள் புறப்பட்டோம்.
கடுங் காற்றை எதிர்த்து நாங்கள் கடலிலுள்ளே
வழி அமைத்தோம் (ஏல ஏலோ)

பத்துப் பாகம் உயர வந்தோம் - ஏல ஏலோ ஏலேலோ
வலை படுத்தோம், கம்பாகம் கட்டினோம் - ஏல ஏலோ ஏலேலோ
ஏழு இஞ்சி முட்டுக்கண் வலை - ஏல ஏலோ ஏலேலோ
வழிச்சல் வலை, வந்து பட்டுது - ஏல ஏலோ ஏலேலோ
அறக்குளா, கட்டா, அறமாசு - ஏல ஏலோ ஏலேலோ
(ஏல ஏலோ தத்தெய் தாம்)

(ஜேக்கப்பின் Boat கரைக்கு வருதல், உதவியாளுடன் வலை இறக்குதல்.. பிலோமினா கரையில் நிற்கிறாள்)

ஜேக்கப் - பிலோமினா உன்ரை பிள்ளையள் பள்ளிக்கூடம் போட்டுதுகளே?

பிலோமினா - போகாமல்!.... நிக்க விடுவனே?

ஜேக்கப் - அது தானே... படிக்க வேணும். நல்லாப் படிக்க வேணும்.

(யூலியா, ஜெசிக்கா வருகை)
(ஜேக்கப், பிலோமினாவுக்கு மீன் தட்ட உதவுதல்)

யூலியா - ஜேக்கப் அண்ணை, என்ரை மனிசன்ரை Boat ஐ இன்னும் காணேல்லை?

ஜேக்கப் - உன்ரை புருசன் திருக்கைவலைக்காரனல்லே, கடல்லை உயரப் போனவன் வரக் கொஞ்சம் பிந்தும் தானே?

ஜோசேப் - அடிசக்கை... இண்டைக்கு உன்ரை புருசன் திருக்கையோடை, சுறா, உழுவை எல்லாம் அள்ளிக் கொண்டு வரப்போறான் பார்.

யூலியா - நீங்கள் சொல்லுறது பலிக்க வேணும். பட்ட கடனெல்லாம் கெதியா அடைக்க வேணும் மெல்லே.

ஜோசேப் - யூலியா இண்டைக்கு என்னை கவனிப்பாய் தானே?

யூலியா - அது தானே பிரச்சனை.

ஜோசேப் - சாராயம் குடியாட்டில் எனக்கு கை கால் இயங்குதில்லை.

பிலோமினா- ஐயா! உங்களுக்கு வெக்கம், மானம், ரோசம் ஒண்டும் இல்லையோ?

ஜோசேப் - இல்லை.... உன்னட்டை இருந்தால் தா... நீயும் குடிச்சுப்பார் வெக்கம், மானம், ரோசம் ஒண்டும் தெரியாது....

பிலோமினா- சீக்....




ஜேக்கப் - யூலியா உன்ரை புருஷன்ரை Boat ம் வருகுது...

(சின்னராசன், பேர்ணாட் உதவியாட்கள் சேர்ந்து வலை இறகுதல்)

சின்னராசன் - சீக்.... இண்டைக்கு பெரிசா வலையிலை ஒண்டும் படேல்லை.

ஜோசேப் - உன்ரை வலையிலை கனக்கப்படும் எண்டெல்லே காத்துக் கொண்டிருக்கிறன்.

பிலோமினா- நீங்கள் சொல்லி என்னண்டாலும் சரிவந்திருக்கே...?

ஜோசேப் - டியேய் என்னை மரியாதை கெடுத்தாதையடி

பிலோமினா- மரியாதை இருந்தால் தானே கெடுகிறதுக்கு

ஜோசேப் - டியேய்... ப் ... ப... எனக்கு வாயிலை வருகுது தூசணந்தான்... கதைக்காதேடி.

பிலோமினா- வாயைப் பொத்திக்கொண்டு போங்கோ

பேர்ணாட் - என்ன ஜேக்கப் உனக்கும் இண்டைக்கு மீன் அவ்வளவா படடேல்லே போலை இருக்கு?

ஜேக்கப் - ஏதோ... கொஞ்சம் சீலாதான் பட்டிருக்கு

ஜோசேப் - ஹி... ஹி... வலை முழுக்க பீத்தல் விழுந்திருக்கு மீன் என்னெண்டு பிடிபடும்... படிச்ச முட்டாள்..

ஜேக்கப் - நான் வலையைப் பொத்தித் தரட்டே.

சின்னராசன்- ஜேக்கப்புக்கு வலை பொத்த எங்கைநேரம். ஊர்த்துளாவாரம் பாக்கிற தோடை சரி....

ஜேக்கப் - ஜோசேப் மாமா.... இண்டைக்கே கெதியா பித்தல் வலையைப் பொத்தித் தருவியளே?

ஜோசேப் - நான் பொத்தித்தாறன். இப்ப உடனை காசு தரவேணும்.

பிலோமினா- சரியான சாராயக் கெடு.

ஜேக்கப் - பிலோமினா... நீ பேசாமல் இரு... இந்தாங்கோ காசு... கெதியா வந்து வலையைப் பொத்திவிடுங்கோ....

ஜோசேப் - அப்ப நான் கெதியா போயிட்டு வாறன் என்ன...

பிலோமினா - சுறாச் செட்டைகளை விட உழுவைச் செட்டைக்கு நல்ல டிமாண்ட். உந்த மீன் செட்டைகளைக் கொண்டுபோய் என்ன செய்யினம்....?

சின்னராசன் - யாழ்ப்பாண யாவாரிமார் எங்களிட்டை வாங்கி பச்சைச் செட்டைகளை ஒரு கிலோ 10, 11,000/- இற்கு கொழும்புக்கு அனுப்பிறாங்கள். பிறகு கொழும்பு யாவாரிமார் செட்டைகளை காய வைச்சு கிலோ 20,000/- இற்கு வெளி நாடுகளுக்கு அனுப்புறாங்கள்.

பிலோமினா - அது எனக்குத் தெரியும். வெளிநாட்டிலை உந்தச் செட்டைகளை என்ன செய்யினம்?

சின்னராசன் - அது எனக்குத் தெரியாது.

ஜேக்கப் - சூப்வைச்சுக் குடிக்க திறமானசாமான் எண்டு சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறன்.

பிலோமினா - வெளிநாட்டுக்காரன் கெட்டிக்காரன்...

ஜேக்கப் - ஓ... எங்களைச் சுரண்டி எல்லாத்தையும் காசாக்கிறதிலை கெட்டிக்காரங்கள்தான். சரி அதைவிடு.... பேர்ணாட் நீ தங்கூசிவலை பாவிக்கிறது எங்கடை தொழிலுக்கு நல்லதில்லை கண்டியளே. தயவு செய்து அதை விட்டிடு.

பேர்ணாட் - டேய்... எனக்கு நல்லா மீன் படுகுதெண்டு உனக்கு வயிறு எரியுதேடா?

ஜேக்கப் - இல்லை பேர்ணாட் குஞ்சுமீன்களையெல்லாம் வழிச்சுக்கொண்டு வந்தால், நாளைக்கு எங்களுக்கு கடல்லை மீன் இல்லாமல் போயிடும்... தங்கூசி வலையாலை மீன்பிடியாதை.

பேர்ணாட் - டேய் எங்கடை கடலிலை மீன் பிடிக்கக்கூடாது எண்டு எனக்குச் சொல்ல நீ ஆரடா....? வடுவா... (பேர்ணாட் அடிக்கச்செல்லுதல். மனைவி ஜெசிக்கா பிடிக்கிறாள்)




ஜேக்கப் - பேர்ணாட்... கடல்லை உன்னை மீன் பிடிக்க வேண்டாம் எண்டு நான் எப்படிச் சொல்ல ஏலும். குஞ்சு மீன்களை யெல்லாம் வழிச்சுக்கொண்டு வந்தால் நாளைக்கு நீயும் மீன் பிடிக்க ஏலாமல் போயிடும்... தங்கூசி வலையாலை மீன் பிடிக்க வேண்டாம் எண்டுதான் சொன்னான்.

யூலியா - பேர்ணாட்டுக்கு மூக்கு நுனியிலை உடனை கோபம் வந்துவிடும் - ஜேக்கப் சொல்லுறது சரிதானே. தங்கூசி வலையை விடுங்கோ... டிஸ்கோவலை, அறக்கொட்டியான்வலை, முட்டுக்கண்வலை, திருக்கைவலை, சூடைவலை ... எத்தினை வலை இருக்கு. (ஜோசேப் வந்து பார்த்துக்கொண்டிருக்கிறார்)

பேர்ணாட் - யூலியா..... நீ .... சொல்லுறதாலை விடுறன்.

ஜெசிக்கா - நான் சொன்னால் கேக்க மாட்டியள் யூலியா சொன்னால் கடலுக்கையும் குதிப்பீங்கள் போலை இருக்கு... சீக்..

பேர்ணாட் - பொத்தடி வாயை! கதைச்சியோ பல்லுக்கொட்டுவன்

ஜோசேப் - பேர்ணாட்! கள்ளு வேணும் மெண்டால் வடலிப்பனையை வளர விட வேணும். மீன் வேணுமெண்டால் குஞ்சு மீன்களை வளரவிட வேணும். என்ன... விளங்குதே...?

பேர்ணாட் - கிழவா.. நொட்டைக்கதை கதைச்சியோ.. திருக்கைவாலாலை அடி வாங்குவாய்... கவனம்...

யூலியா - பேர்ணாட் அண்ணை. கிழவன் வெறியிலை கதைக்குது... வயதுக்கு மூத்ததுகளோடை இப்படியே கதைக்கிறது....?

பேர்ணாட் - ஜோசேப் ஐயா குறை நினைக்காதிங்கோ.

ஜோசேப் - நான் குறைநினைக்கேல்லை. ஊருலகத்திற்கு வடிவாய்த் தெரியும் இவங்களின்ரை வண்டவாளங்களைக் கேட்டாச் சொல்லுவினம்.

ஜெசிக்கா - அட இஞ்சை பாரன் யூலியா சொன்னால் சரி. இவர் கேட்கிறாராம்.

பேர்ணாட் - கதைச்சியோ, கொலை விழும். ஜேக்கப் மாதிரி... நான் லூஸ் இல்லை...

சின்னராசன் - ஜேக்கப் கவலைப்படாதை. பேர்ணாட் அப்பிடித்தான் கதைப்பான்... மோடன்...

ஜேக்கப் - பேர்ணாட் தான் அப்பிடியெண்டால் ஜெசிக்காவுக்கு என்ன வந்தது?

சின்னராசன் - சாடிக்கு ஏற்ற மூடி...

ஜோசப் - நல்ல சோடி

யூலியா - ஜெசிக்கா.. பேர்ணாட்டோடை வாழ்ந்து மரத்துப்போனாள் பாவம்.

சின்னராசன் - ஜேக்கப் உன்ரை குணம் இந்த ஊருக்கே தெரியும். எங்கடை பிள்ளைகளை நீ படிப்பிக்க பாடுபடுகிறதும் எங்கடை சமூகம் முன்னேற வேணுமெண்டு நீ பாடுபடுறதும்... வீண் போகாது.

ஜோசேப் - உவன் விசரன் நல்லாப் படிச்சுப்போட்டு கிடைத்த உத்தியோகத்தையும் விட்டுட்டு நிற்கின்றான். நான் படிக்கேல்லை எழுத வாசிக்கத் தெரியாது. என்ரை பேரப்பிள்ளைகளை நீ படிப்பிக்க வைச்சுப் போடுவாய் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு.

ஜேக்கப் - எனக்கு நம்பிக்கை இல்லை!

**பாடல்**

பள்ளிக்கூடம் போகவில்லை
படிப்பு ஏதும் படிக்கவில்லை
துள்ளி நின்ற காலங்கள்
தூரவிட்டு... போனதடா....

சொல்லித்தர ஆளும் இல்லை
சொல்லுக் கேக்க மனமும் இல்லை
உள்ளம் இன்று உணருதையா
பள்ளிப் படிப்பின் பெறுமதியை

(பேர்ணாட், ஜெசிக்கா வெளியேறுதல்)

(கடற்கரையில் - ஜேக்கப், பிலோமினா சின்னராசன், யூலியா, பிள்ளைகள் ஓடி ஆடி விளையாடுகின்றனர்)

யூலியா - ஜேக்கப் அண்ணை எங்கடை ஆம்பிளையள் கனபேர் Boat இல்லாமல் "வாரதுக்கு வேலை" செய்து கஷ்டப்படுயினம். அரசாங்கத்திலை கடன்பட்டு ஒரு றோலர் (Roller) வாங்கினா என்ன?

ஜேக்கப் - சீ... சீ... றோலர் உதவாது.

யூலியா - ஏன் அண்ணை. கொஞ்சப்பேருக்கு நல்ல வேலை கிடைக்கும், ஆழ்கடல் மீனும் பிடிக்கலாம் தானே?

ஜேக்கப் - றோலர் சின்னமீன் பெரியமீன் எண்டு பாராமல் எல்லாத்தையும் வழிச்செடுத்துப் போடும்.....

சின்னராசன் - வழிச்செடுத்துவிட்டால் பிறகு நாங்கள் பிடிக்க கடல்லை மீன் இருக்காது.

ஜேக்கப் - இப்ப நீர்கொழும்புப் பக்கத்திலை இருந்து எங்கடை கடலிலை மீன் பிடிக்க வாறாங்களெல்லே... அவங்களின்ரை "ராங்போட்" (Tank Boat) எப்படி...?

சின்னராசன் - அது திறம்.... 2, 3 கிழமை கடலுக்கை நிண்டு மீன் பிடிக்கலாம். கூலர் (Cooler) வசதியும் இருக்கு.

ஜேக்கப் - அவங்கள் 10 பாகத்து அங்காலை போய் மீன் பிடிக்கலாம். எங்களோடை வந்து உரஞ்சுறாங்கள், வலையை வெட்டி விடுறாங்கள்... சொன்னாலும் கேக்கினமில்லை....

பிலோமினா - ஜேக்கப் நாங்களும் Tank Boat எடுக்கலாம் தானே....?


ஜேக்கப் - எடுக்கலாம் அதை கரைக்குக் கொண்டுவரேலாதுதான் கடலுக்குள்ள தான் விட்டுக் கட்டவேணும். இது இப்ப நடக்கக்கூடிய காரியமே...
(பிள்ளையள் சத்தம் போட்டு கத்தியோடி விளையாடுதல்)

பிலோமினா- பிள்ளையள் அங்காலை போய் விளையாடுங்கோ. நாங்கள் கதைக்கிறது தெரியேல்லையே. கண்ணுக்குள்ளை மண் போகப்போகுது.

ஜேக்கப் - பிள்ளையள் எண்டால் அப்படித்தான்... ஏன் கோவப்படுறாய்..?

சின்னராசன்- அதுசரி.... ஆனால் பிள்ளைகளுக்கும் எப்பிடி நடக்கிறதெண்டு பழக்கவழக்கம் தெரிய வேணும்.

யூலியானா - அதை நாங்கள் பிள்ளைகளுக்கு சொல்லிக் குடுக்க வேணும்.




பிலோமினா- கடற்கரை பலரும்வந்துபோற இடம்.... நாங்கள் அதை பக்குவமாக வைத்திருக் வேணும். பண்பாடா நடந்து கொள்ள வேணும்.

சின்னராசன்- அப்பதான் அக்கம் பக்கத்து ஊர்ச்சனங்கள் எங்களை மதிக்கும்....

ஜேக்கப் - அது சரி... அது சரி... நாலு பேர் மதிக்கத்தக்கதாக வாழ வேணும். இந்த வரியம் சவுக்கு மரங்களைக் காணியெல்லாம் நட வேணும்.

சின்னராசன்- கல்லைப் போட்டு நிலமட்டத்தை உயர்த்த வேணும் நிலமட்டம் உயரமாய் இருந்தால் சுனாமி ஆபத்து குறையும். சவுக்கு மரங்களும் அலைகளைத் தடுக்கும், கடுங்காற்றையும் தடுக்கும்.

யூலியானா - நல்ல சுவாத்தியமாகவும் இருக்கும்...

பிலோமினா- கடற்கரையும் பாக்க வடிவாக இருக்கும்.
(ஜோசேப் வருதல்)

ஜோசேப் - பஞ்சப்பரதேசிகள் எல்லாம் சேர்ந்து மாளிகை கட்டப் போயினமாம் கனவு காணுறாங்கள். நடக்கிறதுகளை எல்லோ நினைக்க வேணும்.
(சபையைப் பார்த்து) - உவன் ஜேக்கப் படிச்ச விசரன் எல்லாரையும் விசராக்கப் போறான் கவனம்.

பிலோமினா - ஐயா... சும்மா வெறிக்கதை கதையாதையுங்கோ.... நாங்கள் கதைக்கிற இடத்துக்கு உங்களை ஆர் வரச் சொன்னது?

ஜோசேப் - யேய் நான் இஞ்சை வரக்கூடாது எண்டு சொல்லுறதுக்கு நீ ஆரடி?

பிலோமினா - கத்தாதையுங்கோ..... மானம் போகுது.

ஜோசேப் - நான் கத்துவன்... ஆ.... ஓ... (திடீரென ஜெனிற்றா... ஜோசெப்பின் காலைக் கட்டிப்பிடித்து அழுதல்)

ஜெனிற்றா - அம்மய்யா.... கத்தாதையுங்கோ... எல்லாரும் என்னை நக்கலாப் பாக்கினம்... (ஜோசேப்... ஜெனிற்றாவை குனிந்து தூக்கி விடல்...) அம்மய்யா.....




ஜோசேப் - என்ரை பேரப்பெட்டை....
ஜெனிற்றாக்குஞ்சு.....
அழா தேணை
நீ...... அழக்கூடாது....
நீ அழ..... நான் விடமாட்டன்

ஜெனிற்றா - அம்மய்யா வாங்கோ... வீட்டை போவம்...

ஜோசேப் - வாறன்.... ராசாத்தி.......
- என்ரை ராசாத்தி நீ பயப்பபிடாதேணை
- இனி நான் குடிக்கமாட்டன். குடிச்சால் தானே சத்தம் போடுறன்.
- இனி நான் குடிக்கமாட்டன்....

(கபடி விளையாட்டுக் காட்சி)

பாடல்

குக்குடு குடுகுடு குடுகுடு குடுகுடு சடுகுடு விளையாட்டு
தத்திடதாம் தெய், தத்திடதாம்தெய் கபடி விளையாட்டு
சடுகுடு விளையாட்டு
கபடி விளையாட்டு
சித்திரப் பிள்ளைகள் மகிழ்ந்து ஆடும் சடுகுடு விளையாட்டு
சுந்தர வெள்ளை மண்ணில் ஆடிடும் கபடி விளையாட்டு
சடுகுடு விளையாட்டு
கபடி விளையாட்டு
மூச்சுப்பயிற்சி விளையாட்டு..... ஆ..... ஆ....
மூளை உரம் பெறும் விளையாட்டு ஆ... ஆ....
சடுகுடு விளையாட்டு
கபடி விளையாட்டு
உடல் உறுதியின் உறைவிடம் விளையாட்டு ஆ.... ஆ....
உள்ளத்தின் உறுதியை உயர்விக்கும் விளையாட்டு ஆ... ஆ....
சடுகுடு விளையாட்டு
கபடி விளையாட்டு


(ஜெனிற்றா சடுகுடு சொல்லி இறங்கி ஆடுகின்றாள். ஏனையோர் அவளை பிடித்து விடுகின்றனர்)

ஜெனிற்றா - ஐயோ... ஐயோ...!
பெரியண்ணா... பெரியண்ணா
பெரியண்ணாவைப் பிடியுங்கோ
அங்கை.... அங்கை... பெரியண்ணா
பெரியண்ணா.... பிடியுங்கோ.
(மற்றப் பிள்ளைகள் பயந்து விலகிநிற்கின்றனர்)

அன்ரன் - ஜெனிற்றா... தங்கைச்சி யேய்... ஏன் கத்துறாய்?

பிலோமினா- பிள்ளை ஜெனிற்றா...?

ஜேக்கப் - ஜெனிற்றா... ஏன் இப்பிடி பயந்து குழறுகிறாய்... ஜெனிற்றா?




**ஜெனிற்றா** - ஆ.... அம்மா... அம்மா...
பெரியண்ணா... அங்கை .... அங்கை பிடியுங்கோ...
அம்மா...... அம்மா......

**பிலோமினா** - பெரியண்ணாவை நான் எப்பிடிப் பிடிக்கிறதடி......? ஐயோ... என்ரை பெரியதம்பி... என்ரை மூத்த பிள்ளை....

(ஜேக்கப் ஜெனிற்றாவை அணைத்துப் பிடித்துக் கொள்கிறான். முகத்தில் தட்டுகிறான்)

**யூலியா** - ஜெனிற்றா... என்னடி இப்ப என்ன நடந்தது? இதுக்குப்போய் அழுது கொண்டிருக்கிறாய். நாங்கள் இருக்கிறம்தானே.
(ஜெனிற்றா பயத்துடன்.... ஆ.... ஆ....)

**பிலோமினா** - ஐயோ.... ஆண்டவரே.... நான்... என்ன செய்வேன். பெரியவனை..... நான் எங்கை போயக்கொண்டருவேன்....? அவன் போய் ஐந்து வருஷமாச்சே..... கடலம்மா... எங்கேடி என்ரை மூத்த பிள்ளை....?

**பாடல்**

கருணைமழையே யேசுபாலா
கண்கள் திறவாயோ
கண்கள் கலங்கும் ஏழை மகளின்
துன்பம் தீராயோ

(கருணை)

அன்னையினை நான் இழந்தேன்
அறியாப்பருவத்திலே
ஐயாவால் நான் வளர்த்தேன்
ஆய்க்கினையின் அலைகளிலே

(கருணை)

போர்க்கால கடலினுள்ளே
வலை வீசி நின்ற மன்னன்
மார்பிலே குண்டுபட்டு வந்து
மடிந்தானே நொடிப்பொழுதில்

(கருணை)

பேரலையின் தாண்டவத்தில்
பெற்ற மகன் தனை இழந்தேன்
சீரழிந்த வாழ்க்கையினை
சீர்ப்படுத்த தாமதமேன்

போனது போகட்டும் பொறுக்கின்றேன்....
பொன் மகள் இவளை மாற்றிவிடு
அலை கடல் துரும்பாய் நான் ஆனேன்
அருளின் ஒளியே வழிகாட்டு......

ஜேக்கப் - பிலோமினா அழுகையை நிப்பாட்டு... ஜெனிற்றாவுக்கு ஒண்டுமில்லை.

பிலோமினா - அப்ப ஏன் இப்பிடிக் கத்தினவள்?

ஜேக்கப் - இது 05 வருடத்துக்கு முன்னம் அழவேண்டிய அழுகை.... அப்ப அதிர்ச்சியிலை அழாமல் உணர்ச்சிகளை அடக்கி வைத்திருக்கின்றாள்.... இண்டைக்கு அழுகை வெளிப்பட்டு உணர்ச்சிகள் கண்ணீரிலை கரையத் தொடங்கீட்டுது.... அவள் அழட்டும். அவளுக்கு ஒன்டுமில்லை.

ஜெனிற்றா - பெரியண்ணா... பெரியண்ணா.... அம்மய்யா... இஞ்சை வாங்கோ...

ஜோசேப் - ஜெனிற்றா.... ஜெனிற்றாக்குட்டி... என்னம்மா....
- என்னைக் கத்தக்கூடாது எண்டு சொல்லிப்போட்டு நீ ஏனம்மா கத்துறாய்.....?

ஜெனிற்றா - அம்மய்யா... இனி.... கத்தமாட்டன்.... பெரியண்ணாவின்ரை நினைவு வந்தது. அழவேணும் போலை இருந்தது..... அது தான் ......

ஜோசேப் - அப்ப அழு... அழு.... நானும் அழுகிறன். கொம்மாவும் அழட்டும். அன்ரன் அண்ணாவும், அழட்டும் எல்லாரும் அழுவம்.

ஜெனிற்றா - அம்மய்யா நீங்கள் அழாதேங்கோ....
- அம்மா... அழாதேங்கோ....
- எனக்கொண்டுமில்லை...

பேர்ணாட் - ஒண்டுமில்லையாம்... ஜெனிற்றாவுக்கு மூளை குழம்பிப் போச்சு.... பிலோமினான்றை கொழுப்புக்கு நல்லா வேணும்....

ஜோசேப் - டேய்... என்னடா சொல்லுறாய் (பேர்ணாட்டுக்கு ஜோசேப் அடிக்கப் போதல் - இருவரையும் பிடித்தல்)

பேர்ணாட் - 05 சதத்துக்கு வழியில்லாத குடிகாறக் கிழட்டு நாய்.... எனக்கு அடிக்க வாறியோ...

பிலோமினா - ஐயா... நீங்கள் ஒண்டும் கதைக்காதையுங்கோ...

பேர்ணாட் - நீ என்னடி எனக்கடிக்கப் போறியோ......?

பிலோமினனா - நான் ஏன் அண்ணை உங்களுக்கு அடிக்கிறன்...? அண்ணையை விடுங்கோ... ஐயாவுக்கு அடிச்சுப்போடாதைங்கோ. எனக்கடியுங்கோ.... ஒரு கன்னத்திலை இல்லை மற்றக் கன்னத்திலையும் அடியுங்கோ... ஏன் பேசாமல் நிக்கிறியள் அடியுங்கோ அண்ணை...

பேர்ணாட் - நான் ஏன் பிலோமினா உனக்கடிக்கிறன். பிலோமினா உன்னிலை இருக்கிற கோவத்திலை ஜெனிற்றாவை அப்பிடிச் சொல்லிப்போட்டேன்... கோவிக்காதை.....

(ஜேக்கப், பேர்ணாட்டை அணைத்தல்...)

பிலோமினா - ஐயா... நான் கருவாட்டு வியாபாரம் செய்து இனி உழைக்கப் போறன்... எனக்கு நீங்கள் உதவியா இருந்தால் காணும்... என்ரை பிள்ளையளை படிக்க வைச்சுடுவன். ஜேக்கப்பின்ரை இலட்சியங்களும் நிறைவேற உதவியா இருப்பன்....

ஜேக்கப் - பிள்ளையள் கொண்டுவாங்கோ (பிள்ளைகள் ஒருகையில்) சவுக்கு மரமும், மெழுகுவர்த்தியும் கொண்டுவரல்)
(ஜேக்கப் ஒன்றை வாங்கி... ஜெனிற்றாவிடம் கொடுத்தல்....)
இந்தாம்மா ஜெனிற்றா.... உன்ரை பெரியண்ணன் சுனாமியிலே போன நினைவா.. இதை நடு...

- இந்தா அன்ரன்...
- பிலோமினா ...... இந்தா....

ஜோசேப் - எனக்கும் ஒண்டு தாவன் ஜேக்கப்

ஜேக்கப் - இந்தாங்கோ.....
- கடற்கரை முழுக்க எல்லாரும் மரங்களை நடுங்கோ.... சுனாமியிலை போனதுகளின் நினைவாக வளரட்டும்.
(மரங்களை நடுதல்)
(தீபங்களை ஏற்றுதல்)

ஜேக்கப் - சுனாமியிலை இறந்தவர்களின் ஆன்மசாந்திக்கு இறைவனிடம் மௌனமாக இறைஞ்சுவம். நடந்ததுகளை நினைச்சு சோராமல் மீள எழுவம்.

பாடல்


ஒளி நமக்கு வேண்டும்
கனவுகள் எல்லாம் மெய்ப்பட வேண்டும்
தேவனே அருள்புரிவீர்.
நினைவுகள் எல்லாம் நலம் பெற வேண்டும்

தேவனே அருள்புரிவீர்
ஒளி நமக்கு வேண்டும்

சாதியும், மதமும், இனமும் கடந்ததோர்
நினைவு எமக்கு வேண்டும்
ஆதியும், அந்தமும், அனைத்துமே நீயே என்று
நினைவு எமக்கு வேண்டும்
ஒளி நமக்கு வேண்டும்

பாவிகள் எம்மை பாசம் கொண்டே
அரவணைக்க வேண்டும்
மேவிடும் வாழ்வை நாமும் அடைந்திட
கரம் நீட்ட வேண்டும்
ஒளி நமக்கு வேண்டும்.

*** முற்றும் ***




தொ(ல்)லைக்காட்சி

# தொ[ல்]லைக்காட்சி

## தமிழ்தின விழா நாடகம்
## 2008

பாத்திரங்கள்

01. கிழவன் - தாய் 1, தாய் 2 இன் தகப்பன்

02. தாய்1 - TV மோகம் கொண்ட பெண்

03. தாய் 2 - சாதாரண குடும்பப்பெண்

04. சிறுவன் - தாய் 2 இன் மகன்

06. 5, 6 சிறுவர்கள்

07. தாய்1 இன் பிள்ளைகள்

08. தாய்1, தாய்2 இன் பிள்ளைகளின் நண்பர்கள்

09. கனவுக்கன்னி


பாடல்

தீராத விளையாட்டுப் பிள்ளைகள் நாங்கள்
பாராத படம் இல்லை T.V யில்

சோராமல் பகலோடு இரவாய் T.V
பாராமல் உறக்கம் வாராது

வீராதி வீரர்கள் நாங்கள் நித்தம்
போராடித் தடு மாறுகின்றோம்

பாருங்கள் எம் வீட்டு நிலையை - பதில்
கூறுங்கள் தேன் கொண்ட மலர்காள்




பாடல் படிக்கும்போது 1வது நபர் எழுந்து T.V க்குக் கிட்டச்சென்று தொட்டுக்கும்பிட்டு பின் DC பகுதிக்கு வந்து T.V தாயே சரணம் சரணம். நீயின்றி நானில்லை... என்று கூறிச் சென்று அமர்வார். (அடுத்து வரும் வரிகளை பாடும்போது T.V யைக்காட்டி, பின் Remote ஐ பாவிக்க பிள்ளைகள் அடிபடல் - Chanal மாத்த அடிபடல்...) Remote Control அழுத்த உரக்கக்கத்தல் - மாடு, ஆடு, நாய், போன்ற மிருகங்களை ஊமமாக செய்து கத்துதல், சிரித்தல்,ஆடுதல். (கனவுக்கன்னி T.V யில் தோன்றுதல்)

பாடல்

தேடி உன்னைச் சரணடைந்தோம்
எங்கள் T.V தாயே
அம்மா எங்கள் T.V தாயே
கோடி முறை வணங்கி நின்றோம்
எங்கள் T.V தாயே
அம்மா எங்கள் T.V தாயே

பாடி உன்னை பணிந்து நின்றோம்
எங்கள் T.V தாயே
அம்மா எங்கள் T.V தாயே
கூடி உன்னை அடைய வந்தோம்

எங்கள் T.V தாயே - அம்மா
நாடி உன்னை நாம் அடைந்தோம்
நாகரீகத் தாயே
அம்மா நாகரீகத்தாயே
வாடி அம்மா தாடி அம்மா
நித்தம் தரிசனமே
அம்மா நித்தம் தரிசனமே

கிழவன் - ஐயையோ ஐயையோ இந்த சனியனை நிப்பாட்டுங்கோ
(ஆடியவர்கள் ஓடிச்சென்று இருத்தல். T.V நிறுத்தப்பட கனவுக்கன்னி இறங்கி மறைதல்)
அனுபவப்பட்ட மனிசன் நான்
ஊருலகம் அறிஞ்சவன் நான்
ஓய்வு பெற்ற அதிபர் நான்
நாலு பேர் மதிக்க வாழ்பவன் நான்
நான் சொல்லுறதை தயவு செய்து கேளுங்கோ

பாடல்
(கிழவன்) முயற்சி செய்து படியுங்கோ
முன்னேறப் பாருங்கோ - இந்த
மூதேவி முன்னாலை
மூச்சிழந்து மடிய வேண்டாம்

தாய் 1 - என்னது எங்கடை T.V மூதேவியோ? வர... வர... கிழவனுக்கு வாய்க்கொழுப்பு மெத்திப் போச்சு.

தாய் 2 - அக்கா... என்ன இது எங்கடை அப்பாவை ஏன் இப்பிடித் திட்டுறீங்கள்?

கிழவன் - நாள் முழுக்க குடும்பத்தோடை T.V க்கு முன்னாலைதான். இது நல்லதே....?

தாய் 1 - நல்லது எது, கெட்டது எது எண்டு எனக்குத் தெரியும். நீங்கள் எனக்குப் படிப்பிக்க வேண்டாம்..... போட்டு வாங்கோ...

தாய் 2 - கெடுவார் கேடு நினைப்பார். சொல்லிச் சொல்லி எனக்கு அலுத்துப் போச்சு. நீ திருந்தமாட்டாய்... நான் போறன்.

கிழவன் - நீ கெட்டாலும் சரி.... என்ரை பேரப்பிள்ளைகள். இளம் குருத்துக்கள்... அதுகளைக் கெடுக்காதை.

தாய் 1 - அப்பா... சும்மா தொண தொணத்துக் கொண்டு நிக்க வேண்டாம். என்ரை மனிசன் வெளிநாட்டிலை இருந்து காசு காசா அனுப்புறார். என்ரை பிள்ளையள் படிச்சுத்தான் முன்னேற வேண்டுமெண்டில்லை.

பாடல்

(கிழவன்) எத்தினை தடவைகள்
புத்திகள் சொன்னாலும்
சத்தங்கள் போட்டு
சண்டைக்கு வந்தால்
சரியாகிப் போகாது
பிழையான கருமங்கள்.

படிப்பும் கெட்டுது
பண்பாடும் கெட்டுது
இந்த மூதேவி
T.V யாலை

தாய் 2 - தம்பி அந்த குடும்ப விளக்கு நிகழ்ச்சியைப் போடடா (T.V இல் பாடல் காட்சி)

பாடல்

கறைகளில்லா மஞ்சம்
குழந்தை நெஞ்சமையா
குறி தவறிச் செல்வதோ
அன்னை, தந்தை வளர்ப்பினால் ஐயா

அருமையாக வளர்த்தெடுக்க
அர்ப்பணிப்பு வேண்டுமே ஐயா
பாதைகள் மாறாது செல்வதற்கோ
அர்ப்பணிப்பு வேண்டுமே ஐயா
பெருமை வழி நடத்தல் வேண்டுமே ஐயா
அருமையான வழிநடத்தல் வேண்டும்
பெருமையெல்லாம் தேடி வரும்
பிள்ளை பெற்ற பயன் நாடி வரும்
அன்னை தந்தை அர்ப்பணிப்பிலே
அருமையான வழி நடத்தலிலே
அன்னை, தந்தை வழி நடத்தலிலே

கிழவன் - நல்ல கருத்துள்ள பாட்டு
பெற்றாரும், பிள்ளைகளும் இதைக் கட்டாயம் கேக்க வேண்டும்.
பிள்ளை... (தாய் 1 ஐப் பார்த்து) பாட்டைக் கேக்கிறியே

தாய் 1 - கண்டறியாத பாட்டு Channel ஐ மாத்தடா.
(ஒருவன் Remote இல் அழுத்தி Channel ஐ மாத்தல்)

(Channel மாற்றல், T.V பீடத்தில் பெண் ஒருவர் பாட்டுக்கு Break Dance ஆடுகிறார். தாய்1 உம் பிள்ளைகளும் Break Dance ஆடிக்கொண்டிருக்கிறார்கள்)

(திடீரென கிழவன் வருதல்)

கிழவன் - கெடுகுடி சொற் கேளாது.
கெடு குடி சொற் கேளாது.

மெத்தையிலை வைச்சாலும்
செத்தைக்கு போறது செத்தைக்கை தான்

எண்டாலும் விடமாட்டன்
அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
எண்டது பொய்யாகுமோ?

தாய் 2 - நல்லதுக்கு காலமில்லை. நல்லதைச் சொன்னால் சின்னப் பிள்ளையள் கூடக் கேக்குதுகள் இல்லை.

கிழவன் - இந்தக் காலத்திலை கூடாத விசயங்களைத்தான் நல்லது எண்டு பெற்றார் பிள்ளைகளுக்குப் பழக்கிப்போட்டினம்.

தாய் 1 - TV பாக்கிறது எவ்வளவு சந்தோசம் தருகுதெண்டு உங்களுக்குத் தெரியாது. ஆக செய்தி கேட்கத்தான் உங்களுக்குத் தெரியும்.

- பொதிகையிலை வாற விவசாய நிகழ்ச்சி, நாட்டார் நிகழ்ச்சி, அது இது எண்டு, அலுப்புப் பிடிச்ச விசயங்களை பாக்கவிடேல்லை எண்டு உங்களுக்கு என்னிலை கோவம்.
(திடீரென கைக்கடிகார நேரத்தைப் பார்த்தல்)

- அட 07.00 மணியாச்சு கலைஞர் TV யிலை நல்ல Tele Drama இருக்கு Chanel ஐ மாத்துங்கோ.
(Channel மாற்றுதல்)

- (TV பீடத்தல் ஒருவர் நடிக்கிறார்) இக்காட்சி நாடகப்போட்டியில் 12 பேர் மட்டும் நடிக்கலாம் என்ற விதிக்கமைய ஒருவர் நடிப்பதற்காக எழுதப்பட்டது. மற்றும்படி இரு பெண்கள் நடிப்பதற்காகவே உரையாடல் விரும்பத்தக்கது)

- இண்டைக்கு அவனை உயிரோடை விடக்கூடாது. இவன் இருக்கும் வரை இந்தக் குடும்பத்தின்ரை சொத்துக்கள் எனக்குக் கிடைக்காது. இண்டைக்கு வரட்டும்.

X - தம்பி.... தம்பி....

Y - ஆர் அண்ணாவே.... வாங்கோ வாங்கோ உங்களைப் பற்றித்தான் யோசிச்சுக் கொண்டிருக்கிறன். உள்ளே போய் இருங்கோ அண்ணா... நான் Tea எடுத்துக்கொண்டு வாறன்.
(மனதுக்குள்) இரு.... இரு.... Tea க்குள்ளை இந்த நஞ்சைக் கலந்து

இனிக்க இனிக்கத் தாறன்... இண்டையோடை உன்ரை ஆட்டம் குளோஸ்.
(தாய் 2 வருதல்)

தாய் 2 - அக்கா... உந்த நாடகத்தை நிப்பாட்டுங்கோ. சின்னப் பிள்ளைகளுக்கு இந்த விசயங்கள் கூடாது.
நிப்பாட்டுங்கோ அக்கா.

தாய் 1 - இது எங்கடை TV
என்ரை மனிசன் வெளிநாட்டிலை இருந்து அனுப்பின TV
இந்தளவு பெரிய TV இந்த ஊரிலை வேறை எங்கை இருக்கு?
நாடகத்தைப் பார்க்கிறதெண்டால் பார்.... இல்லாட்டில் ஓடு.... வளவளத்துக்கொண்டு, நான் TV பார்க்கிறதைக் குழப்பாதை.

கிழவன் - நஞ்சு குடுக்கிறது. நம்பிக்கைத் துரோகம் செய்யிறது. கத்தி எடுக்கிறது, கழுத்தறுக்கிறது, கண்ட உடனை காதலிக்கிறது. பள்ளிக்கூடத்தைக் காதல் கூடமாக மாத்துறது. பழி தீர்க்கிறது. அம்மணமா நிண்டு ஆடுறது இதுதான் எங்களுக்கு இப்ப தேவை. எங்கடை சமூகம் படுகிற கஷ்டங்களைப் பற்றி ஒருதருக்கும் கவலை இல்லை. விஞ்ஞானம் வளருதாம்... மனிசன் தேய்ஞ்சு தேய்ஞ்சு காட்டு வாசிகளாகி போனான்.

(சிறுவன் எழும்பி வருதல் தாய் 2 இடம்)

சிறுவன் - அம்மா....... எங்கடை கோவக்காரனுக்கு நஞ்சுகுடுத்து சாகக் கொல்லலாமே? நஞ்சு குடுத்தால் செத்துப் போடுவானே?

தாய் 2 - அப்பிடி ஒண்டு மில்லை. ஆரடா... உனக்குச் சொன்னது? TV யிலை கண்டதுகளையும் பாத்திட்டு வந்து என்ரை கழுத்தறுக்காதை பேசாமல் போய் படி இல்லாட்டில் விளையாடு, அங்கை போய் TV பார்க்காதை...

சிறுவன் - நஞ்சு குடுத்து ஆக்களைச் சாகக்கொல்லலாம். இது எனக்குத் தெரியும். உங்களுக்குத் தெரியுமே...?
ம்... நஞ்சை எங்கை வாங்கிறது... ம்..... ம்...... மருந்துக்கடையிலை வாங்கலாம்.

கிழவன் - டேய் இஞ்சைவா (செவியில் பிடித்தல்) நஞ்சு வாங்கப் போறியோ..?

சிறுவன் - ஆ.... ஆ... ஐயோ... ஐயோ... நோகுது... அம்மப்பா... நோகுது...

கிழவன் - அவங்களோடை இனிச் சேருவியே ?

சிறுவன் - இல்லை... அங்கை போய் TV பாப்பியே?

சிறுவன் - இல்லை... இல்லை...

கிழவன் - போடா (முதுகில் ஓங்கி அறைதல்)
கெடுகுடி... சொற்கேளாது... ஆனாலும் விடமாட்டன்... என்னாலை முடிஞ்சவரை எதிர்ப்பன்.
(இன்னொரு சிறுவன் எழும்பி வந்து கொப்பியுடன் அமருகிறான்)

சிறுவன் - அம்மா... ரீச்சர் வீட்டுக்கணக்குத் தந்தவ. செய்யத் தெரியேல்லை. வந்து சொல்லித்தாங்கோ...

தாய் 1 - உனக்குத் தந்த கணக்கை நானே செய்யிறது? செய்து.. செய்து பார் சரிவரும்.

சிறுவன் - அம்மா ரீச்சர் அடிப்பா... எப்பிடிச் செய்யிறதெண்டு சொல்லித் தாங்கோ.

தாய் 1 - T.V யிலை நல்ல படம் போகுது முடியட்டும். அதுக்குப்பிறகு வந்து சொல்லித் தாறன். அதுமட்டும் நீ வேறை பாடம் படி. படிக்கிறதுக்கு எத்தனை பாடம் இருக்கு? (தாய் 2 வருதல்)

தாய் 2 - அப்பு கணக்கை நான் சொல்லித் தரட்டேடி.

சிறுவன் - வேண்டாம்.. வேண்டாம்... அம்மாதான் வேணும்.

தாய் 2 - அழாதை வீட்டுக்கணக்குச் செய்யாட்டில் ரீச்சர் கோவிப்பா நான் சொல்லித்தாறன். (சிறுவன் அழுதபடி செய்தல்)

அழாதை கண்ணைத்துடை, நீ கெட்டிக்காரன்

சிறுவன் - ரீச்சரும் அப்பிடித்தான் சொல்லுறவ

தாய் 2 - பாத்தியே... நீ சரியான கெட்டிக்காரன். எந்த நேரமும் TV பார்க்காதை படிக்க வேணும் என்ன...?

சிறுவன் - ஓ (தலையாட்டல்)

தாய் 2 - சாப்பிட்டியே...? கொம்மா வரச் சாப்பிடு... (தாய் 2 போதல்....)

சிறுவன் - அம்மா... அம்மா.... (அழுதபடியே அந்த இடத்தில் படுத்து உறங்குகிறான்)

**பாடல்**
(கிழவன்)

முளைக்கின்ற காலமிது
பெற்றவளே தாயே
அநியாயம் ஆகுதணை
பெற்றவளே தாயே
ஆரிடம் போய் எடுத்துரைப்பேன்

பெற்றவளே தாயே
அன்புக்காய் ஏங்குதணை
பெற்றவளே தாயே.

(உறங்கிய சிறுவன் எழும்பி வருதல்) தாய்1 TV பார்த்துக் கொண்டிருக்கிறார்.

சிறுவன் - அம்மா பசிக்குது

தாய் 1 - போய் சாப்பிடடா

சிறுவன் - போட்டுத் தாங்கோ

தாய் 1 - போடா நீ போய் போட்டுச் சாப்பிடு

சிறுவன் - நீங்கள் வந்து போட்டுத் தாங்கோ

தாய் 1 - நிண்டு கதைச்சியோ கன்னத்திலை தான் போட்டுத் தருவன் போடா..

(சிறுவன் அழுதழுது சாப்பாடு போடுதல். கோப்பை கைதவறி விழுதல்)

சிறுவன் - ஐயோ கோப்பை விழுந்து போச்சு (தாய் 2 ஓடிவரல்)
தாய் 2 - கொம்மா அடிக்கப் போறாள். (கோப்பையை எடுத்து சாப்பாட்டைப் போட்டுக்கொடுத்தல், கொட்டுப்பட்ட சாப்பாட்டை அள்ளி எறிதல்)

சிறுவன் - அம்மா.... தீத்தி விடுங்கோ.

தாய் 1 - பிறகும் வந்திட்டான். டேய் என்னை நிம்மதியா TV பாக்க விட மாட்டியே? துலைவான்.

சிறுவன் - அம்மா... அம்மா... தீத்தி விடுங்கோ...

தாய் 1 - 07 வயதாப் போச்சு நீ என்ன Baba வே (முதுகில் அடித்தல்) அள்ளடா சோத்தை, வாய்க்கை போடடா.

(சிறுவன் அழுதபடி மெதுவாக நடந்து சென்று ஓரத்தில் அமர்ந்து அழுதழுது சாப்பிடுகிறான்)

தாய் 2 - நான் தீத்தி விடட்டேடி அப்பு?

சிறுவன் - வேண்டாம்... அம்மா தான் வேணும்...

தாய் 2 - அள்ளிச் சாப்பிடு (இவ்வேளை கிழவன் வந்து சிறுவனின் முதுகைத் தடவிவிடல்)

- நீ என்னோடை வா....

(தாய் 1 TV பார்த்துக்கொண்டிருக்கிறாள். பிள்ளைகள் தாங்களாகப் படுக்கின்றார்கள், தாய் 2 பிள்ளைகளுடன் உறங்குகிறாள்)

பிள்ளை - அம்மா... நீங்களும் வாங்கோ தனியாப்படுக்கப் பயமா இருக்கு

தாய் 1 - என்ன பயம்...? அண்ணா அக்கா எல்லாரும் பக்கத்திலை தானே படுத்திருக்கினம்?

பிள்ளை - அம்மா நீங்களும் வாங்கோ தனியப் படுக்கப் பயமாயிருக்கு

தாய் 1 - பயமாம் பயம், கண்டறியாத பயம். நான் கிட்டத்தானே இருக்கிறன் போய்ப் படடா.

(அனைவரும் உறங்குதல். தாய்1 TV யை Off பண்ணாமல் அப்படியே கதிரையில் உறங்குகிறாள்)

(தாய் 2 எழும்பி வருதல்)

தாய் 2 - TV யை Off பண்ணாமல் கதிரையிலை அப்பிடியே நித்திரை கொள்ளுறாள் (TV யை Remote ஆல் Off பண்ணி விட்டுப் போய்ப்படுக்கிறாள்)
பிள்ளை நடுங்குதல் : அம்மா... ஆ... அம்மா... ஐயோ... பேய்.... பேய்...

பாடல்
(கிழவன்)
ஏனையா அழுகின்றாய்
என்ன வேணும் சொல்லி அழு

பிள்ளை - ஐயோ பேய்.... பேய்...
தாயை எண்ணிப் பயந்தாயோ?
பேயை எண்ணிப் பயந்தாயோ?

பிள்ளை - பேய்... பேய்...

பாடல்
(கிழவன்) பேயென்று ஏது மில்லை - மன
பயம் தானே பேயையா
மன உறுதி தனை வளர்த்துவிடு
உலகமே உன் மடியில் வரும்.

(கிழவன் பிள்ளையைக் கூட்டிக்கொண்டு போய் படுக்க வைத்தல்)
(தாய் 2 நித்திரை விட்டு எழும்புகிறாள்)

தாய் 2 - விடிஞ்சு போச்சு. ராஜா, குமார், செல்வன்... எல்லோரும் எழும்புங்கோ. பல்லு மினுக்கி முகங்கழுவி, கடவுளைக் கும்பிட்டுப் படியுங்கோ....
(தாய் 2 இன் பிள்ளைகள் படித்தல்)

அறம் செய்ய விரும்பு
ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்
உடையது விளம்பேல்
ஊக்கமது கைவிடேல்

(இவர்கள் படிக்கும் சத்தம் கேட்டு தாய் 1 இன் பிள்ளைகள் எழும்புதல். உடல்மொழியாலும், வாயாலும் நையாண்டி செய்தல்)

- அடேய் படிக்கிறாங்கள்
- கெட்டிக்காரங்கள்
- இவன் Doctor
- இவன் Engineear

(தாய் 2 இன் பிள்ளைகள் தமது அறிவை வெளிப்படுத்துகின்றனர்)

(தாய் 1 இன் பிள்ளைகள் கீழ் வரும் வரிகளை விரும்பினால் பாடலாகவும் படிக்கலாம்)

அஜித்தைப் பார்
அமர்க்களம் பார்த்தாயா?

விஜயை மறக்க மாட்டோம்
வசீகரா, தளபதி

சிம்ரனைக் காணாமல்
சிறுவர்கள் வாடுகின்றோம்

சினேகாவைப் பார்த்து
சிரிக்கத் தெரிந்து கொண்டோம்

ரஜனியைக் கும்பிட்டோம்
பார்த்தோம் பாட்ஷா
பலநூறு தடவைகள்

கமலின் அன்பே சிவம்
எமக்கு விளங்கவில்லை.

விக்ரம் எங்கள்
பிதாமகன், சாமி
சூரியாவே எங்கள்
பேரழகன்.

(மந்திரம் சொல்லுதல்)
ஓம்.... ஓம்... ஓம்....
ஓம் திரிஷாய நமக
ஓம் ஜோதிகா, லைலாய நமக
ஓம் அசின் நமீதாய நமக
ஓம் பூமிகா ஸ்ரேயாய நமக
ஓம் மீராஜஸ்மின் பிரியாமணியாய நமக
ஓம் அபிராமி, பூஜாய நமோ நமக
ஓம் சாந்தி சாந்தி சாந்தி
தமன்னா... தமன்னா...

வசனம் 1 - இவர்களே எங்கள் நம்பிக்கை நட்சத்திரங்கள்.
2 : இவர்களே எங்கள் வாழ்வின் விடி வெள்ளிகள்

பாடல்

மறக்க மாட்டோம்
மறக்க மாட்டோம்
மறக்க மாட்டோம்
ஊக்கமது கைவிடமாட்டோம்
TV யை மறக்கமாட்டோம்

(TV Channel ஐ மாற்ற Remote ஐ எடுக்க இழுபறிப்படல்)

Sun TV யிலை விடு
K TV யிலை விடு
Jeya TV யிலை விடு
கலைஞர் TV யிலை விடு
Vijai TV யிலை விடு
இசையருவி TV யிலை விடு

(இழுபறிபட்டு அடிபடல்)

(இந்தக் கூட்டத்தில் இருந்து ஒரு பலவீனமான சகோதரன் வெளிப்படல்)

சிறுவன் - இவங்கள் S.S Music க்கிலை ஒரு நாளும் விடமாட்டினமாம். Supper Song எவ்வளவு திறம். பொறு, பொறு இவங்களுக்குச் செய்து காட்டுறன்.

(கயிற்றைக் கொண்டு வந்து சுருக்குப் போட முயற்சித்தல்)

தாய் 2 - அடேய் தம்பி மேனை என்னடா இது. எல்லாம் TV பாத்துப் பாத்து வந்த வினை. நீ வா என்ரை பிள்ளைகளோடை பழகு. முதல்லை நல்லாப்படி. விளையாடுற நேரம் விளையாடு. TV யிலை நல்ல நிகழ்ச்சிகள் நடக்கிற நேரம் நானே TV யை போட்டு விடுறன். நீங்கள் பார்க்கலாம்.

நாள் முழுக்க TV பாத்தால் மூளை கெட்டுப்போகும்.
கண்ணும் பழுதாப் போடும். ஒழுங்கா நல்ல பிள்ளையா இருக்க வேணும் என்ன?

தாய் 1 இன்
பிள்ளைகள்- Channel ஐ மாத்து சண்டையைப் பாப்பம்.

சிறுவர்களில் இருவர் TV பீடத்தில் ஏறி ஜோன்சினா, பற்றிஸ்ரார் ஆக மாறுதல் பின்பு அவர்கள் மேடையின் DC Point க்கு வந்து மோதுப்படல்.
மற்றவர் - நடுவர், கைதட்டுபவர்.
(சண்டை உக்கிரமாக நடத்தல்)
(இருவரும் இரத்த வெள்ளத்தில் கிடக்கின்றனர்)

கிழவன் - அடியேய் இஞ்சைவந்து பாரடி. உன்ரை பிள்ளையள் சாகக் கிடக்கிறாங்கள்.

தாய் 1 - ஐயோ... என்ன இது. சேகர், குமார், மணி.... இரத்த வெள்ளத்திலை கிடக்கிறாங்கள். காப்பாத்துங்கோ... காப்பாத்துங்கோ.... அப்பா, தங்கைச்சி நான் பிழை விட்டிட்டன். நீங்கள் சொல்லச் சொல்ல நான் கேக்கேல்லை....
ஐயோ... என்ரை பிள்ளையள் எனக்கு வேணும்.
TV வேண்டாம்.......
ஐயோ என்ரை பிள்ளையள்
கடவுளே காப்பாத்து...
எனக்கு பிள்ளைகள் தான் வேணும்.

பாடல்

ஒளி படைத்த கண்ணினாய் வா. வா. வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா. வா. வா

மதி மயக்கும் TV யே போ போ. போ
மதி வளர்க்கும் TV யே வா. வா. வா

கல்வியில் உயர்வோம் - பல்துறை
ஆய்வுகள் செய்வோம்.

விளையாட்டில் உயர்வோம்
உடல், உள உறுதியை வளர்ப்போம்.

கலைகளை வளர்ப்போம் - மக்கள்
குறைகளைத் தீர்ப்போம் - பெரும்
அலைகளாய் உயர்வோம் - புது
உலகினைச் சமைப்பபோம்.

தமிழ் மொழியே மங்களம்
தாய் நாடே மங்களம்
தமிழ் பண்பாடே மங்களம்
மானிடமே மங்களம்
மங்களம் மங்களம் மங்களம்

*** முற்றும் ***




செல்லும் வழி இருட்டு

# செல்லும் வழி இருட்டு

## பரிசளிப்பு விழாவிற்காக எழுதப்பட்ட நாடகம்
**2019**

### காட்சி - 01

**பாடல்**

விடியலை மறந்த வாழ்வு
கொடிய கீதம் பாடும்
படிய மறுக்கும் இளமை
கடியதாக்கும் வாழ்வை
முடிவில்லா நீள் பாதை
மடியவைக்கும் பயணம்
செடிகள் வளரும் இனிமேல்
விடியல் பூக்கள் பூக்கும்




தாய் 1 : கடவுளே... கடவுளே...
என்ன பாவம் செய்தேனோ நானறியேன்
ஐயோ என்ரை செல்லமே....
எனக்கேன் இந்தத் தண்டனை.......
பாவியள்.............. பாவியள்......
இப்படியாக்கிப் போட்டாங்களே.....

இனியென்ன செய்தாலும்..... எனக்கென்ன....?
என்ரைசெல்வம் எனக்கு வரப்போகுதே...?
நீயில்லாமல் நான் எப்பிடி வாழப்போறன்....?

## காட்சி - 02

(தரகர், சில இளம் பெடியன்கள்)




பெடியங்கள்

1. - சீக்.... இன்னும் வரேல்லை
2. - எவ்வளவு நேரமா காத்துக்கொண் டிருக்கிறம்
3. - இனி ஏலாது....
4. - அப்ப நீ போவன்
5. - இல்லை அது இல்லாமல் இருக்க ஏலாது
1. - வரட்டும்... பல்லுக் கழட்டிவிடுகிறன்
2. - நீ அடிச்சா பிறகு அவன் வரமாட்டான் சரியோ
1. - ஐயய்யோ... நான் அடிக்கமாட்டன்.....
2. - ஏன் இன்னும் வரேல்லை ?
3. - அங்கை வாறார்......

பெடியன் - வாங்கோ அண்ணா... வாங்கோ...

தரகர் - தம்பிமார் கோவிக்காதையுங்கோ.... வழியிலை பொலிஸ் நிண்டுது. வழியை மாத்தி.... சந்து பொந்தெல்லாம் அலைஞ்சு திரிஞ்சு ஒரு மாதிரி வந்து சேர்ந்திட்டன்.


X - பொலிசுக்கு தெரியுமே...?

தரகர் - அவனுக்கு ஒரு சந்தேகம் இருக்கலாம்....

பெடியன் - பிடிபட்டால்.... தூக்குக்கயிறுதான். ஐயோ அண்ணை....

தரகர் - பயப்பிடாதேங்கோ... எனக்கொண்டும் ஆகாது. உங்களைக் கை விடமாட்டன்......

பெடியன் - அண்ணை..... நீங்கள் எங்களுக்குத் தெய்வம்.




தரகர் - தெய்வம் பொலிசிட்டைப் பிடிபடுமே?

பெடியன் - அவ்வளவு நம்பிக்கையா சொல்லுறியள்.... எப்பிடி....?

தரகர் - அது என்ரை தொழில் இரகசியம், நீங்கள் கேட்கவும் கூடாது, நான் சொல்லவும் கூடாது.


தரகர் - இந்தாங்கோ பிடியுங்கோ... காசைததாங்கோ...

பெடியன் - சரி தொடங்குவம்.
(பின்பக்கமாகத் திரும்பிப் பாவிக்கின்றனர்)

## காட்சி - 03

மனோவின் வீடு (மனோகரன்)


மனோ, தாய் 2, அம்மப்பா (மனோ படித்துக்கொண்டிருத்தல்)




தாய் 2 - தம்பி மனோ... மாமைற்றைக் குடியப்பு...

மனோ - உது எனக்கு வேண்டாம் அம்மா. ஹோர்லிக்சைத் தாங்கோ

தாய் 2 - மாமைற் உடம்புக்கும் நல்லது, மூளைக்கும் நல்லது. யூஸ் குடிக்கிறதெண்டு மனசிலை நினைச்சுக்கொண்டு குடி (மனோ குடித்தல்) பழகப்பழக இது அமிர்தம் மாதிரி இனிக்கும்.




மனோ - அம்மா என்ரை (B) பொடி (Body) ஐப் பாருங்கோ....

தாய் - அதுக்கென்ன குறைராசா... நீ ஆணழகன்தானே
ஐயா.... இஞ்சை வாங்கோ.... மனோ Body ஐப் பற்றி கேக்கிறான்... வந்து பாருங்கோவன்.

(அம்மப்பா வருதல்)


அம்மப்பா - நான் அந்தக்காலத்து ஆணழகன். எத்தினை மேடைகண்டனான். எத்தினை பரிசுகள் வாங்கின்னான்?

தாய் 2 - அது சரி உங்கடை பேரனும் ஆணழகனாகத் தானே இருப்பான்.....

அம்மப்பா - இருக்கலாம்... இல்லாமலும் விடலாம்.... ஆண் அழகனாக இருக்கிறது முக்கியமில்லை நோய் நொடி வராத உடம்பா இருக்கவேணும்... ஆரோக்கியமான மூளையும் இருக்க வேணும்.... அதுக்கு...

மனோ - அம்மப்பா... போதும் போதும்.... நீங்கள் கதைக்கத் தொடங்கினால் பிறகு நிப்பாட்ட ஏலாது....

தாய் 2 - மனோ... அப்பிடிச் சொல்லக் கூடாது அப்பன். அம்மப்பாவும் வேறை ஆரோடை கதைக்கிறது பாவம்...




மனோ - நீங்கள் சொல்லுங்கோ.... அம்மப்பா....

அம்மப்பா - நான் கனக்கக் கதைக்கேல்லை... நீ இப்ப செய்யிற மாதிரி... ஒரு 15 நிமிசம் செய்யிற யோகாசனத்தை விடாமல் செய்து கொண்டே இரு. கிழமையிலை 05 நாட்கள் எண்டாலும் செய்ய வேணும்....

தாய் 2 - நீங்கள் சொல்லிக் கொடுத்த மாதிரி அவன் செய்யிறான் தானே.... ஐயா?
அம்மப்பா - ஓ...... செய்யிறான்.... சந்தோஷம்.... பள்ளிக்கூடம், ரியூசன், பிறகு

வீட்டிலை படிப்பு எண்டு ஒரேயடியா இருந்து படிக்கேக்கை கொஞ்சம் இரத்த ஓட்டத்தைக் கூட்ட பயிற்சிகள் செய்ய வேணும் தான்... உடம்பு, மூளை, மனம்.... மூண்டும் முக்கியம்....

மனோ - மனம் எண்டால் ..... என்ன அம்மப்பா....?

அம்மப்பா - மனம் எண்டால் எங்கடை சிந்தனைகள், உணர்வுகள் இதையெல்லாம் தேக்கி வைத்திருக்கிற மூளையின்ரை ஒரு பகுதி... அவ்வளவு தான்....

மனோ - மனம் நெஞ்சுக்கை இல்லை, மூளைக்குள்ளை இருக்கு. விளங்குது அம்மப்பா விளங்குது.

## காட்சி - 04

(மனோ வீடு, மனோ படித்துக்கொண்டிருக்கிறான். நண்பர்கள் மனோ வீட்டுக்கு வருகின்றார்கள்)

நண் - மனோ.... மனோ....

தாய் 2 - ஆர் கூப்பிடுகிறது.... ? அட சீக்.... ஐயா மனோவின்ரை சினேகிதப் பெடியள் வாறாங்கள். அவன் வீட்டிலை இல்லை யெண்டு சொல்லி அனுப்பி விடுங்கோ.....

அம்மப்பா - தம்பிமார்...

மனோ - அம்மப்பா அப்பிடிச் சொல்ல வேண்டாம்... எவ்வளவு நேரம் படிக்கிறது...? இடைக்கிடை சினேகிதங்களோடை கதைக்கிறது Relax ஆக இருக்கும்.

அம்மப்பா - தம்பிமார்..... வாங்கோ... வாங்கோ...

தாய் 2 - வாங்கோ பிள்ளையள் என்ன இண்டைக்கு காலைமையே வந்திட்டியள்? படிக்கிறதில்லையே...? A/L Exam க்கு 03 மாதங்கள் தானே இருக்கு...

அம்மப்பா - அவங்களுக்கேன் படிப்பு...? அவங்கள் படிக்காமலே சோதனைக்குப் போறாக்கள் கண்டியோ.

நண் - ஐயாவுக்கு நாங்கள் வந்தது பிடிக்கேல்லை போலை இருக்கு...

தாய் 2 - நீங்கள் படிக்கிறநேரத்திலை படியாமல் கதைக்க வந்ததுதான் அவருக்குப் பிடிக்கேல்லை....

நண்பர் - நாங்கள் இப்ப இரவிலை Combined Study போடுறம்.... இரவு 8.00 மணிக்கு தொடங்கினால் படுக்க இரவு 2, 3 மணியாகும்.

அம்மப்பா - நீங்கள்...... Combined Study போடுறீங்கள்...? உங்கட Study ...... பச்சடி போட்டமாதிரிதான்.

நண்பர் - ஐயா.... நீங்கள் எங்களைப் பிழையா விளங்கிக் கொண்டிட்டீங்கள்.... நாங்கள் ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு பாடத்தை நல்லாப் படிச்சு ஆயத்தப்படுத்துவம். பிறகு ஒவ்வொருத்தரும் மற்றவங்களுக்கு நாங்கள் படிச்சதை சொல்லிக் கொடுப்பம்.... படிக்க சரியான லேசான முறை ஐயா, விளங்கப்படுத்தி கலந்தரையாடுகிறதாலை பாடங்கள் அப்படியே ஞாபகத்திலை இருக்கு....

அம்மப்பா - ஆருக்கு....?
உங்களுக்கு..... ?
பாடங்கள் ஞாபகத்திலை இருக்குதோ...? மனோ அந்த Chemisty Past Paper Book தாத்தா இவங்களை இரண்டு கேள்வி கேட்டுப்பாப்பம்....

நண்பர் - ஐயோ... ஐயா... இப்ப அதுக்கு நேரமில்லை. நாங்கள் கொஞ்ச நேரம் மனோ விட்டை பாடங்களிலை Doubts ஐ கேட்டு .... படிச்சிட்டுப் போக வந்தனாங்கள்.
நாங்கள் போய் உடனை படிக்க வேணும்...
Exam க்கு .... 03 மாதங்கள் தான் இருக்கு மனோ... உனக்குத்தான் சொல்லுறம்... Exam க்கு 03 மாதங்கள் தான் இருக்கு.... உனக்குரிய பாணியிலை படிக்க வேணும் என்ன?

அம்மப்பா - சாத்தான்கள் வேதம் ஓதுற மாதிரித்தான் இருக்கு.

மனோ - அம்மப்பா... நீங்கள் இப்பிடிக் கதைக்கிறது சரியில்லை.....

தாய் 2 - ஓம் ஐயா.... வீட்டுக்குவந்த பெடியளை...

அம்மப்பா - சரி... சரி.... நான் போறன்....

தாய் 2 - நான் சமைக்கப்போறன்... நீங்கள் உங்கடை Doubts களை கேட்டுப் படியுங்கோ தம்பிமார்....

நண் - எடேய் மனோ...

மனோ - என்னடாப்பா....?

நண் - நாங்கள் 03 புதுப்படங்களை VDO போட்டுப் பார்க்கப் போறம்... வாறியே...?

மனோ - Sorry மச்சான்.... நான் நிறைய படிக்க இருக்கு மச்சான்...

நண்கள் - நெடுகலும்.... படிக்கக்கூடாது. அது மூளைக்கு கூடாது... சில வேளை தட்டிக்கிட்டிப் போடும்.... அதுதான் Mentel ஆக்கிப்போடும்.....

- கனக்கப்படிச்சு நல்லா இருக்கிற ஆக்களைவிட கனக்கப்படிச்சு Mentel ஆயி இருக்கிற ஆட்கள் தான் கூட..... தெரியுமோ உனக்கு...?

- எங்கடை London uncle ஐப் பார் London, அமெரிக்கா... ஜேர்மனி எண்டெல்லாம் போய் படிச்சு... இண்டைக்கு....?

- கோட் சூட்டும் போட்டுக் கொண்டு தெருவழிகளிலை Mental ஆ... திரியுறார்....

- இவ்வளவு படிச்ச மனிதனுக்கு எங்கடை ஊரிலை கிடைச்சபட்டம் "London Loose"

- தெரியுது தானே...? எங்கடை சமூகம் பற்றி... London Loose ஐயாவை சுகப்படுத்தி வாழவைப்பம் எண்டு ஒருவரும் யோசிக்கேல்லை.

மனோ - என்ன சொல்லுறிங்கள்... நீங்கள்...? ஒராளுக்கு மூளை பிசகினால் எல்லோரும் அப்பிடியே?

அம்மப்பா - அதுதானே நானும் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறன். கிணற்றடியிலை வழுக்கி விழுந்தால் குளிக்கக்கூடாது... Toilet இலை வழுக்கி விழுந்தால்... கக்கூசுக்குப் போகக்கூடாது என்று சொல்லுறாங்கள்....

தாய் 2 - ஐயா.... என்ன கதை கதைக்கிறிங்கள்?

அம்மப்பா - இல்லைப் பிள்ளை, நடைமுறை ரீதியாகத் தான் கேள்வி கேட்கிறன்....?

நண்பர் - அப்ப மனோ நாங்கள் போட்டுவாறம்....

அம்மப்பா - ஏன் தம்பிமார் .... Chemistry யிலை doubt... கேட்க வந்தனியள் கேளுங்கோவன்.....?

நண்பர் - ஓம் ஐயா மனோ busy ஆ இருக்கிறன் பிறகு வாறம்....

தாய் 2 - பிள்ளையள் வீட்டுக்கு வந்திட்டு ஒரு தேத்தண்ணி கூடக் குடியாமல் போறியள்....

நண்பர் - நாங்கள் பிறகுவாறம் அன்ரி.....


# காட்சி - 05

இடம் - கடற்கரை
(மனோவும், நண்பர்களும்)

நண்பர்கள் - எங்கடை கிழக்குக் கடற்கரை அழகுதான்
- பொழுது போக்குகிறதுக்கு அருமையான இடம்.
- நல்ல காற்று, வெள்ளைமணல், அலையடிக்கிற கடல், கடலின் சத்தங்கள், பனை, தென்னை எண்டு எத்தினை வகை மரங்கள்.
- மீனவர் கரைவலை இழுக்கிற காட்சி அருமைதான்.
- நானும் இடைக்கிடை கரைவலை இழுத்துக் குடுக்கிறனான்.
- அவையள் அதுக்கு நிறைய மீன்கள் தருவினம். அதை வீட்டுக்கும் அயலட்டைக்கும் குடுப்பன். சூடை, நெத்தலி, இறால் பொரிச்சுவைச்சு 4, 5 நாளைக்குச் சாப்பிடலாம்.

- இப்ப Children Park உம் இருக்கிறதாலை சனி, ஞாயிறு மாலை நேரங்களிலை ஒரே Crowd தான்.

- இந்தக் கடற்கரையிலை ஒரு பகுதியை Tourist க்கு மட்டும் உரியதாக்கி ஒரு Hotel உம் கட்டினால் நல்ல வருமானம் கிடைக்கும்.




- எத்தனை பிள்ளையள் கடல் தெரியாமல் இருக்கினம். அதுகள் கடலை ஒருக்காக் கூடப் பார்க்கேல்லை.
- எத்தனை பேர் நீச்சல் தெரியாமல் இருக்கினம்?
- ஓ உண்மை தான்
- பாதுகாப்பான முறையிலை நீச்சல் பகுதிம் ஒண்டு அமைக்க வேணும்....
- அது சரிதான்
- மனோ.... டேய் மனோ...
- என்னடா ஒரு மாதிரியா இருக்கிறாய?
- என்னடா சுகமில்லையே...?

மனோ - ஒரே Upset ஆ இருக்குது. தலையும் உளையுது....

நண்பர் - நாள் முழுக்கப் படிச்சால் தலை உளையும் தானே. மூளைக்கு வேலை கூடும்போது. Rest எடுக்கவேணும். அரை மணித்தியாலம் படிச்சால் ஒரு மணித்தியாலம் Rest எடு.

மனோ - அது மட்டும் ஏலாது. Exam க்கு 03 மாதங்கள் தானே இருக்குது

நண்பர் - மனோ.... நீ படியடா, உந்தத்தலை உளைச்சலுக்கெல்லாம் மருந்து என்னட்டை இருக்கு...

மனோ - உண்மையே...?

நண் - ஓ..... உண்மையாத்தான்...

மனோ - இப்ப வைச்சிருக்கிறியே.....?

நண் - வைச்சிருக்கிறன்

மனோ - தாறியே...?

நண் - தாறன்... இந்தா...

மனோ - இதென்ன பீடாப்பாக்கைத் தாறாய்....?

நண் - பீடாவுக்கைதான் மருந்து கலந்திருக்கு
(மனோ பீடா சாப்பிடுகிறான்)

மனோ - அம்மாடி... தலை உளைவெல்லாம் பறந்திட்டுது. நான் படிக்க வேணும்.

நண் - படி... படி.... நல்லாப்படி அதற்குத்தானே மருந்து தந்தனான்.

மனோ - அருமை... ஆஹா... அருமை எல்லாம் இன்பமயம். இந்தா மோதிரத்தைப் பிடி... இந்த மருந்தை கொஞ்ச நாளைக்கு வாங்கித்தாங்கோ.

நண்பன் - பாட்டு ஒண்டு பாடியுங்கோவன்.

பாடல்

சுத்துகிறார் அத்தான் அவர்
சுழலுகிறார்...
கஞ்சா திண்ட அத்தானுக்கு வெறியல்லவோ
கத்துகிறார் அத்தானவர் தவளுகிறார்
தவண்டும் அல்லோ தரைமேல் புரளுகிறார்
சுத்துகிறார் அத்தானவர் சுழலுகிறார்
சுலண்டும் அல்லோ தரைமேல் புரளுகிறார்.
(மனோ இயலாமல் நிலத்தில் விழுதல் கைத்தாங்கலாக கூட்டிச் செல்கின்றனர்)

நண்பன் - இவனை வீட்டிலை விட ஏலாது எங்கடை "சந்திப்பூ" அறையிலைதான் கொண்டு போய் விடவேணும்.

## காட்சி - 06

இடம் - மனோ வீடு
(தாய் 2, அம்மப்பா, மனோ)

தாய் 2 - என்னய்யா... எங்கடை மனோ வீட்டுக்கு வராமல் இரவிரவா என்ன செய்யிறான்.... எங்கை நிக்கிறான்?

அம்மப்பா - அவன் சினேகிதரோடை Party ஒண்டுக்கு போறதா சொன்னவன் தானே? Party முடிய நேரம் செண்டிருக்கும். அதுதான் விடிஞ்சு ஆறுதலாவரும் எண்டு நினைச்சு அங்கை தங்கியிருப்பான்.

தாய் 2 - அது தெரியுமையா Cell Phone இருக்குத்தானே Call பண்ணி சொல்லியிருக்கலாம் தானே?

அம்மப்பா - சொல்லியிருக்க வேணும்... ஆனால் சொல்லேல்லை அவன் வருவான்... அமைதியாய் இரு மகள்.

தாய் 2 - எப்பிடி ஐயா அமைதியாய் இருக்கிறது...? அவனைக் காணாமல் அப்பனைத் தின்னிப் பிள்ளை. தாயையும் திண்டு போடுவானோ...?

அம்மப்பா - டியேய் விசரி... கனக்கயோசிக்காதை அவன் வந்திடுவான்.... அமைதியாய் இரு.....

மனோ - அம்மா.....


தாய் 2 - தம்பி மனோ.... வா ராசா எங்கை மேனை போனனீ?

மனோ - மன்னிச்சுக்கொள்ளுங்கோ... இரவு Party முடிய நேரம் போட்டுது. அதுதான் அங்கையே நிண்டிட்டு விடிய வந்தனானன் அம்மா.

அம்மப்பா - என்ன தலையெல்லாம் வெள்ளை மண் இருக்கு...? கடற்கரையிலை படுத்தெழும்பி வாறியோ...?

மனோ - இல்லை அம்மப்பா, நேற்றுப்பின்னேரம் கடற்கரையிலை கபடி விளையாடினாங்கள்.

அம்மப்பா - நல்லது கபடி எங்கடை பாரம்பரிய விளையாட்டு... சோதினை முடிஞ்சால் போலை விளையாடு மனோ. இப்ப உடம்பை அலுக்கப்பண்ணிப் போடும். படிக்க ஏலாது.




மனோ - உண்மை தான் அம்மப்பா...

அம்மப்பா - ஏன் மனோ... சரியான சோர்வாய் இருக்கிறாய்...?

மனோ - இராத்திரிச் சாப்பிடேல்லை அம்மப்பா...

தாய் 2 - நான் காய்பிட்டும் கருவாடும் சமைச்சித்தாறன்... நீ போய் குளிச்சிட்டு வா மனோ....

மனோ - சரியம்மா... எனக்கு விருப்பமான சாப்பாடு....

அம்மப்பா - முதலும் கடைசியுமா மன்னிச்சு விட்டிருக்கிறன்... இனிமேல் இப்பிடி நடக்கக்கூடாது சரியே மனோ... ?

மனோ - ஓம்... அம்மப்பா.... இனி இப்பிடி நடக்கமாட்டன். அம்மப்பா மேலை சத்தியமாச் சொல்லுறன்....

அம்மப்பா - நான் உன்னை நம்புறன். போய் குளிச்சு சாப்பிட்டுப் படி.. மனோ.. போ....


## காட்சி - 07

இடம் - Road, மனோவின் நண்பர்கள் சேட்டைகள்.

நண்பர் - நல்லா வடிவான பூ மச்சான்...
- அருமையான பூ...... நல்லகவர்ச்சி
- பூ வெண்டால் கவர்ச்சி இருக்கும் தானே ?
- வண்டுகளைக் கவருற பூக்கள் தான் கவர்ச்சியா இருக்கும்.
- வண்டுகளைக் கவர்ந்து இழுக்கத்தான் பூக்கள் கவர்ச்சியா இருக்கு அப்பிடித்தானே...?
- உண்மைதான்...
- வண்டுகள் தேன் குடிச்சால் என்ன...?
- வண்டுகள் தேன் குடிக்கும்
- தேன் குடிக்க வேணும்....

- தேன் குடிக்ககாட்டில் வண்டுகளுக்கு மரியாதையில்லை.
- வண்டுகளுக்கு பசி தீர்த்தபாடில்லை
- பயமாய் இருக்கு மச்சான்.
- இந்தா... இதைச் சாப்பிடுங்கோ...
(அனைவரும் மருந்து போட்ட பீடா சாப்பிடுதல்)
(போதை ஏறுதல் படிப்படியான மாற்றம் அவர்களில் தெரிகிறது)
- வாங்கோடா பூ வைப் பிடுங்குவம்.

மனோ - டேய்..... வேண்டாமடா...
பெரிய ஆபத்தடா....




நண்பர்கள் - உன்னை ஆர் கேட்டது....
- போடா...... அங்காலை

மனோ - டேய் மச்சான் வேண்டாமடா வாங்கோ...
- வாயை மூடடா... (மனோவுக்கு அடித்தல், மனோ விழுதல்)
(விழுந்த நிலையில்) எல்லாம் போச்சு... எல்லாம்... போச்சு.... கடவுளே தாய் 2 வந்து அழுதல்... (அனைவரும்போக தாய்2 மனோவை கைத்தாங்கலாக அணைத்துச் செல்கிறார்)

## காட்சி - 08

பூவின் வீடு


பூவின் தாய், உற்றார், உறவினர், நட்புகள்.....

தாய் 2 - கடவுளே... கடவுளே.....
என்ன பாவம் செய்தனோ...
என்ரை பிள்ளைக்கு இப்டியாச்சுதே...
ஆருக்குச்சொல்லுவேன்
ஆருடன் நோவேன்...
என்ன செய்தாலும் என்ரை பிள்ளை இனி வரப் போகுதோ...?

(பூவின் பிரேதம் கொண்டு வரப்படுதல்
தாய் 2 ஐ உறவினர் பிடித்தல்)

(எங்கும் அழுகையொலி)

*** முற்றும் ***


THEEPAN

# A9

## கல்லூரிதின நாடகம்
2003

பாத்திரங்கள்

01. கந்தசாமி - சிவமணியின்கணவன். இறந்து போன கண்ணனின் தகப்பன்

02. சிவமணி - கந்தசாமியின் மனைவி, கண்ணனின் தாய்.

03. சிவம் - சிவமணியின் சகோதரன் (முளை சற்றுப் பிசகியவன், பாட்டுகாரன்)


04. கண்ணன் - கந்தசாமி சிவமணி தம்பதிகளின் மகன் போராட்டத்தில் இறந்துபோனவன்.

05.
06. } தென்னிலங்கை வியாபாரிகள் (எண்ணிக்கை நெறியாளரைப் பொறுத்தது)

07.
08.
09.
10.
11.
12. } உல்லாசமாய் திரியும் தமிழ்மக்கள் சிலர் (எண்ணிக்கை நெறியாளரைப் பொறுத்தது)

## காட்சி - 01

படம்




மனிதன் 1, 2 ஆகியோர் கயிறிழுத்தல் போட்டியில் இழுபடுவது போல் இக் காட்சி அமையும்.

மனிதன் 1 - இழு..... இழு..... கோவிந்தா கோபாலா....

மனிதன் 2 - இழு...... இழு.... இழு... கண்ணா, மாயவா, பரந்தாமா (பயணம் செல்லும் குழுவினர் மேடைக்கு வருகின்றனர்)

ஒருவர் 1 - சனமெண்டால் சரியான சனம்.

மற்றவர் 2 - இஞ்சை பாரன் எத்தனை விதமான வீ. டீ. ஓ கமராக்கள்.

இன்னொருவர் 3 - உலகம் முழுவதும் இருந்து எங்கடை சனம் வந்திருக்கு.

4 - இனியென்ன... எங்கடை எல்லாப் பிரச்சினையும் தீர்த்த மாதிரித்தான்

5 - தீர்ந்தமாதிரியோ? தீர்ந்திட்டுது எண்டு சொல்லு.... அரசியல் தெரியாட்டில் இப்பிடி பிழையா விளங்கிக் கொண்டு கதைக்கக்கூடாது.

பலர் சேர்ந்து - A9......A9.....A9

பாடல்

(சிவம்) A9 திறந்த தம்மா பிரச்சனை
எல்லாமே தீர்ந்ததம்மா
கூவின பூங்குயில்கள்
குக்கூ வசந்தமென

(A9 திறந்ததம்மா)

நேரான பாதையம்மா
நேரமினி மிச்சமம்மா
பயணங்கள் போய்வருவோம்
பயமின்றிப் போய் வருவோம்.

(A9 திறந்ததம்மா)

போரான போர்களெல்லாம்
போயின போயினவே
கூரான முட்களெல்லாம்
குலைநடுங்கி மாவாகி
ஊரான ஊர்களெல்லாம்
இனியெங்கள் கால்பதியும்.

பாரினில் இனி இன்பமடா
பாரும் இனித்துன்பமில்லை
மாமணியாம் சுதந்திரமே
எங்கள் பையினுள் கிடக்குதம்மா.

6. - ஏன் பார்த்துக்கொண்டு நிற்கிறியள்?

7. - வாங்கோ உல்லாசப் பயணம் போகலாம். (மூட்டை முடிச்சுகளுடன் பயணம், போக்குவரத்துகள் நடப்பதை ஊமமாகக் காட்டலாம்)

2. - பயணங்கள் நிறைய அனுபவங்களைத் தரும்.

3. - ஓ..... ஊர்களையும், உலகத்தையும் நல்லாக விளங்கிக்கொள்ளலாம்.

4. - அதோடை எங்கடை "வாழ்வு" பற்றியும் விளங்கிக் கொள்ளலாம்.

5. - அங்காலை சிங்கள மக்களைப் பாருங்கோ.

6. - எப்பவும் பயணங்கள்தான். அவர்கள் வாழ்வை அனுபவிக்கப் பிறந்தவர்கள்.

7. - நாங்கள் காசு செலவழிஞ்சுபோடுமெண்டு வீட்டுக்குள்ளை குந்தியிருந்து முழுசிக்கொண்டிருக்கிறம்.

1. - எல்லாரும் எழும்புங்கோ....

2. - இலங்கை என்ன? உலகமெல்லாம் சுத்திப்பாப்பம்....


3. - சுத்தித் சுத்தி வருவம். வேறை என்ன? இனிச் சந்தோச ஊர்வலங்கள் தான்.....

4. - அது சரி.... அது சரி.... உனக்கு அரசியல் நல்லா விளங்குது.

தமிழ் மக்கள் - இவடம்..... எவடம்?
- புளியடி ...... புங்கடி
- இவடம் எவடம்...?
முகமாலை.... முகமாலை

- அங்கை "சென்றிப் பொயின்ற்"தெரியுது. சாராயத்தை எடுத்து மடமடவெண்டு குடிப்பம்.

- ஓ...... அங்காலை சாராயப்போத்தலைக் கொண்டுபோகவிட மாட்டாங்கள்... (குடித்தல்)
(சென்றிப்பொயின்ற் செக்கிங்)
- இவடம் எவடம்...?
- ஆனையிறவு...... ஆனையிறவு
- ஆனையிறவோ... இப்ப எப்படி இருக்கு.....?
- தலையறுத்த தென்னைகள், பனைகள்.
- ஒருசில ஆடு மாடுகள்.
- எங்கும் வெளி....
- ஏகாந்தப் பெருவெளி.....
- ஆனையிறவு பெரிய "ஆமிகாம் (Army Camp) இருந்த இடமெல்லே...?
- அது முந்திக்கிடந்ததுதான். இப்ப எங்கை கிடக்குதெண்டு தெரியேல்லை.
- கண்ணைத் திறந்து விடுங்கோ..... நான் பார்த்துச் சொல்லுறன்.
- மேனை.... மேனை.... கண்ணைத் திறக்காதை.




கண்ணை மூடிக்கொண்டே இரு. நல்லா மூடிக்கொண்டே இரு. திறக்கக்கூடாது.

சிவம் - எங்களுக்கு ஒண்டுமே தெரியேல்லை.
எங்களுக்கு ஒண்டுமே தெரியாது.
எங்களுக்கு ஒண்டுமே தெரியப்போவதுமில்லை.

கந்தசாமி - அங்கை..... அங்கை....
என்ரை பிள்ளை, என்ரை மகன்....
வடிவாப் பாருங்கோ....
அது என்ரை மகன் தான்....

இந்த மண் ஏன் சிவந்திருக்குது?
இந்த உலர்ந்த ரத்தம் ஆற்றை இரத்தம்?
இஞ்சை பாருங்கோ.... இஞ்சை பாருங்கோ
இதுகள் உங்கடை கண்ணுக்குத் தெரியேல்லையே?

என்ரை மகனைத் தெரியேல்லையே?

மக்கள் - இந்த மனிசனுக்கு விசர் பிடிச்சிட்டுது.
- சந்தோசமா tour (உல்லாசப்பயணம்) போற நேரத்திலை இது அழுது துலைக்குது.
- பேசாமல் வாயை மூடிக்கொண்டு வரவேணும்.

கந்தசாமி - அப்ப நான் திருப்பிப் போறன்.
- திரும்பிப் போகப் போறியளோ....? நடந்து தான் போகவேணும்.
- ஓ...... என்ரை கால்களாலை நடந்துபோறான்
- ஓ...... என்ரை கால்களாலை திரும்பி நடந்து போறன்.
- சரி போ... றோட்டாலைபோ மிதிவெடிகள் அக்கம் பக்கம் இருக்கும். பிறகு மரக்கால் தான் பூட்ட வேணும்.
- நான் போட்டு வாறன்.
(கைகளில் மண்ணை எடுத்துக்கொண்டு திரும்பிப்போறார்)

- இவடம் எவடம்.....?
பரந்தன்...... பரந்தன்
- பரந்தன் எப்படியிருக்கு...?
ஒரே பாலையாய் பரந்திருக்கு
ஒன்றிரண்டு மாடுகள் மேயுது.. இரசாயனத் தொழிற்சாலை இடிஞ்சு போய்க் கிடக்கு....
- எல்லாம் போச்சு

எவடம் இவடம்?
புளியடி புங்கடி
எவடம் இவடம்
கிளிநொச்சி..... கிளிநொச்சி...
கிளிநொச்சியோ...?
முக்கியமான இடம்.
யுத்தகால தலைநகரம்
பின்னையென்ன?
உலகம் முழுக்க பிரபல்யமான இடமெல்லே....?

## காட்சி - 02

(கந்தையா திரும்பி வீட்டுக்கு வருதல்)

சிவமணி - ஏனப்பா சுற்றிப் பாக்கப்போகேல்லையே

கந்தையா - திரும்பி வந்திட்டன். மனம் பயணம் செய்யிற நிலமையிலை இல்லை.

சிவமணி - தனியவே திரும்பி வந்தனீங்கள். பாதைகள் மாறாமல் எப்படி வந்தனிங்கள்?

கந்தையா - காலாலை நடந்து வந்தனனான். வழி எனக்குத் தெரியும் தானே என்னைத் தொந்தரவு செய்யாதை.

சிவம் - எந்தப்பாதை எங்கே போகும்
யாருக்குத் தான் வெளிச்சம்
இந்தப் பாதை எங்கே முடியும்
இறைவனுக்கே கலக்கம்
கண்ணின் மணியைத் தொலைந்து நின்றோம்
காலமெனும் பெருவெளியில்
மண்ணில் யுத்தம் தொடரலாமோ
இந்த மண்ணின் மானுடரே பகல்வீர்.

கந்தையா - இவனுக்கு விசர். இரவிரவாப்பாடிக் கொண்டே இருக்கிறான். மனிசருக்கு இருக்கிற தொல்லைகளுக்குள்ளை இவன்ரை தொல்லை சனி பிடிச்ச தொல்லை.

சிவமணி - அப்பா.... சிவத்தை ஏன் பேசுறியள்? எங்கடை விதி அப்படியாய்ப்போச்சு. மற்றாக்களை நொந்து சினக்கிறதாலை என்ன பயன்...? நீங்கள் போய் படுத்து நித்திரை கொள்ளுங்கோ.

கந்தையா - அந்த விசரன் இப்பிடிக் கத்திக்கொண்டிருந்தால் எனக்கு எப்பிடி நித்திரை வரும்...?

சிவமணி - ஏன் உங்களுக்கும் பாட்டு எண்டால் நல்லாப் பிடிக்கும் தானே.... கேட்டுக்கொண்டு படுத்திருங்கோ நித்திரை தானாவரும்.

கந்தையா - மணி என்னோடை பகிடிவிடாதை. அவன் என்ன தாலாட்டே படிக்கிறான். எனக்கு இருக்கிற மன நிலையிலை என்ன செய்வனெண்டு எனக்கே தெரியாது.

(கந்தையா ஆனையிறவிலை எடுத்த மண்ணை சுவாமி அறைத்தட்டில் வைக்கின்றார்)

சிவமணி - என்னப்பா அது?

கந்தையா - மண், ஆனையிறவு மண்.

சிவமணி - அதை ஏன் சுவாமி அறையிலை வைக்கிறியள்....?

கந்தையா - அடியேய் அது வெறும்மண்ணில்லையடி. எங்கடை பிள்ளை கண்ணனின்ரை இரத்தம், உயிருறைஞ்சமண். ஆனையிறவிலை எடுத்துக்கொண்டு வந்தனான்.

சிவமணி - இது எங்கடை பிள்ளையின்ரை இரத்தம் உறைஞ்ச மண்ணெண்டு உங்களுக்கு எப்பிடித் தெரியும்....?

கந்தையா - இது அவன்ரை இரத்தம் இல்லையெண்டு உனக்கு எவ்வளவு

தெரியுமோ, அந்த அளவிற்கு இது அவன்ரை இரத்தம் உறைஞ்ச மண்தான் எண்டு எனக்குத் தெரியும்.

சிவமணி - அது சரிதான் அப்பா... நீங்கள் அதைச் சாமி அறையிலை வையுங்கோ.

கந்தையா - எங்கடை பரம்பரையின்ரை இரத்தவாடை வீசுதடி... மணந்துபார்.

சிவமணி - ம்..... சரியப்பா....

சிவம் - அன்பின் வாசனை....
உறவின் வாசனை....
ஹா...... ஹா...... ஹா......

மூக்காலை மணந்து பாக்கிறேல்லை
மனதாலை உணர வேணும்
ஹா...... ஹா..... ஹா.....

சிவமணி - தம்பி சிவம். நீ என்னடா சொல்லுறாய்? எப்பிடி வாழ்ந்த நீ..... இண்டைக்கு இப்பிடி யாகிட்டாய்....

கந்தையா - குடிச்சுக்குடிச்சு ஞானம் தேடுறான். குடிக்கிறது. பாட்டுப்பாடுறது. அக்காவிட்டை காசு கேக்கிறது. குடிச்சு அழிக்கத்தானே...? பெரிய ஞானி... பரதேசிப்பயல் ஒரு அடி அடிச்சசெண்டால். உடம்பு, உயிர் குடி, பாட்டு எல்லாம் பறந்திடும்.


சிவம் - ஆண்டியின்ரை குண்டியைத் தட்டினால் பறக்கிறது சாம்பல்தான்.... ஹா... ஹா..... ஹா.....

சிவமணி - நீங்கள் பதட்டப்படாமல் உள்ளை வாங்கோப்பா.. நான் சிவத்துக்கு சாப்பாடு குடுக்கவேணும்.

## காட்சி - 03

கண்ணன், கந்தையா, சிவம், சிவமணி.

படம்




இரவு நேரம் சிவம் படுத்திருக்கிறார். கந்தையா நித்திரை வராமல் அங்குமிங்குமாய் நடந்துகொண்டிருக்கிறார்.

இறந்து போன கண்ணன் மேடையில் தோன்றுகிறான்.

கண்ணன் - அப்பா..... அப்பா

கந்தையா - (திடுக்கிடுதல்) மேனை.... மகனே கண்ணா வந்திட்டியே....? எனக்கு நல்லாத்தெரியும் நீ என்னைத்தேடி வருவாயென்று.

கண்ணன் - சுகமா இருக்கிறீங்களே அப்பா.....?

கந்தையா - சுகத்துக்கு என்ன குறைச்சல். ஆனால் நிம்மதியில்லை. சந்தோஷமில்லை. வீடு.... காடுபோல ஆகிவிட்டுது கண்ணா.

கண்ணன் - அப்பா அழாதையுங்கோ... ஏன் இந்தக் கண்ணீர்...? (தகப்பனின் கண்ணீரைத் துடைத்து விடுகிறான்) கந்தையா மகனை இறுகக் கட்டி அணைக்கிறார்.
(இவ்வேளை படுத்திருந்த சிவம் எழும்புகிறார்)

பாடல்
(சிவம்) நெஞ்சுக்குள் வாழும் நிலவே - கண்ணா
பிஞ்சு வயதில் அணைந்த சுடரே
கஞ்சிக்கும், கூழுக்கும், மண்ணுக்கும், பொன்னுக்கும்
வாழும் இந்த உலகில்
விஞ்சிய வீரம் கொண்டெழுந்த பூங்கொடியே
விழுந்தாய் மண்ணில் விதையாக
பஞ்சு மேகமாய் நினைவுகள் ஓடுதடா
வா.... வா.... மேகமே... மழை தா மேகமே..

(கண்ணன் - சிவத்துக்குக்கிட்ட போகிறான்)

கண்ணன் - மா... மா... மாமா...

சிவம் - மேகமே... வா... வா... (கூறியபடி குடிபோதையில் சரிந்து படுக்கிறார்)

கண்ணன் - மாமா.... என்ன நீங்கள்... ? ஏன் இப்பிடி....?

கந்தையா - கசிப்பைக் குடிச்சு ஈரல் கருகிப் போச்சு. முகம், உடம்பெல்லாம் மெலிந்து வறண்டு எலும்புக்கூடாகிப் போய் கிடக்கிறான்.

கந்தையா - அவனுக்கு நீ யெண்டால் உயிர். எப்பவும் உன்ரை நினைவுதான். நீ இறந்தபிறகு இப்பிடியாகி விட்டான். ஏதோ.... கொஞ்சம் கொஞ்சமாக செத்துக்கொண்டு போறான். நான் என்ன செய்யிறது?

கண்ணன் - மாமா மாமா என்று அழுகின்றான்.
(கந்தையா கண்ணனின் கையை இறுகப்பற்றிப் பிடித்தபடி ஐயோ என்று குளறுகின்றார்)

- கண்ணன் மறைகின்றான். சிவமணி கந்தையாவின் சத்தம் கேட்டு நித்திரையால் எழும்பி ஓடி வருகிறாள்.

சிவமணி - அப்பா..... என்ன நடந்தது? ஏன் கத்திக்குளறுகிறீங்கள். கனவு கண்டனீங்களோ....?

கந்தையா - கனவு காணேல்லையடி..... கண்ணன் என்னட்டை வந்து கதைச்சிட்டுப் போறான்.... அப்பா... எண்டு சொல்லேக்கை என்ரை உடம்பு சில்லிட்டுது. மெய்சிலிர்த்தது... என்னவெண்டு சொல்லமுடியாத உணர்வுகள்... கண்ணன் வந்திட்டு போறானடி....

சிவமணி - அப்பா.... நீங்கள் சொல்லுறது நியாயமே?

கந்தையா - என்ன... என்ன நியாயம்... அநியாயம்....?

சிவமணி - இஞ்சை வந்த பிள்ளை.... தாயான என்னோடை கதைக்காமல் போயிருப்பானே?

கந்தையா - அதெல்லாம் எனக்குத் தெரியாது. அவன் வந்தான். என்னோடை கதைச்சான். போட்டான். பிறகும் வருவான்.... அவன் வரரேக்கை "கொம்மாவையும் கண்டு கதைச்சிட்டுப்போ" எண்டு கட்டாயம் சொல்லுவன்.

சிவமணி - சரியப்பா.... இந்தாங்கோ நித்திரைக்குளியை போட்டிட்டுப்படுங்கோ இப்படி சாமத்திலை எழும்பி இருந்து நித்திரை முழிக்கிறது உடம்புக்கும் கூடாது.... குளிசையைப் போட்டிட்டுப் போய்ப்படுங்கோ... நானும் நித்திரை கொள்ள வேணும். நாளைக்கு எவ்வளவு வேலைகள் இருக்கு....?

## காட்சி - 04

- இவடம் எவடம்?
- புளியடி புங்கடி//
- இவடம் எவடம்...?
- முறிகண்டி, முறிகண்டி

கண் கட்டப்பட்டவன் - முறிகண்டியோ..? பிள்ளையார் இருக்கிறாரோ... போயிட்டாரோ...?

- பிள்ளையாருக்கு ஒரு பிரச்சினையும் இல்லை. பிரச்சினை எல்லாம் மனிசருக்குத்தான்.

கண் கட்டப்பட்டவன் - கண்ணை கட்டினால் மட்டும் போதாது உன்ரை வாயையும் கட்ட வேணும்.

- இஞ்சை வேறையென்ன இருக்குது...?
- கடைகள் பல மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. வடைகள், மோதகம்...

எண்டு ஒரு சில பலகாரங்கள்......

- அது சாப்பாட்டுக்கடை தானே .....? ஒ ..... அதுக்கு இப்ப என்ன...?

- ஏதாவது சாப்பிடுவம், வடையையம் தின்னுவம் காலமை தொடக்கம் சாப்பிடாமல் நடந்து வந்து கொண்டிருக்கிறம்.

- முதல்லை பிள்ளையாரைக் கும்பிட்டு, பிறகு சாப்பிடுவம்.

- பிள்ளையார்.... கல்லுப்பிள்ளையார் எத்தினை அழிவுகள். இவரை நம்பிய அடியவர்கள் சிதறுண்டு மரணித்தும் போயினர். பிறகேன் கும்பிடுவான்...?

- நாங்கள் பிள்ளையாருக்கு நன்றி சொல்லவேணும். எங்களுக்கும் எங்கடை குடும்பத்திற்கும் ஒரு பிரச்சனையும் வரேல்லை. எல்லாம் பிள்ளையாரின் அருள்தான்.

- உண்டியல்லை தாள் காசுகளாப் போட வேணும்...

பிள்ளையாரை கும்பிடுதல்
சுற்றிக்கும்பிடுதல்
தோப்புக்கரணம் போடுதல்
விழுந்து கும்பிடுதல்...
கற்பூரம் எரித்தல்
(உண்டியலுக்குள் தாள் காசுகள் போடுதல்)

பிள்ளையாரப்பா... எங்களை என்றென்றும் காப்பாற்றி அருளப்பா.....
விநாயகனே விக்கினங்கள் தீர்ப்பவனே... நம்பினோர் கைவிடப்படார்.

## காட்சி - 05

பாடல்

(சிவம்) நம்பினோர் கெடுவதில்லை
நான்கு மறை தீர்ப்பு
அம்பிகையைச் சரண் புகுந்தால்
அதிகவரம் பெறலாம்

சிவமணி - நம்பிக்கெட்டுப் போய் இருக்கிறம். நடக்கிறது நடந்துகொண்டே இருக்கு. போறதுகள் போய்க்கொண்டே இருக்கு. நாறிக்கிடக்குது மண்ணில் எங்கடை வாழ்வு.

ராசன் - ஹாய் அன்ரி எப்பிடி... சுகமாய் இருக்கிறியளே...?

சிவமணி - ம்..... ம்...... நீங்கள் கேக்கிறீயள்... சுகத்துக்கு என்ன குறை...? நானும் மனிசனும் நல்லாய் தான் இருக்கிறம்.

ராசன் - சந்தோசமாய் இருக்கிறியள் தானே....?

சிவமணி - ஓ..... ஓ..... ஓ.... சந்தோசங்கள் எல்லாம் எங்களைச் சுத்தித் சுத்தி வந்து தூக்கி வைச்சிருக்குது... ராசன்.

ராசன் - அன்ரி.... நடந்ததுங்கள் எல்லாம் எனக்கு நல்லாய் தெரியும்... உங்கடை

பெடியன் மட்டுமே....? எத்தினை ஆயிரம்பெடி, பெட்டைகள், குஞ்சுகுருமன்கள், அப்பாவிச் சனங்கள் வீடுகள், உடமைகள்.....

சிவமணி - ராசன்.... நீங்கள் கனக்கக் கதைக்கிறீங்கள். எனக்குத் தலைசுத்துது நெஞ்சு வெடிச்சுப் போடும் போலை இருக்கு.....

ராசன் - மன்னிச்சுக்கொள்ளுங்கோ அன்ரி. நான் என்ரை மனசிலை உள்ளதுகளைச் சொல்லி உங்களைச் சங்கடப்படுத்திப்போட்டன். மன்னிச்சுக் கொள்ளுங்கோ.....

சிவமணி - சரி.... தம்பி.... நீங்கள் எப்படி இருக்கிறிங்கள் இப்ப இலங்கைக்கு வந்தது தேவையோடையோ....?

ராசன் - ஜேர்மனிக்குப் போய் இருபது வருசத்துக்குப் பிறகு இஞ்சை வந்திருக்கிறன். சமாதானமெல்லே வந்திட்டுது. பிறந்த நாட்டையும் ஊரையும் மறக்கேலுமே... வரத்தானே வேணும். மனிசி பிள்ளைகளோடை ஒரு மாத லீவிலை வந்திருக்கிறன்.

சிவமணி - நல்லது... பிறந்த நாட்டையும் ஊரையும் மறக்க ஏலுமே...? சொந்த பந்தங்களையும் நினைக்காமல் இருக்க ஏலுமே...?

ராசன் - அது சரி தான் அன்ரி இலங்கை முழுக்க குடும்பத்தோடை உல்லாசப் பயணமாய் சுத்திப்பாத்திட்டுத்தான் கடைசியா எங்கடை ஊருக்கு வந்திருக்கிறம்.

சிவமணி - அப்ப நல்ல சந்தோசமாய் இருக்கிறியள் எண்டு சொல்லுறியள்.

ராசன் - சந்தோசம் தானே.... அன்ரி. ஐரோப்பிய நாடுகள், கனடா, அவுஸ்திரேலியா, இந்தியா எண்டு எத்தினை நாடுகளுக்குப் போய் இருக்கிறம்.... பிள்ளைகள் இப்பத்தான் எங்கடை ஊரைப் பாக்குதுகள். என்ன... வெய்யில் கொடுமை. இஞ்சை வசதிகளும் போதாது... இரண்டு நாட்களுக்கு மேலை இஞ்சை நிக்கேலாது.

சிவமணி - ராசன் நான் தேத்தண்ணி போட்டுத்தாறன் குடிச்சிட்டுப போங்போவன்.

ராசன் - ஐயோ அன்ரி.... நாங்கள் இஞ்சை வந்து குடிக்கிறதே "மினறல் வாட்டர்" தான். தேத்தண்ணி குடிக்கிறேல்லை. தண்ணீர், சாப்பாடு... ஒத்து வருகுதில்லை..... மேல் நாடு மேல்நாடுதான். எத்தினை எத்தினை வசதிகள், சந்தோசங்கள்....?

சிவமணி - ஓ... அது சரி.... அதாலைதானே மேல்நாடு எண்டு சொல்லினம். நாங்கள் எப்பவும் கீழ் நாடு தானே....

ராசன் - அன்ரிக்கு பரந்த அறிவிருக்கு. எனக்கு நேரம் போகுது வெளிநாட்டிலை வாங்கின சாறி ஒண்டு அன்ரிக்குக் கொண்டுவந்தனான்... இந்தாங்கோ.... பிடியுங்கோ அன்ரி.

சிவமணி - கோவிக்காதையுங்கோ... ராசன்... நான் புதுச்சீலையெல்லாம் உடுக்கிற மனநிலையிலை இல்லை.... நீங்கள் வேறை ஆருக்கும் குடுங்கோ....

ராசன் - ஓகே..... ஓகே.... உங்கடை விருப்பம்.

பாடல்

(சிவம்) - மாங்காய் பாலுண்டு
மலைமேல் இருப்பவர்க்கு
தேங்காய் பால் எதுக்கடி குதம்பாய்
தேங்காய்பால் எதுக்கடி...

சிவமணி - இஞ்சருங்கோ இஞ்சை ஒருக்கா வாங்கோ ஆர் வந்திருக்றதெண்டு பாருங்கோவன்.

கந்தையா - அட..... எங்கடை ராசன் வா.... வா நல்லா உடம்பு வைச்சு மதாளிச்சுப் போய் இருக்கிறாய். நிறத்துப்போய் இருக்கிறாய். ஆள் நல்ல பொலிவுதான்.

ராசன் - அங்கிள் நான் அவசரமாப் போகவேணும், என்ரை முன்னாள் சினேகிதங்களுக்கு ஒரு Party வைக்கிறன். இந்தாங்கோ உங்களுக்கும் ஒரு "விஸ்கிப் போத்தல்"

கந்தையா - எனக்கு உதுகள் சரிவராது... உதை அவன் சிவத்துக்குக் குடு தம்பி. (ராசன் சிவத்திடம் விஸ்கிப் போத்தலைக் கொடுக்கிறான்)

சிவம்

பாடல் - குடிப்பதற்கொரு மனமிருந்தால் அவனை மறந்து விடலாம். அவனை மறப்பதற் கொருமனமிருந்தால் குடித்துவிடலாம்.
நான் என்ன செய்வேன்
இருப்தோ ஒரு மனம்....."
ஹா..... ஹா.... ஹா.....
குடிச்சுத்தள்ளுவம் எனக்கு வேறென்ன வேலை.

ராசன் - ஜேர்மனியிலை இருந்தாலும் எங்கடைநாட்டு விசயங்கள் எல்லாம் நல்லா அறிஞ்சு வைச்சிருக்கிறன்
- உங்கடை மகனும் "மாவீரன்" என்ற செய்தியையும் அறிஞ்சன்
- உண்மையிலை அவன் பெரியவீரன்தான்.
- அவன்ரை வீரத்தை நினைச்சுப் பெருமைப் படுகிறன் அங்கிள்.

கந்தையா - சரி தம்பி நீ அவசரமாகப் போகவேணும் போட்டு வா தம்பி.....

சிவமணி - எங்களையும் மறவாமல் பார்க்க வந்ததுக்கு நன்றி தம்பி.

## காட்சி - 06

(கந்தையா வீட்டில் பழைய பொருட்களை வாங்கும் தென்னிலங்கை வியாபாரிகள் வந்துள்ளனர்)

வியாபாரி 1 - கந்தசாமி நானா... கந்தசாமி நானா....
வியாபாரி 2 - கந்தசாமி ஐயே.... கந்தசாமி ஐயே..
சிவமணி - ஆரது... என்ன விசயம்.....?
வியாபாரி 1 - நாங்கள் தென்னிலங்கை யாவாரிகள்...
சிவமணி - வியாபாரியோ....? வீடுமாறி வந்திட்டீங்கள் நாங்கள் வியாபாரம், ஒண்டும் செய்யிறேல்லை.
வியாபாரி 2 - அம்மே.... கொஞ்சம் நில்லுங்க உங்கடை வீட்டிலை...
சிவமணி எங்கடை வீட்டிலை ஒண்டுமில்லை... கெதியா வெளியாலை போங்கோ... இரவு களவெடுக்கிறக்கு இப்ப நோட்டம்விட வந்திருக்கிறியள்... போங்கோ வெளியாலை....
வியாபாரி 1 - உம்மா... அடசீக் அம்மா.... உங்கடை வீட்டிலை வேலைப்பாடான பழைய கதவு இருக்கு எண்டு உங்கடை சனம் தான் சொல்லிச்சு.
சிவமணி - ஒ.... இப்ப அந்தக்கதவுக்கென்ன ?

வியாபாரி 2 - நல்ல வேலைப்பாடு. ஒரு லட்சம் தாறது. நீங்கள் கதவை எங்களுக்குத் தாறது. (காசு கொடுக்கப்படுகிறது)

சிவமணி - ஒரு லட்சமோ... கடவுளே... அந்தப் பழைய கதவுக்கோ...? தரலாம்.... முதல்லை காசைத் தாங்கோ. (காசு கொடுக்கப்படுகிறது) நான் காசை உள்ளை கொண்டு போய் பூட்டிவைச்சாப்பிறகு பின்பக்கமாபோய் கதவை எடுத்துக் கொண்டு போங்கோ. நான் வெளியிலை வரமாட்டன் வீட்டைப் பூட்டிப்போட்டு உள்ளை தான் இருப்பன்.

(வெளியில் சென்றிருந்த கந்தையா வீட்டுக்கு வருகிறார்)

சிவமணி - அவரும் வாறார்.... அப்பா... இஞ்சை வாருங்கோவன்.

கந்தையா - என்ன நடக்குது இஞ்சை....?

சிவமணி - சத்தம் போட்டுக் குழப்பிப் போடாதையுங்கோ. நல்ல அதிஸ்டம் வந்திருக்கு.

கந்தையா - அதிஸ்டமோ...? வந்திருக்கோ? அதிஸ்டத்தை பறிகொடுத்து விட்ட பாவிகளடி நாங்கள்.... இதுக்குமேலை என்ன அதிஸ்டம் கிடைக்கப்போகுது?

சிவமணி - பின்னாலை இருக்கிற எங்கடை பழைய வீட்டின்ரை கதவுக்கு ஒரு இலட்சம் தருகினமாம். தாங்கள் எடுத்துக்கொண்டு போயினமாம். நான் சரி எண்டு சொல்லிப்போட்டன்.

கந்தையா - மணி உன்ரை மண்டையைப் அடிச்சுப் பிளக்கவேணும் போலை எனக்குக் கோவம்வருகுது. எடி அது எங்கடை பாரம்பரியத்தின் பெருமைமிக்க சின்னமடி. எங்கடை பண்பாட்டின் மகத்துவமடி. இதுகளை வெளியிலை போகவிடக்கூடாது. நான் சம்மதிக்கமாட்டன்....

சிவமணி - அப்பா கத்திக்குளறி காரியத்தைக் கெடுத்துப் போடாதையுங்கோ...?

கந்தையா - மணி.... வாயை மூடடி..... இனிக் கதைச்சியோ இஞ்சை கொலைவிழும்.
- இவங்கள் தந்த ஒரு இலட்சம் காசை எடுத்துக்கொண்டு குடு.

(பணம் வியாபாரிகளிடம் கொடுக்கப்படுகிறது)
தம்பியவை சரிதானே நீங்கள் போட்டுவாங்கோ.... எனக்கு நீங்கள் ஒண்டும் சொல்லித்தரவேண்டாம்..... போட்டுவாங்கோ.

## காட்சி - 07

### சுற்றுலாச் செல்லும் தமிழ்மக்கள்

- இவடம் எவடம்...?
புளியடி புங்கடி

- இவடம் எவடம்...?
மாங்குளம், மாங்குளம்
- மாங்குளம் இராணுவ முகாம் தரைமட்டமான கதைகள் தெரியும்.
- இராணுவ முகாம் இருந்த இடத்தையே காணேல்லை.

கண் கட்டப்பட்டவன் - ஒருக்கால் கண்ணைக் கட்டியிருக்கிற துணியை அவிழ்த்து விடுறியளோ... நானும் பாக்க வேணும்....

- கண்ணைத் திறக்கக்கூடாது.
- கண்ணைத் திறக்கிறது தேவையில்லாத வேலை. பேசாமல் கண்ணை மூடிக்கொண்டு வாழுறதுதான் கெட்டித்தனம்...
- அது தானே...? இருக்கிறவரை சந்தோசமா Enjoy பண்ணி வாழவேணும்.
- இந்த நாட்டிலை, எங்கடை மண்ணிலை வாழ முடியாட்டில் வெளிநாடுகளுக்கும் போகலாம் தானே...
- இந்த விசயத்தை தெளிவா விளங்கினால் எங்களுக்கு என்ன பிரச்சனை....?
- ஓ..... ஓ..... அது சரி... அது சரி
- அற்புதமான தத்துவம்
- எந்த மகானும் சொல்லாத சிறப்பான கருத்து.
- நாங்கள் மகான்களுக்குள் சிறந்த பெரிய மகான்கள்.
- உலகம் எங்கடை வரலாற்றை எழுதும்.

- இருந்து பாருங்கோவன்.

- இவடம் எவடம்....?
புளியங்குளம்... புளியங்குளம்

- அட புளியங்குளமோ....?

- இந்த இடத்திலை உள்ள பன்றிக்கெய்தகுளத்திலை ரோட்டுக் கரையிலை யாழ்ப்பாணம், வன்னிப் பிரதேசத்துக்கு இரவிலை தங்கிப்போய்வர நல்ல வசதியான இளைப்பாறுமிடம் இருக்குது.

- அது நல்லாத்தான் இருக்குது.

- இவடம் எவடம்.....?
ஓமந்தை... ஓமந்தை...

- ஓமந்தையிலை றோட்டுக் கரையோடை ஓமந்தை மகாவித்தியாலயம் இருக்கு.

- இயங்கிக்கொண்டிருக்குது.
- ஓமந்தையிலையிருந்து கிழக்காலை போற வீதியாலை சேமமடுவிற்குப் போகலாம்.
- அங்கை காட்டுப்பகுதியிலை ஒரு School நல்லா இயங்குது.
- அது மட்டுமே சேமமடுக்குளத்துக்கு அருகாமையிலை நொச்சிக்குளம், அங்கையுள்ள School, ஆறுமுகத்தான்புதுக்குளம்.... எல்லாம் அருமையான மண். விவசாயம், தோட்டம்... இரண்டுக்கும் திறமான இடங்கள்....

- ஆ...... ஆ..... அதோ வவுனியா கிட்டுது
ஆ...... ஆ..... அதோ வவுனியா கிட்டுது

- ஹேய்..... வவுனியாவுக்கு வந்திட்டம்.
- ஓ..... 12 வருசத்துக்குப் பிறகு நாங்கள் வவுனியாவுக்கு வந்திருக்கிறம்.
- முதல்லை ஒரு நல்ல றெஸ்ரோறன்ஸ், அதுதான் சாராயம் குடிக்கிற Bar க்குப் போவம்....


- வாங்கோ... வாங்கோ...
- நாங்கள் சந்தோசமாகக் குடிப்பம்
- எல்லாரும் நல்லாக் குடியுங்கோ.....
(குடித்துவிட்டு சத்திமிட்டபடி ஆடுகிறார்கள்)

## காட்சி - 08


**சிவமணி** - ஐயோ அப்பா.... இஞ்சை ஓடிவாங்கோ
ஐயோ....

**கந்தையா** - என்ன... என்ன நடந்தது....?


**சிவமணி** - ஐயோ... என்ரை தம்பி சிவம் போயிட்டானப்பா.... தம்பி சிவம் ..... நீயும் என்ரைமகன் கண்ணனிட்டைப் போட்டியோ....? கடவுளே.... எல்லாம் இழப்புகள் எப்பிடித்தாங்குவன்.... கடவுளே எங்களுக்கு ஏன் இதெல்லாம் நடக்குது... ஐயோ... சிவம்.
- மகனே.... கண்ணா... உன்ரை ஆசை மாமாவைப்பாரடா...




சுற்றுலாக்குழுவினர் நிறைபோதையில் கைதட்டி ஆடுகின்றனர் சிவமணியும் கந்தையாவும் அழுதபடி உள்ளனர். இறந்து போன மகன் கண்ணன் வந்து இறந்துவிட்ட மாமன் சிவத்தை வீரசொர்க்கத்துக்கு அழைத்துச் செல்கிறான்.




*** முற்றும் ***




பரமார்த்த குருவும் சீடர்களும் – 01

# பரமார்த்த குருவும் சீடர்களும்

பகுதி - 01

(ஆறு விழுங்கிய ஆறில் ஒருவன்)
ஆசிரியர் தின நாடகம்
2008

பாத்திரங்கள்

01. பரமார்த்தகுரு

02. மட்டி

03. மடையன்

04. மூடன்

05. மிலேச்சன்

06. பேதை

07. மந்திரவாதி

08. உதவியாட்கள் - 02 பேர்

09. பாடகர் குழு




**பாடல்**

ஒரே ஒரு ஊரிலே
ஒரே ஒரு துறவியாம்
பாரெல்லாம் பவனிவரும்
மாபெரும் ஞானியாராம்
பேரோ அன்னவர்கு
பரமார்த்த குருவாம்

(பரமார்த்தகுரு மேற்படி பாடலுக்கு மேடையில் அசைந்து தன்னை அறிமுகப்படுத்திய பின் மரத்தின் கீழுள்ள பீடத்தில் அமருகின்றார்)

சாடிக்கேற்ற மூடியாம்
மூடிக்கேற்ற சாடியாம்
தன்னானே தன்னானே
தந்தெனத்தானா தன்னானே
குருவுக்கேற்ற சீடராம்
சீடருக்கேற்ற குருவாம்

மட்டி, மடையன், மூடன், மிலேச்சன், பேதை அறிமுகப்பாடல்

**பாடல்**

மட்டி வந்தேன் மட்டி வந்தேன்
மடையனோடு கூட வந்தேன்
மூடன் வந்தேன் மூடன் வந்தேன்
மிலேச்சன், பேதை பின்தொடர (மட்டி)

மட்டி - நாங்கள் படிக்கவுமில்லை

மடையன் - எந்த வேலையும் செய்யத்தெரியாது.

மூடன் - பசி..... கடும்பசி... அகோரப்பசி.

மிலேச்சன் - பசிக் கொடுமை தாங்கமுடியாமல் என்ன செய்யலாம் எண்டு திட்டம் போட்டம்

பேதை - இந்த கிழட்டுச் சாமியாரிட்டை சீடராய் வந்து சேர்ந்திட்டம்.

மட்டி - இப்ப எங்கடை பாடு... அதுதான் வயித்துப்பாடு பிரச்சினையில்லை.

மடை - எங்கடை குருவுக்கு கிடைக்கிற அரிசி... காய்கறியைக் கொண்டு சமைச்சுச் சாப்பிடுவம்.

மூடன் - சமைக்கிறது சிலவேளைதான். மற்றும்படி நாங்களும்.. பரமார்ந்த குருவும்... சந்தோசமாக வாழ்ந்து... வருகிறோம். 4, 5 வீடுகளுக்கு போய் சாப்பாட்டுப் பிச்சை எடுத்து....அன்னதானம் பெற்றுக்கொள்வோம்

பாடல்

எங்கள் குரு பெரும் ஞானியன்றோ
அன்பான மக்களே அறிந்திடுவீர்.
ஆமாம்.... அறிந்திடுவீர்.
மக்களை யெல்லாம் நல்வழிப்படுத்த
அவதரித்தார் இங்கு என்ற அறிந்திடுவீர்
ஆமாம்... அறிந்திடுவீர்

பேதை - எங்களைப் போல் பெரும் புத்திசாலிகள் இவருக்கு சீடர்களாக அமைந்துவிட்டோம். ஆமாம் சீடர்களாய். அமைந்துவிட்டது குருவின் பாக்கியம்.

மூடன் - பாருங்கள் ஐயா இந்த அருமையான நாடகத்தை பக்குவமாய் பயன்பெறுவீர். ஆமாம்... பயன்பெறுவீர்.

பரமார்த்த குரு - அன்பான சீடர்களே...

சீடர்கள் - குருவே... குருவே... உங்கள் பாதங்களைக் காட்டுங்கோ (திருவடிகளில் வீழ்ந்து வணங்கல்)

மடை - குருவே... தாங்கள் எம்மை அழைத்த காரணத்தைக் கூறுங்கள் ஐயா, (குரு சிரிக்கிறார். சீடர்கள் கைகட்டி வாய் பொத்தி நிற்கிறார்கள்)

குரு - என் அன்புக்குரிய அறிவுநிறைந்த சீடர்களே..... நான் ஒரு குரு... உலகத்தை உய்விக்க வந்த ஞானகுரு. முக்காலமும் அறிந்த ஞானி... மிகப்பெரிய ஞானி.

சீடர் - உண்மை... உண்மை....

பேதை - உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை.

குரு - இந்த ஊரில் சில நாட்கள் தங்கியிருந்து மக்களை நல்வழிப்படுத்தி விட்டோம்.

சீடர் - உண்மை உண்மை

மட்டி - ஆமாம் குருவே நாங்களும் மூன்று நேரம் நன்றாகச் சாப்பிட்டு வண்டியும் தொந்தியும் வைத்து எங்களுக்கு உடல் ஊதிவிட்டது.

குரு - அபச்சாரம்... அபச்சாரம் மெய்ஞானத்தை தேடும் நீங்கள் அறுசுவை உணவைப் பற்றி நினைப்பதோ... கதைப்பதோ மகா தவறு...

சீடர்கள் - தவறு மகா தவறு...

மூடன் - தவறுதான்..... என்றாலும் குருவும் சீடர்களும் சாப்பிட்டு கொழுத்து விட்டோம் என்பது உண்மை.

மிலேச்சன் - எழும்ப ஏலாது. நடக்க ஏலாது. குனிய ஏலாது.

பேதை - எழும்பினால் பிறகு இருக்க ஏலாமல் கிடக்கு.

குரு - உடம்பு கொழுத்தது பற்றி Think பண்ணவோ அல்லது Worry பண்ணவோ நேரம் இல்லை. நாம் அடுத்த ஊருக்கான பயணத்தைத் தொடங்க வேண்டும். நடந்து பயணம் செய்யும் போது நடந்து நடந்தே எமது உடல் இளைத்துவிடும். நான் உலக மக்களை நல்வழிப்படுத்த வேண்டும். அதுவே எனது குறிக்கோள்... மறந்து விடாதீர்கள். பயணத்தை ஆரம்பிப்போம். (சீடர்கள் மூட்டை முடிச்சுக்கள், சட்டி, பானை சகிதம் புறப்பட்டனர்)

சீடன் -

பரமார்த குரு வாழ்க
பரமார்த்தகுருவுக்கு
ஜெய்
நன்மைகள்
பொலிக
தீமைகள் ஒழிக
பரமார்த்தகுருவுக்கு
ஜே.....
ஓ போடு

(மேடையில் வட்டமாகச் சுற்றி பயணம் செய்கிறார்கள். அவ்வேளை பின்வரும் பாடல் ஒலிக்கிறது. இவர்கள் அதற்கேற்ப பாடி அபிநயிக்கிறார்கள்)

பாடல்

(குருவால் நடக்க இயலாமல் போக சீடர் குருவைக் கைத்தாங்கலாக அழைத்துச் செல்கின்றனர்)
இது பயணம்.... இது பயணம்
ஆ... ஆ... ஆ...
நீண்ட தோர் கால் நடைப்பயணம்.
ஞானத்தை வழங்கிடப் பயணம்.
ஞானியின் ஆன்மீகப் பயணம்.

மக்களை நோக்கிய பயணம்.
மனதினை கழுவிடப் பயணம்.
மடைமைகள் நீங்கிடப் பயணம்.
மன மாசினை அகற்றிடப் பயணம்.
ஞானத்தின் ஒளியினில் பயணம்.
பொங்கும் அறிவொளிப் பயணம்.
ஆ.... ஆ....

மட்டி - குருவே அதோ நாம் செல்லும் வழிக்கு குறுக்காக, எமது பயணத்துக்குத் தடையாக ஆறு ஒன்று ஓடிக்கொண்டிருக்கிறது. இல்லை இல்லை 6 - 5 இக்கு பயந்து ஒடுது.

குரு - சீடர்களே. நான் நல்லா களைச்சுப் போட்டன். ஒரு அடி கூட என்னால் இனி நடக்க ஏலாது.

மடை - அதோ அந்த ஆலமரநிழலில் ஓய்வு எடுத்தபின் பயணத்தை தொடர்வோம்.

சீடர் - நல்லது... நல்லது, அது ..... சரி தான் கொஞ்சம் ரெஸ்ட் (Rest) எடுப்பம்.
(மரத்தின் கீழ் குருவைத் தூக்கிக் கொண்டு போய் படுத்தி. கை கால்களை பிடித்துவிடல், விசிறுதல். செம்புத் தண்ணீர் கொடுத்தல்...)
(குரு எழுந்து அமருகின்றார்)

குரு - ஆறு எமது பயணத்துக்குக் குறுக்காக நிற்கிறது....

சீடர் - ஆமாம் குருவே....


குரு - நாங்கள் அவசரப்படக்கூடாது. அந்த ஆறு விழித்துக்கொண்டிருக்கிறதா அல்லது உறங்கிவிட்டதா என்று முதலில் அறிய வேண்டும்.

சீடர் - Good Idea.... குருவெண்டால் குருதான். முக்காலமும் உணர்ந்த ஞானியெல்லே!

பேதை - சும்மா ஆளே!

குரு - நீங்கள் ஆராவது போய் ஆறு விழிப்பா இருக்கிறதா? அல்லது தூக்கமா இருக்கிறதா? என்று அறிந்து கொண்டு வரவேண்டும்.

சீடர் - ஐயையோ.... நான் மாட்டன்.
(ஒருவர் பின் ஒருவராக ஓடி பயந்து நிற்கின்றனர்)



குரு - மட்டி... நீயுமா... பயப்படுகிறாய். நீ மிகவும் துணிவுள்ளவன் அல்லவா?

மட்டி - நான் பயப்பிடவில்லை. சும்மா... சும்மா. நான் போய் பாக்கிறன். இவங்கள் பயந்தாங் கொள்ளிகள்.

குரு - சபாஸ். அஞ்சினருக்கு சத மரணம்.அஞ்சா நெஞ்சத்து ஆடவனுக்கு ஒரு மரணம்.

மட்டி - ஐயையோ... சதுரம் நடுங்குது.... குருவே....

குரு - பேதை.....

பேதை - குருவே.. ஆறு தூங்கிவிட்டதா அல்லது வழித்திருக்கிறதா என்பதை எப்படி அறிவது என்று எங்களுக்குத் தெரியாது.

மிலேச்சன் - சத்தியமா தெரியாது...

குரு - என்னைச் சற்று சிந்திக்க விடுங்கள்.... நீங்கள் உணவைச் சமையுங்கள் முதலில் பசி தீர புசிப்போம்....
(சீடர்கள் சமைக்கின்றனர். குரு யோசிக்கின்றார்)
(சீடர் சமைத்தபடி)

சீடர் - ஐயோ மட்டி இண்டைக்கு

மடை - துலைச்சாய் போ....

மூடன் - துணிந்தவனுக்கு துக்கமில்லையோ

மிலேச்சன் - ஆறு மட்டியை விழுங்கப்போகுது...

மட்டி - ஐ.... யோ.... எனக்கு பயமா இருக்கு.....

குரு - சீடர்களே... நன்கு ஆராய்ந்து சிந்தித்து ஒரு உபாயம் கண்டு பிடித்து விட்டேன்.....

மிலேச்சன் - எங்கடை குரு ஞானி மட்டுமில்லை. விஞ்ஞானியும் தான்.

குரு - உபாயத்தைக் சொல்லுகிறேன். கவனமாக கேளுங்கோ. எரிகின்ற விறகு கொள்ளி ஒண்டைக் கொண்டுபோய் ஆற்றிலை வைக்க ஆறு ஏதேனும் சத்தம் போட்டால் அது விழித்திருக்கிறது என்று அர்த்தம்.

பேதை - சத்தம் போடாட்டில் தூங்கி விட்டது என்று அர்த்தம்.

குரு - பேதை... நீ சரியான கெட்டிக்காரன் எனக்குப் பின் உனக்குத்தான் குரு பட்டம் சூட்ட வேண்டும்.

மிலேச்சன் - நான் ஒரு Senior சீடன் இருக்க எப்படி Unior சீடனுக்கு குருப்பட்டம் கட்டுவீர்? சரி... சரி... அதைப் பிறகு பார்ப்பம். துணிவுள்ள சீடனே மட்டி, கொள்ளிக்கட்டையை எடுத்துக் கொண்டுபோய் அறிந்துவா...

(மட்டி கொள்ளிக்கட்டையைப் பயத்துடன் எடுத்தல், மிரண்டு மிரண்டு பார்த்தல்)

மட்டி - குருவே என்னை ஆசீர்வதித்து வாழ்த்தி அனுப்புங்கள் ஐயா


குரு - மட்டி என் திருவருள் உன்னை எப்போதும் காப்பாற்றும். சென்று வா... வென்றுவா...

மூடன் - மட்டி... கடைசியா ஒருக்கா உன்ரை முகத்தை காட்டிட்டுப்போ.... (மட்டி பயந்தும், அழுதும் செல்கின்றான்)

- மட்டி உன்ரை IC யைத் தந்திட்டுப்போ. சில வேளை அஞ்சலி நோட்டீஸ் அடிக்கவேண்டி வரும்.

(மட்டி ஆற்றில் கொள்ளிக்கட்டையை அமிழ்த்த ஸ்...ஸ... என்ற சத்தம் வரப் பயந்து ஓட்டம் எடுக்கின்றான்.

மட்டி - ஐயோ... ஐயோ... (மட்டி பயந்து கதறியபடி இடம் வலமாக ஓடி வரல்)


ஆறு

(மட்டி மூச்சு இரைக்கின்றான்)

குரு - மட்டி என்ன நடந்தது?

மட்டி - என்ன சொல்வது எப்படிச் சொல்வது? கொள்ளிக் கட்டையால் ஆற்றைத் தொட்டதும் ஸ்... ஸ்.... என்று பேரோசையுடன் ஆறு புகையாய் எழுந்தது...

குரு - எழுந்து....

மட்டி - என்னை விழுங்கவந்தது... குருவே உங்கள் திருவருளால்தான் நான் தப்பினேன்.

(கொள்ளிக் கட்டையை ஒரு சீடனிடம் கொடுக்க அவர்கள் பயத்தால் மாறி மாறி கொடுத்தல்)

குரு - ஆறு இன்னும் உறங்கவில்லை விழித்துக் கொண்டிருக்கிறது. இன்னும் சற்று நேரம் பொறுப்போம். ஆறு தூங்கிவிடும். அதன் பிறகு ஆற்றைக் கடப்போம்.

மிலேச்சன் - தாலாட்டுப் பாடினால் ஆறு கெதியா நித்திரை கொள்ளும்.
- தாலாட்டுப் பாடுவம்.

**சீடரின் தாலாட்டுப் பாடல்**

ஆறாரோ.... ஆறிவரோ... இந்த
ஆறாரோ.... ஆறிவரோ...
கண்ணுறங்கு... கண்ணுறங்கு ... எங்கள்
கண்ணான ஆறே கண்ணுறங்கு
பொல்லாத ஆறு என்று பழி உனக்கு சேராமல் எங்கள்
பைங்கிளியே பக்குவமாய் கண்ணுறங்கு
போக வழி வேண்டுமையா - எங்கள்
சோதரனே சுகமாய் கண்ணுறங்கு - அன்பு
சோதரனே சுகமாய் கண்ணுறங்கு - எங்கள்
கண்மணியே கண்ணுறங்கு, கண்ணுறங்கு....
(தாலாட்டுப் பாடும் வேளை குருவும் உறங்கிக் குறட்டை விடுகிறார்)

பேதை - நாங்கள் ஆற்றுக்கு தாலாட்டுப் பாட எங்கள் குருவே உறங்கிவிட்டார்.

மிலே - அப்ப ஆறும் நல்லா தூங்கியிருக்கும்

மூடன் - எழுப்புவமே?

மடை - ஆறை எழுப்புறதோ.... விசரே உனக்கு?

மூடன் - குருவை எழுப்புவம் எண்டனான்

பேதை - குருவை எழுப்புவம்...

(குருவை தட்டி எழுப்புதல். தூக்கி நிமிர்த்தல்)

குரு - நன்று நன்று என்னையே தூங்கவைத்து விட்டது உங்கள் தாலாட்டு. ஆறு நிச்சயமா ஆழ்ந்த நித்திரையாகி இருக்கும். மூடா சென்று பார்த்துவா..

(மூடன் அணைந்தகட்டையை எடுத்து சென்று பார்த்தல் ஆறு சத்தமிடவில்லை)

மூடன் - ஒரு சத்தமும் இல்லை. ஆறு நல்ல நித்திரை (ஓடி வருதல்) குருவே ஆறு நல்ல நித்திரை.

குரு - யாரும் சிறு சத்தமும் போடக் கூடாது. மெல்ல மெல்ல நடந்து ஆற்றைக் கடக்க வேண்டும்.

பேதை - ஏதாவது சத்தம் கேட்டு ஆறு விழித்தால் எல்லோரும் அம்போதான்.

(சீடர் மூட்டை முடிச்சுகளுடன் இறங்குதல்)

மூடன் - முழங்காலுக்குக் கீழைதான் தண்ணி ஓடுது.

மட்டி - சத்தம் போடாதை

குரு - ஐயோ..... (குரு வழுக்கி விழுதல்)

மடையன் - ஆறு எழும்பி விட்டுது. குருவை விழுங்குது Escape

ஓடி வந்து கரையிலே ஒதுங்குங்கோ. (ஊரவர் வழிப்போக்கர் குருவைக் காப்பாற்றி முதலுதவி செய்தல்)

(ஊரவர் குழுவும் குருவை கரையேற்ற உதவுகின்றனர். குருவை மேடையின் D.C பகுதியில் கிடத்தி வயிற்றில் அழுத்தி தண்ணீரை வெளியே எடுக்கின்றனர். குரு எழும்புதல். சீடர் மகிழ்ந்து ஆரவாரம் செய்கின்றனர்.

குரு - எனக்கொரு சந்தேகம்?

மூடன் - என்ன சந்தேகம்?

குரு - நாங்கள் 06 பேரும் உயிர் தப்பி கரைக்கு வந்துள்ளோமா. என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

மிலேச்சன் - நல்லவிசயம் நான் தான் Senior. முதலில் எண்ணுகிறன். (குருவையும மற்றவர்களையும் வரிசையாய் விட்டு எண்ணல்)
5 பேர்தான் ஒராள் தொலைஞ்சார்.

சீடன் - நான் எண்ணிப் பார்க்கிறன் (எண்ணுல்)

சீடன் - 05 பேர் தான் இருக்கிறம். ஐயோ ஓராளைக் காணேல்லை.

குரு - எங்களில் ஓராளை ஆறு விழுங்கி விட்டது. அந்த ஆள் யாரெண்டு முக்காலமும் உணர்ந்த ஞானியாகிய என்னாலையே கண்டுபிடிக்க முடியவில்லை.
(சீடர்கள் அழுது குளறுகின்றனர்)

ஊரவர் - இப்ப என்ன நடந்து போச்சு? அதுதானே இப்ப என்ன நடந்து போச்சு? ஏன் ஒப்பாரி வைச்சு அழுகிறீர்கள்? அது தானே ஏன் ஒப்பாரி வைச்சு அழுகிறியள்?

குரு - அப்பனே நாங்கள் 06 பேர் இந்த ஆற்றைக் கடந்து வந்தோம். பாவி ஆறு எங்களில் ஒருவனை விழுங்கிவிட்டது.

ஊரவன் 1 - ஆற்றில் கொஞ்சத் தண்ணீர் தானே ஓடுது. யாரும் இதில் மூழ்கி இருக்க முடியாது.

ஊரவன் 2 - அது தானே (எண்ணிப்பார்த்தல்) 06 பேரும் நிற்கிறார்களே.

ஊரவன் 1 - 06 பேரும் பன்னாடையாலை வடிச்செடுத்த முட்டாள்களாய் இருக்கிறார்கள்.

ஊரவன் 2 - அவருக்கு குரு பட்டமாம். அவையளுக்கு சீடர் பட்டமாம். இவங்களைப் பேக்காட்டி நன்றாக் காசு கறந்துவிடலாம். (பரமார்ந்த குருவின் அருகில் வந்து)

ஊரவன் 1 - குருவே இந்த ஊரில் திறமான மந்திரவாதி ஒருவர் இருக்கிறார். போதிய பணம் கொடுத்தால் ஆறு விழுங்கியவனை தனது மந்திரசக்தியால் மீட்டுத் தந்திடுவார். காசு கனக்கக் குடுக்கக் வேணும். காசா, உயிரா..

குரு - காசு என்ன காசு? தூசு. உயிர்தான் பெரிசு. மந்திரவாதியை உடனே கூட்டிக்கொண்டு வாங்கோ... ஓடுங்கோ...
(ஊரவர் மந்திரவாதியுடன் ஊரவர் வரல்)

(மந்திரவாதி மந்திரக்கோலை வைத்துக் கொண்டு மந்திர உச்சாடனம் செய்தல்)

மந்திரவாதி- இந்த மந்திரக்கோலால் ஒவ்வொரு வரினதும் முதுகில் ஓங்கி அடிப்பேன். அப்போது ஒவ்வொருவரும் உங்கள் பெயரையும் சொல்லி ஒன்றில் இருந்து இலக்கத்தையும் சொல்ல வேண்டும்.

(வரிசையாக நிற்கவைத்தல். அடித்தல்)

குரு - ஐயோ... ஆ... நான் பரமார்த்தகுரு ஒண்டு.

சீடர்கள் 1. - மட்டி இரண்டு

2. - மடையன் மூன்று

3. - மூடன் நான்கு

4. - மிலே ஐந்து

5. - பேதை ஆறு

குரு - ஆறு பேரும் இருக்கிறோம். ஆறு விழுங்கிய ஒருவன் மீண்டுவிட்டான். ஐயா... நன்றி... நன்றி... இந்தாருங்கள் பணம்.

மந்திரவாதி- இவர் உண்மையான குருவாக இருக்க முடியாது.

ஊரவர் - இவர்கள் உண்மையான சீடராக இருக்க ஏலாது.

மந்திரவாதி- ஒய் பரமார்த்தா யாரை ஏமாற்றுகிறாய். நீ யார்... உண்மையைச் சொல்லாவிட்டால்..... (அடிக்கப்போதல்)

குரு - ஐயோ அடிச்சுப் போடாதையுங்கோ நான் குருவில்லை. போலியாக... வயித்துப்பாட்டுக்காக இப்படி குரு வேடம் போட்டு வாழுகிறேன்.

சீடர் - தாங்களும் அப்பிடித்தான். உழைக்கக் கஷ்டத்தினாலை சீடர்களாக.... மன்னிச்சுக் கொள்ளுங்கோ...

ஊரவன் - குரு எப்படி இருக்க வேண்டும் எண்டு உனக்குத் தெரியுமா? மாதா, பிதா குரு தெய்வத்திற்கு சமனானவர்கள். குருவும், சீடர்களும் சமூகத்துக்கு முன்னோடியாக இருக்க வேண்டும். அறிவின் ஒளியாக இருக்க வேண்டும். தினமும் அறிவுத் தேடல் உள்ளவராக இருக்க வேண்டும். ஆன்மீகத் தேடல் மிகமிக அவசியமானது.

ஊரவன் 2 - கற்பதற்கு ஆர்வமுள்ளவராய் இருக்கவேண்டும். சமூகமுற்போக்குக் கொண்டவர்களாய் இருக்க வேண்டும்.

**பாடல்**

குருவே உலகின் திருவுருவே
குருவே அறிவின் அரு உருவே
குருவே பெருமையின் படிமமுமே
குருவே ஞானத்தின் ஒளியுருவே


குருவாய் அமைவது இறைவனின் வரம் அன்றோ
குருவாய் அமைவது சீடரின் பெரும் பேறன்றோ

குருவே உயிரின் மூச்சு...

குருவே உலகின் முழுமை..
குருவே உலகின் இயக்கம்..
குருவே வாழ்வின் சாரம்...

குருவாய் வா...
இறைவா வா...
திருவாய் வா.... எம்முள்
உறைவாய் வா.....

*** முற்றும் ***




பரமார்த்த குருவும் சீடர்களும் – 02

# பரமார்த்தகுருவும் சீடர்களும்

பாகம் - 02

ஞானசம்பந்தர் கலைமன்றம் ஆண்டு விழா
2018

பாத்திரங்கள்

01. பரமார்த்தகுரு

02. சீடர்கள் - 05 பேர்

03. மணியகாரன் (ஊர்த்தலைவன்)

04. மணியகாரனின் உதவி ஆள்

05. மடத்து வேலையாள்

06. பல்லக்குச் செய்வோர் ஒருசிலர்

07. குதிரை

08. நாய்

பாடல்

வணக்கம் கூறிநின்றோம் - புகழ்
மணக்கும் மூடர் கதையை
நாடகமாய் மேடைதனில் ஆடிடவே
வேடங்கள் பலவாய் சூடி நின்றோம்
நகைச்சுவையுடன் நல்ல கருத்தும் ஒன்றாக
அவை தனில் நாடகம் ஆடிட வந்தோம்
இணக்கம் கொண்டு இங்கு வந்த ஐயன்மீர்
அனைவருக்கும் அன்பு வணக்கங்கள்.

(திரை திறந்ததும்)




சீடர்கள் குதிரையைத் தள்ளிக்கொண்டு நிற்கின்றார்கள். ஒவ்வொருவராக தம்மை அறிமுகப்படுத்துகிறார்கள்.

ப.குரு - நான் தான் பரமார்த்தகுரு, பேரறிவுள்ள பெருங்குரு என்று கூறுவர்.

சீடர்கள் - நான் தான் மட்டி
நான் தான் மடையன்
நான் தான் மூடன் (மறதி வந்ததுபோல் யோசித்த பின் பெயர் கூறுவான்)
நான் தான் மிலேச்சன்
நான் தான் பேதை (திக்குவாய் - தடக்கியபடி பெயர் கூறுவான்)
(சீடர்கள் திரும்பவும் குதிரையைத் தள்ளியபடி நிற்கின்றார்கள்)

குரு - சீடர்களே குதிரையை நன்றாகத் தள்ளுங்கள்.
ம்.... ம் போதாது
நன்றாகத் தள்ளுங்கள்

சீடர்கள் - குருவே குதிரை அசையுதில்லை

குரு - இது பெருஞ்சாதிக்குதிரை ஆரம்பத்திலை அப்பிடி இப்பிடிதான் பிறகு நன்றாக ஓடும்.

சீடன் 2 - எனக்கு மூச்சு வாங்குது
3 - நான் நல்லாக் களைச்சுப்போனன்
4 - ஏலாது... இனி ஏலாது
5. - என்னாலை ஏலாது, நெஞ்சு நோகுது.


குரு - என்னடா களைப்பு? நான் அள்ளித் தரத்தர நல்லா மூக்கு முட்டச் சாப்பிடுறீங்கள் இப்ப ஏலாதோ? உதவாக்கரைகள்.

சீடன் 1 - குருவே; எங்கள் ஞானகுருவே
2 - பெரும் அருளாளரே
3 - வற்றாத நதிபோன்ற அறிவானவரே
4 - அறிவுச் சுடரே
5 - தங்கள் ஞானத்தால் குதிரை நகர தக்கதொரு மார்க்கத்தை அறிந்து கூறுங்கள் குருவே.

(குரு கண்ணை முடியபடி)
ம்...... ஆ..... ஆ....
ம்.... அ.... ஆ....

வழிகண்டு பிடிச்சிட்டேன் (சீடர்கள் மகிழ்தல்)
இந்த குதிரையைப் பின்னாலை நின்று நீங்கள் தள்ளக்கூடாது. முன்னாலை வந்துநின்றுதான் தள்ள வேண்டும்.

சீடர் - ஆ..... ஆ...... அருமை அருமை
(சீடர்கள் குதிரையின் முன்னால் வந்து நின்று (அது பின்பக்கமாகப் செல்லக் கூடியதாக) தள்ளுகிறார்கள்.




சீடர் 1 - ஆ..... குதிரை நகருது
2 - அச்சாக்குதிரை
3 - ஆச்சரியக்குதிரை
4 - அதிசயக்குதிரை
5 - அருமையான குதிரை

குரு - ஒரு கோடி (ரூபாய்) காசு குடுத்தாலும், இப்பிடி ஒரு குதிரையை வாங்க ஏலாது.

சீடன் 4 - எங்கடை குருவின் பேரறிவுக்கு இறைவன் கொடுத்த பரிசு இது.

குரு - உண்மை... உண்மை...

சீடர்கள் - ஞான குரு - வாழ்க வாழ்க
அறிவுக்குரு - வாழ்க வாழ்க
ராஜ குரு - வாழ்க வாழ்க

பரமாத்த குருவுக்கு ஜே.... ஜே....

பாடல்

சாடிக்கேற்ற மூடியாம்
மூடிக்கேற்ற சாடியாம்
குருவுக்கேற்ற சீடராம்
சீடருக்கேற்ற குருவுமாம்
இலவசமாய் பெற்ற கிழட்டுக்குதிரை
முக்கி மூசித்தள்ளி நிற்கின்றார்கள்
மூடர் செயலை நாடகமாய் பாருங்கள்.

சீடன் - குருவே குதிரைக்குக் கடிவாளம் போடவேண்டும்.

குரு - அருமையான யோசனை

சீடன் 2 - அதற்கு கயிற்றுக்கு எங்கை போறது? வைக்கல் புரியாலை கடிவாளம் போடலாம். அதை நான் எடுத்துக் கொண்டு வாறன்.

- (சீடர் குதிரையைப் பிடித்துக்கொண்டு நிற்கின்றனர். வைக்கல் புரியைத் தவறுதலாக சீடன் ஒருவனின் மூக்கினுள் செலுத்திவிட அவன் பெரிதாக தும்முகிறான். குருவும் சீடர்களும் தும்மல் சத்தத்திற்கு பயந்து சிதறி விழுகின்றனர்)

குரு - ஆ...... ஐயோ... நோகுது. குத்துது. (சீடர்கள் எழும்பி, எழும்ப இயலாமல் இருக்கும் குருவைத்தூக்கி விடுகின்றனர்)

சீடன் 3 - பாவம் எங்கடை குரு. குருவே கடுமையா நோகுதோ? நோவொண்டு மில்லை. மூளைதான் கலங்கிப்போச்சு.
- குடல் கலங்கிப் போச்சோ?

குரு - இல்லை... இல்லை...

சீடன் 4 - அப்ப பிர்ச்சனை இல்லை. நல்லாச் சாப்பிடலாம்.

சீடன் 5 - எங்கடை ஞானகுருவுக்கு ஏதாவது நடக்குமே?

சீடன் 1 - அதுதானே!

சீடன் 2 - வைக்கோல் புரிசரிவராது காட்டுக் கொடியாலை குதிரைக்குக் கடி வாளம் போடுவம். (காட்டுக்கொடி கொண்டு வந்து குதிரைக்கு கடிவாளம் போடுதல்)

சீடன் 3 - நல்லாப் பிடி

குரு - பின்னங்கால்களைப் பிடியுங்கோடா

சீடன் 4 - இறுக்கிப்பிடி

சீடன் 5 - கடிவாளத்தைப் போடு

சீடன் 1 - கறுப்பாயிருக்கு அது தானே மூக்கு

சீடன் 2 - ஓ.... ஓ.....

சீடன் 3 - சரி.... ஒரு மாதிரிக் கடிவாளம் போட்டாச்சு.

சீடன் 4 - பிறகென்ன எங்கடை குரு, குதிரையிலை ஏறி இருக்கவேண்டியது தான்.

குரு - சீடர்களே நான் விழுந்தடிச்சு மூளை கலங்கியிருக்கிறன். தயவு செய்து என்ரை குடலைக் கலக்கிப் போடாதையுங்கோ. பெரிய அனர்த்தம் ஏற்பட வழிதேடாதையுங்கோ.

சீடன் 5 - குருவே நாங்கள் உங்கடை சீடப்பிள்ளையள் எண்டு எதுக்கு இருக்கிறம்? நாங்கள் எல்லாருமாச் சேர்ந்து உங்களை தூக்கி ஏத்திவிடுகிறம்.
எங்கடை உடம்மைபாருங்கோ.
திரண்ட தசைகள்... எப்பிடி...?

குரு - அடேய் என்ரை உருப்படியைப்பார். வயித்தைப்பார். 346 இறாத்தல் தூக்குவியளே....? விழுத்தியடிச்சு என்னைச் சாக்கொல்லப் பாக்கிறியளோ...?

சீடன் 1 - இல்லை குருவே... இல்லை
- அப்படியெல்லாம் சொல்லக்கூடாது.
- சாகவேணுமெண்டு விதி இருந்தால்தான் நிண்டால் என்ன?
- இருந்தால் என்ன. குதிரையில் ஏறினால் என்ன சாவு வரும்.

சீடன் 2 - குருவுக்கு அப்பிடிச் சொல்லக்கூடாது.
அவர் எல்லாம் அறிந்த ஞானகுரு.
அவருக்கு எதுவும் நடக்காது.
குருவே.... வாருங்கள். எல்லாரும் குருவைத் தூக்குங்கோ (குருவை குதிரையில் தூக்கி வைக்கின்றனர். குதிரை பாரம் தாங்கமுடியாமல் அலறுகிறது)

சீடன் 3 - ஐயோ குதிரை அலறுகிறது.
குதிரை கீழ்லை போகுது.

குரு - இறக்குங்கோடா... என்னை இறக்கி விடுங்கோடா..

சீடன் 4 - குதிரை சரிந்து மெதுவா விழுகுது. குருவே பயப்பிடத் தேவையில்லை இப்ப நீங்களே இறங்கலாம்.

சீடன் 5 - குதிரைக்கு சீவன் போட்டுதோ...? பாவம்... தூக்கி நிப்பாட்டுவம். (குரு களைத்துப் போய் நிலத்தில் அமருகிறார்)

பாடல்

நந்தவனத்தில் ஓர் ஆண்டி
நாலாறு மாசமாய் குயவனைவேண்டி
கொண்டு வந்தானடி (யொரு) தோண்டி - அதை
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைச்சான்டி.

குரு - அப்பவே நான் சொன்னான் 346 இறாத்தலை இத்தக்குதிரை தாங்கமாட்டாது என்று....

சீடர் - (தங்களுக்குள்)

1. ஒரு நாளைக்கு 6, 7 தடவைகள் சாப்பிடுகிறது.
2. சாட்பிட்டு ஒரேயடியாய் நித்திரை கொள்ளுகிறது.
3. அப்ப உடம்பு வைக்கும் தானே?
4. அங்கை அவற்றை தொந்தி அதுதான் வயிற்றைப்பார். பெரிய பானைமாதிரி...
5. கெதியிலை எங்கடை குருவாலை உலகத்தில் உணவுப்பஞ்சம் வரப்போகுது.




குரு - அங்கை என்னடா கதை....? எனக்கு நல்லாக் காது கேட்கும். உங்கள் 05 பேருக்கும் நான் வேளா வேளைக்கு சாப்பாடு போடுறன் தானே...?
என்ன குறை வைச்சன் உங்களுக்கு?
இனி நான் வாழ்ந்து பயனில்லை.
சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போறன்.

சீடன் 1 - குருவே எங்களை மன்னிச்சுக்கொள்ளுங்கோ.
2 - எங்கடை அன்பான குருவல்லே.
3 - எங்கடை செல்லக் குருவல்லே.
4 - எங்கடை ஞான குருவல்லே.

பாடல்

சாப்பாடு இல்லாமல் உலகில் இனிதாய்
வாழவும் முடியுமோ குருவே
சாப்பாடு இல்லாமல் நன்றாய் - உம்மைப்போல்
சிந்திக்க முடியுமொ குருவே
சாப்பாடு தேடி ஊரூராய்
நடக்கவும் முடியுமோ குருவே
சாப்பாடே உலகின் மேலான தெய்வமாகும் குருவே
எம்மை மன்னித்தருளும் குருநாதனே

**சீடன் 2** - நாங்கள் எப்பிடிக் கெஞ்சி மன்றாடினாலும் எங்கடை குரு எழும்பமாட்டார்.

**சீடன் 1** - (இரகசியமாக) உண்ணாவிரதமாம்... மண்ணாங்கட்டி.

**சீடன் 3** - பொறு... பொறு... நான் ஒரு வேலை செய்து காட்டுறன்.

**சீடன் 4** - என்ன வேலை....?

**சீடன் 3** - ஹே... சாப்பாடு வருகுது
ஹே.... சாப்பாடு வருகுது

குரு - (எழும்பிவரல்) சாப்பாடா... எங்கை.... எங்கை....?

**சீடன் 2** - மன்னிக்க வேண்டும் குருவே


**சீடன் 3** - இப்படியே இருந்தால் அடுத்த ஊர் மடத்துக்குச் சென்று சாப்பிட ஏலாது.

**சீடன் 1** - தயவு செய்து விரைவாக வாருங்கள் அடுத்து ஊர் மடத்துக்குச் செல்வோம்.

குரு - அது சரிதான்.. எல்லோரும் என்னாலை பட்டினி கிடக்கக்கூடாது. எனக்கும் பசி வயிற்றை தோண்டுது செல்வோம் வாருங்கள். (குதிரையையும் பின்பக்கமாகத் தள்ளியபடி நடக்கின்றார்கள்)

**பாடல்**

சாப்பாடு தேடியல்லோ
சோம்பேறிக் கூட்டம் ஒன்று
கூப்பாடு போட்டுக் கொண்டே
குதிரையை பின்னால் தள்ளியபடியே
சாப்பாடுக்காய் நாய்படாப் பாடுபட்டு
ஊரூராய் நடக்கிறார்கள் மூடர்கள்
சாப்பாட்டுக்காய் வாழ்வதோ மானிடரே
வாழ்வதற்காய் சாப்பிடுங்கள் மதி கொண்ட மானிடரே.



(பரமார்த்த குருவும், சீடர்களும் அடுத்த ஊரைச் சென்றடைகின்றனர்)

குரு - ஒரு மாதிரி இந்த ஊருக்கு வந்து சேர்ந்திட்டம்.

மணியகாரன் - நில்லுங்கோ... நில்லுங்கோ.... (மனதுள்) இதென்ன குதிரை பின்பக்கமாக நடந்துவருகுது. விசித்திரமான குதிரைதான்.

உதவியாள் - அவர்களும் விசித்திரமானவர்களாக இருக்கலாம்.

சீடன் 1 - எங்களை நிறுத்த நீங்கள் யார்...?

சீடன் 2 - அது தானே... நீங்கள் யார்?

மணியகாரன் - நான் இந்த ஊருக்கே மணியகாரன்.

உதவியாள் - இவரை யார் எண்டு கேக்கிறியளோ. மணியகாரர். ஓ.. மணியகாரர்.

சீடன் - மணிய காரனெண்டால் ஆர்?

மணியகாரன்- மணியகாரனெண்டால் ஆரெண்டு தெரியாத வெட்கங்கெட்ட பிறவிகள்.

சீடன் - மணியகாரனெண்டால்... கோயிலில் மணி அடிக்கிறவராக இருக்க வேண்டும்.


சீடன் - அப்ப இவர்தான் டாங்.... டாங்... டாங்...

உதவியாளர் - மணியகாரனெண்டால் ஊருக்கே தலைவர்.

குரு - ஊர் தலைவரா...? சீடர்களே மணியகார ஐயாவிடம் மன்னிப்புக் கேளுங்கள்.

சீடன் - எங்களுக்கு நீங்கள் தான் மணியகாரர் எண்டு தெரியாதையா.

சீடர்கள் - எங்களை மன்னிச்சுக் கொள்ளுங்கோ ஐயா.




குரு - தெரியாமல் செய்தவை குற்றமாகாது.

மணியகாரர் - தெரியாமல் செய்தவை தவறுகள். தவறுகள் திருத்தப்பட வேண்டும். குற்றங்கள் தான் தண்டிக்கப்பட வேண்டும்.
மணியகாரர் - அது சரி.... நீங்கள் யார்...? இங்கு ஏன் வந்தீர்கள்.

சீடன் - இவர்தான் உலகம் போற்றும் அற்புதமானகுரு, பரமார்த்தகுரு என்பார்கள்.

மணியகாரர் - அப்படியா....? வணக்கம் குருவே (மனதுக்குள் சாப்பாட்டு இராமன்கள் போல் தெரிகிறது)

சீடன் 2 - நாங்கள் பரமார்த குருவின் சீடர்கள் மட்டி, மடையன், மூடன், மிலேச்சன், பேதை.... என்பது எங்களின் பெயர்.

மணியகாரர்- பொருத்தமான பெயர், அருமை அருமை. மூடர்களுக்கென்றே உருவான பெயர்கள்.

மணியகாரர்- சரி.... நீங்கள் வெளியூர்காரர்கள் குதிரை இந்த ஊருக்குள் நுழையவதென்றால் வரி கட்ட வேண்டும்.

குரு - குதிரைக்கு வரியா...?

மணியகாரர் - ஆம் குதிரை வரி....

உதவியாளர் - அது தான் குதிரை வரி... குதிரைவரி.

சீடன் - இது எங்களுக்கு இலவசமாகக் கிடைத்த குதிரை. அதற்கு ஏன் வரி கட்ட வேண்டும்.

சீடன் - இலவசமாகவே ஊருக்குள் செல்ல விடுவதுதான் முறையாகும்.

குரு - அது சரிதான்

மணியகாரர் - இது பின்புறமாக பயணம் செய்யும் அதிசயக் குதிரை என்பதால் இரண்ட மடங்கு வரி செலுத்த வேண்டும்.

குரு - போச்சு.... எல்லாம் போச்சு.

சீடர்
1. குருவே களைச்சுப் போனம்.
2. குருவே பசிக்குது
3. குருவே நித்திரை வருகுது
4. தலைசுத்துது
5. பசிவயிற்றைக் கிள்ளுது

குரு - என்னை என்னடா செய்யச் சொல்கிறாய்..?

சீடர் - குதிரை வரியைக் குடுங்கோ குருவே

குரு - ம்..... மணியகாரரே... இந்தாப்பா இரண்டு மடங்கு பணம். சந்தோஷம் தானே?

மணி - குதிரை வரி வாங்கிறது என்ரைகடமை. அதில் எனக்கென்ன சந்தோஷம் இருக்கிறது? கடமையைச் சரியாகச் செய்கிறன் என்ற திருப்தி. அவ்வளவுதான்.

குரு - எங்களை ஏமாத்தி காசு வாங்கினது சந்தோஷமில்லையோ?


மணி - குரு என்றும் பாராமல் உன்னை அடிச்சு முறிப்பன். (மணியகாரன் குருவுக்கு அடிக்கப்போதல். சீடர்கள் மணியகாரனைப் பிடித்து சமாதானப்படுத்தி விடுகின்றனர்)

சீடர் 1 - மணியகாரர் ஐயா கோபப்படாதையுங்கோ குருவுக்கு வயசு போட்டுது. உடம்பு தாங்காது.

3 - நீங்கள் அடிச்சு குருவுக்கு ஏதாவது நடந்து விட்டால்... உங்கடை நிலை.... குருவை மன்னிச்சுக் கொள்ளுங்கோ.

மணியகாரர் - சரி... சரி நான் மன்னிச்சுக் கொள்ளுறன். இந்தப் பக்கமாகப் போனால் விரைவில் ஒரு மடத்தை அடைவீர்கள். அங்கு உங்களுக்கு உணவு அளிப்பார்கள்.

குரு - நன்றி ஐயா....




(குருவும் சீடர்களும் நடந்து செல்கின்றார்கள், மடத்தை அடைகின்றார்கள். மடத்தில் வேலையாள் வரவேற்கின்றான்)

வேலையாள் - வாருங்கோ, வாருங்கோ எங்கடை "சோற்றுமடம்" உங்களை அன்புடன் வரவேற்கிறது.

குரு - மகிழ்ச்சி. நன்றி... நன்றி...

வேலையாள் - குருவே வணங்குகிறேன். (வேலையாள் குருவின் காலில் விழுந்து வணங்குகிறான்)

குரு - மகிழ்ச்சி... உனக்கென்ன வரம் வேண்டும் கேள்.

வேலையாள் - குருவே, தாங்கள் ஆசீர்வாதம் மட்டும் தந்தால் போதும்.

குரு - ஆசீர்வாதமா....? அதை எப்ப என்னிடம் கொடுத்தாய். என்னிடம் அது இல்லை. இல்லாததை எப்படித் தரமுடியும்...?

வேலையாள் - குருவே... நீங்கள் சொல்வது நியாயமில்லை.

குரு - வாழ்வே அநியாயம்தான். நீ பொய் சொல்லாதே மகனே! ஆசீர்வாதத்தை எப்ப என்னிடம் தந்தாய் மகனே?

வேலையாள் - மகனா...? குருவே நான் உங்கள் மகனா? அப்படியானால் எனது தாய் யார் குருவே?

குரு - பிழையான விளக்கம் பையா. உனக்கு மூளை வளர்ச்சி போதாது. சம்பூரண புத்திவிருத்தி லேகியம் தருகின்றேன். தினமும் நித்திரைக்குப் போகுமுன் சிறிதளவு கிள்ளிச்சாப்பிடு... அறிவு விருத்தியாகும்.

வேலையாள் - குருவின் கருணையே கருணை தங்களைப் போல் ஞானத்தைப் பெறுவது எப்படிக் குருவே....?

குரு - வன விலங்குகள் மிகுந்த காட்டில் 10 வருடங்கள் உண்ணாவிரதமிருந்து இறைவனிடம் ஞானத்தைப் பெற்றுக் கொண்டேன்.

சீடன் - எங்கடை குரு ஒருவேளை பசி தாங்கமாட்டார். தினமும் 05 நேர சாப்பாடு வேணும். அப்பிடியிருந்தும் 10 வருடங்கள் உண்ணாவிரதம் இருந்தவர். அதனால் தான் ஞானகுருவென்று நாங்கள் போற்றிக் கொண்டாடுகிறோம்.

வேலையாள் - சரி..... சரி..... சோற்று மடத்திற்குள் வாருங்கள். குதிரையை அந்தப் பக்கமாக விட்டுக் கட்டுங்கள். நன்றாகக் குளித்துத் துப்பரவாக வாருங்கள். நான் சாப்பாடு தயார் செய்து கொண்டு வந்து தருகிறேன்.

(சீடன் ஒருவன் ஓடிச்சென்று வேலையாளிடம் பின்வருமாறு கூறுகின்றான்)

சீடன் - ஐயா ஒரு முக்கிய விசயம் எங்கடை குரு 10 பேர் சாப்பிடுகிற அளவு சாப்பாடு சாப்பிடுவார். அதற்குத் தக்கமாதிரி சமையுங்கள். சரிதானே.

வேலையாள் - சரி... சரி....!

(குருவும், சீடர்களும் மடத்தில் இளைப்பாற நீட்டி நிமிர்ந்து படுக்கிறார்கள்)

குரு - குளிக்கிறதாவது, முகங்கழுவிறதாவது மண்ணாங்கட்டி. நல்ல அலுப்பும், களைப்பும். நீட்டி நிமிர்ந்து படுப்பம்.
சோறு சமைச்சு முடியச் சாப்பிடலாம். எல்லாரும் படுங்கோ.
(குரு, சீடர்கள் படுத்த பின் வேலையாள் வருகின்றான்)

வேலையாள் - ம்.... என்ன எல்லாரும் படுத்திட்டினம் குருவே.... சீடர்களே..... சாப்பிடாமல் நித்திரை கொள்ளினம். சரி.... காலையில் எழுந்ததும் பழஞ்சோறாக் கொடுக்கலாம்.
(பொழுது விடிதல் கொக்கரக்கோ ஒலி....)

வேலையாள் - குருவே, சீடர்களே நல்லா விடிஞ்சு போச்சு எழும்புங்கோ... எழும்புங்கோ...

குரு - ஆரடாப்பா... என்ரை நித்திரையைக் குழப்பிறது?

சீடர் - நானில்லை குருவே. மடத்து வேலையாள்தான் நித்திரையைக் குழப்பினவன்.

குரு - ஏனடாப்பா... கொஞ்சநேரம் நிம்மதியாக நித்திரை கொள்ளவும் விடமாட்டியே...?

வேலையாள் - நல்லா விடிஞ்சு போச்சு. காலைக்கடனை முடிச்சு குளிச்சுத் துப்பரவாக வாங்கோ. (குரு, சீடர் குளித்தல்...) கடவுளை கும்பிட்ட பிறகு சாப்பிட வேணும். இரவு சாப்பிடாமல் உறங்கிவிட்டீர்கள் சாப்பிடுங்கோ.

(குரு, சீடர் சாப்பிடுதல்)

குரு - சாப்பாடு அருமை... பழஞ் சோற்றுக்கு பச்சை மிளகாய், வெங்காயம் அருமை... அருமை.

பாடல்

சுவையான பழஞ்சோறு
வெங்காயம், பச்சைமிளகாய்
அருமை, மிகவும் அருமை
இதுவே நமக்கும் போதும்
அருமை மிகவும் அருமை
இதுவே நமக்குப் போதும்
ஹாக்க ஹாக்க ஹா
அருமை மிக அருமை

(மணியகாரன் தடியுடன் (கொட்டன்) ஓடிவருதல்)

மணி - என்னடா... அருமை அருமை?

குரு - ஐயோ... ஐயோ...

சீடர் - அடியாதையுங்கோ

- மண்டையுடைஞ்சு போச்சு
- கைமுறிஞ்சு போச்சு

(வேலைக்காரன் மணியகாரனைப் பிடித்து விடுகிறான்)
வேலையாள் - ஏனையா இவங்களை அடிக்கிறிங்கள்?

மணி - இவங்களின்ரை குதிரை என்ரை தோட்டத்துக்கை புகுந்து இரவிரவாக பயிர்கள் எல்லாத்தையும் நாசம் செய்து விட்டது.

குரு - அப்ப குதிரைக்கெல்லோ அடிக்க வேணும். எங்களுக்கு ஏன் அடிக்கிறீர்கள்?

மணி - வாயைப் பொத்துங்கோடா... மூடர்களே.

வேலையாள் - குருவே, சீடர்களே குதிரையைக் கட்டிவைக்க வில்லையா...?

குரு - இல்லை... பசியில் நினைவு வரவில்லை.

சீடன் - நினைவு வந்தாலும் குதிரையைக் கட்டக் கயிறு இல்லை.

மணியகாரன் - அப்ப மடத்துக்குள்ளை உங்களோடை சேர்த்துக் குதிரையை படுக்க வைச்சிருக்க வேணும்.

வேலையாள் - என்னிடம் கேட்டிருந்தால் நான் கயிறுதந்திருப்பேன்.

குரு - மன்னிச்சுக் கொள்ளுங்கோ, மணியங்காரர் ஐயா.


மணியகாரர் - உங்களுக்கு என்னடா மன்னிப்பு? ஓடுங்கோடா... இந்த ஊரைவிட்டு உடனை ஓடிப்போங்கோடா.

குரு - என்னாலை ஓட ஏலாதையா

மணியகாரர் - அப்ப உருண்டு கொண்டு போ
(மணியகாரர் குருவை உருட்டல்) குரு குளறுகிறார்.
ஐயோ... ஐயோ.....
செத்தன் செத்தன்
காப்பாற்றுங்கோ.....

சீடன் - ஐயா நாங்கள் குருவையும் தூக்கிக்கொண்டு ஓடுறம். அவரை விடுங்கோ..

மணி - சரி.... தூக்கிக் கொண்டு ஓடுங்கோ. ஓடுதல்




(ஓடிப் பக்கத்து ஊருக்கு ஓடிவந்து விடுகிறார்கள்) ஒரு மரத்தடியில் நின்று இளைப்பாறுகிறார்கள்)

சீடன் - நாங்கள் ஊரைத்தாண்டி வந்திட்டோம்.

சீடன் - ஐயோ.. போச்சு... போச்சு...

சீடன் - என்ன....? என்ன....?

சீடன் - குதிரையை சோற்றுமடத்திலை விட்டிட்டு வந்திட்டம்.

குரு - ஐயோ எங்கடை அதிசயக்குதிரை... என்ன செய்யிறது. அந்த ஊருக்குப்போனால் மணியகாரன் அடிச்சுச் சாக்கொண்டு போடுவான்.

சீடன் - குதிரை போனால் போகட்டும். அதுக்காக எங்கடை உயிரைக் போக்காட்ட ஏலாது.

குரு - சரியா இளைக்குது மரத்துக்குக்கீழை இருந்து இளைப்பாறுவம். பிறகு சாப்பாட்டைத்தேடி அடுத்த ஊருக்கு நடப்பம். (குரு, சீடன் மரத்தின் கீழ் அமர்ந்து இளைப்பாறுகின்றனர்)

சீடன் - அதோ பாருங்கள். கொஞ்சப் பேர் ஏதோ கட்டிக்கொண்டு இருக்கினம்.


குரு - என்ன விடயம் என்று அறிந்து வாருங்கள் சீடர்களே?

சீடன் - குருவே பல்லக்குச் செய்கிறார்களாம்.

குரு - பல்லக்கா... உடனே எனக்கு வேண்டும். உரிய பணத்தைக் கொடுத்து வாங்கி வாருங்கள். மூடிய பல்லக்கு என்னை மறைக்கும். பரமார்ந்த குரு பல்லக்கில் போவது சனங்களுக்கு தெரிய வேண்டும்.

சீடன் - குருவின் புகழும் பெருகும்.

சீடன் - அப்ப எல்லா இடத்தினையும் சாப்பாடு நன்றாகக்கிடைக்கும். பல்லக்கை வாங்கி வருகிறோம். சீடர்கள் பல்லக்கை எடுத்து வருதல். குருவை தூக்கி ஏற்றுதல். சீடர்கள் பல்லக்கைத் தூக்கிக்கொண்டு நடக்கின்றார்கள்.



சீடர்கள் 1. ஐயோ.... சரியான பாரம்
2. களைக்குது
3. தோள் வலிக்குது
4. கால் நடுங்குது
5. கீழை வைப்பம்.

குரு - வைக்கக்கூடாது தூக்கிச் செல்லுங்கள் சனங்கள் அதிகம் உள்ள வீதிகளில் தூக்கிச் செல்லுங்கள்.


சீடன் - இயலாது குருவே. உங்களை விழுத்திப்போடுவம் போலை இருக்குது.

குரு - விழுத்திப் போடாதையுங்கோ, இறக்கி விடுங்கோ நான் கீழை குதிக்கட்டே?


சீடன் - வேண்டாம் குருவே, (குதிச்சால் மேடை உடைந்துவிடும்) நாங்களே இறக்கிவைக்கிறம்.

(சீடர்கள் பல்லக்கை இறக்கி வைத்தல்)

சீடர்கள் 1. நல்லாக் களைச்சுப்போனம்
2. மூச்சு வாங்குது
3. நாக்கு வறளுது
4. தண்ணி விடாய்க்குது
5. வாருங்கோ, தண்ணி இருக்கிற இடத்தைத் தேடிப்போவம்.
1. குருவே நீங்கள் அப்படியே கல்லக்கிலேயே இருங்கள்.
2. நாங்கள் தண்ணீர் குடிச்சிட்டு வாறம்.
(நேரம் போய்க் கொண்டிருக்கிறது)





குரு - கன நேரமாச்சு. போனவங்களைக் காணேல்லை. தேடிப்பாப்பம்.
(குரு பல்லக்கில் இருந்து இறங்கித் தேடுதல்)




(குரு தேடுகிறார்)
சீடர்களே... சீடர்களே?
எங்கு நிற்கிறீர்கள்?

(குரு அப்பால் போனதும் நாய் ஒன்று பல்லக்கினருகில் வந்து குலைத்தபடி மேடையில் ஓடித்திரிகிறது. பின்னர் பல்லக்கினுள் ஏறி அமருகின்றது)




(சீடர்கள் திரும்பிவருகிறார்கள்)

சீடர் - இப்ப களைக்கேல்லை.
தண்ணி விடாயும் தீர்ந்தது.
கிணற்றைத்தேடி கனதூரம் நடக்கவேண்டியிருந்தது.
சரி பல்லக்கை தூக்குங்கோ (நாயுடன் சேர்ந்து பல்லக்கைத் தூக்கிக்கொண்டு செல்லுதல்)

(குரு திரும்பி வருதல்)

குரு - சீடர்களே, எங்கு போகிறீர்கள் நான் இங்கு இருக்கிறேன். நில்லுங்கோ.
(பல்லக்கில் இருந்த நாய் குலைத்தல்)

சீடர் - நாய் குலைக்குது வேகமாக நடவுங்கோ.




குரு - ஐயோ... நான் இனி என்ன செய்வேன். கடவுளே... கடவுளே... யார் இனி சாப்பாடு தருவார்கள்.

பாடல்

சிந்தித்துப் பாருங்கள், சிந்தித்துப் பாருங்கள் தோழர்களே
முயற்சி செய்யுங்கள், முயற்சி செய்யுங்கள் தோழர்களே
உற்ற காலத்தில் கல்விகற்று நற்பயன் பெறுங்களேன்
கற்ற கல்வியே கைகொடுக்கும் வாழ்க்கை தனிலே

வாழ்வை முறையாய் அனுபவியுங்கள் தோழர்களே
சமூக நலன்களில் அக்கறைகொள்ளுங்கள்
உழைப்பினால் உயர்ந்து உண்டு மகிழ்ந்து வாழுங்களே
உழைத்து வாழுங்கள் தோழர்களே
கடைகெட்ட வாழ்வு எமக்கு வேண்டாம் தோழர்களே.

*** முற்றும் ***

# முடிவுரை

கடந்த 30 வருடங்களாக பெரும்பாலும் ஹாட்லிக்கல்லூரியில் நான் மேடையேறிய நாடகங்களின் முதல் தொகுதியை "கல்லூரி நாடகங்கள் - 01" என்ற பெயரில் 2007ஆம் ஆண்டு ஒரு நூலாக வெளியிட்டேன். இன்று 2019ஆம் ஆண்டில் "கேட்டிருப்பாய் காற்றே" என்ற தலைப்பில் "கல்லூரி நாடகங்கள் - 02" என்ற நாடக எழுத்துருத்தொகுதியை நூலாக வெளியிட்டு வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தொழில்நுட்ப வசதிகள் நிறைந்த இக்காலத்தில் நாடக எழுத்துருவுடன், நாடக ஆற்றுகையை இறுவெட்டில் பதிவு செய்து வெளியிட்டிருந்தால், மிகுந்த பயனுடையதாக இருந்திருக்கும். கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகத்தான் இறுவெட்டில் பதிவு செய்து வருகின்றேன்.

எனது நாடகங்கள் பாடசாலை அரங்காகவும் (School Theatre) மக்கள் அரங்காகவும் (Public Theatre) அமைந்துவிடுகின்றன. ஆனாலும் பெரும்பாலும் பாடசாலை மாணவர்களைக் கொண்டு மாணவர்களுக்கு ஏற்றதாகவே நாடக எழுத்துருவை எழுதவேண்டிய நிலையும் இருந்துவருகின்றது. சில முக்கிய பிரச்சனைகளை பாடசாலையில் அரங்கேற்ற முடியாது. (உதாரணம் : அரசியல், காதல்....) எதிர்காலத்தில் பொது அரங்கில் பல்வேறு பிரச்சனைகளையும் நாடகமாக எழுதி ஆற்றுகை செய்ய வேண்டும் என்பது எனது பேரவாவாகும்.

ஹாட்லிக் கல்லூரி ஆண்கள் பாடசாலையாக இருப்பதால் பெண் பாத்திரங்களுக்கு நடிப்பதை பல மாணவர்கள் விரும்புவதில்லை. அப்படி விரும்பி வந்த மாணவர்களும் ஒப்பனை, வேடவுடை அணிதலின் பின்னர் ஆண் தன்மை பொருந்திய பெண்களாகவே காணப்படுகின்றனர். ஒரு சில நாடகங்களில் மட்டும் பெண் பாத்திரங்கள் ஆண்களால் சிறப்பாக அமைந்தும் நடிப்பில் சிறந்தும் காணப்பட்டது.

நாடகங்களை நான் "வறுமை அரங்காகவே" மேடையில் அளிக்கை செய்துவருகிறேன். அதாவது நடிகனின் உடல், குரல், மனம் என்பன சிறப்படைந்து ஆளுமை வளர்ச்சிக்கு உதவவேண்டும் என்ற நோக்கிலேயே செயற்படுகின்றேன். ஒப்பனை, வேடவுடை, பின்னணிக்காட்சி அமைப்பு, ஒளியமைப்பு போன்றவற்றை எளிமையான முறையிலேயே சித்தரித்துக் காட்டுகின்றேன். பல ஆயிரங்கள் செலவழித்து எனது நாடகங்கள் மேடையேற்றப் படுவதில்லை. இது ஒரு குறைபாடாக இருந்தாலும் எனக்கு ஒரு மன நிறைவை கொடுத்து வருகின்றது.

ஹாட்லிக்கல்லூரியில் 1990 இல் இருந்து உலகநாடக மரபுக்கேற்ப சிறுவர் நாடகங்களையும், வளர்ந்தோருக்கான நாடகங்களையும் அரங்கேற்றி வருகின்றேன். இந்தவகையில் வடமராட்சியில் நவீன நாடகங்களின் தொடர்ச்சியான தொடக்கம் என்னிலிருந்தே ஆரம்பிக்கிறது என்பதே வரலாற்றுக்காக குறிப்பிட்டாகவேண்டியுள்ளது. 1996இல் வடமராட்சியில் ஹாட்லிக்கல்லூரியிலே நாடகமும் அரங்கியலும் என்ற பாடநெறியை முதலில் ஆரம்பித்தேன். தொடர்ந்து சகோதர பாடசாலையான மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நாடகமும் அரங்கியலும் பாடநெறியை ஆரம்பித்தேன்.

எதிர்காலத்திலும் நாடகத்துறையில் பல்வேறு முறைமையில் அமைந்த நாடகங்களை அரங்கேற்ற வேண்டும். நாடகப் பிரதிகளை நூலாக வெளியிட வேண்டும்.மேலும் நான் ஈடுபடும் பல்வேறு துறைகளில் செயற்பாடுகள் மட்டுமன்றி அவற்றை நூலாக்கமும் செய்யவேண்டும். என்ற பேராவலுடன் எனது கருத்துக்களை நிறைவுக்குக் கொண்டுவருகின்றேன்.

நன்றி

பா.இரகுவரன்.

## சுயவிபரங்கள்

01. முழுப்பெயர் : திரு.பாலகிருஷ்ணன் இரகுவரன்

02. முகவரி : பிராமண வீதி, தும்பளை, பருத்தித்துறை.

03. தற்போதைய தொழில் தொழிலிடம் : ஆசிரிய நூலகர், யா/ஹாட்லிக் கல்லூரி

04. கற்பித்த பாடங்கள் : விஞ்ஞானம், நாடகமும் அரங்கியலும்

05. கல்வித்தகைமை : Sc (Spe)Trd. B.A (Hons)
Special in Drama and Theatre.

06. மனைவியின் பெயர்: திருமதி. ரஞ்சிதா இரகுவரன்
தொழில் : கணித ஆசிரியர், தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்

07. பிள்ளைகளி பெயர் :

1. செல்வி ஜலனி இரகுவரன் (வயது - 23)
2. செல்வன் கிருஷ்ஷான் இரகுவரன் (வயது - 20)

08. பிள்ளைகளின் கல்வி :

1. செல்வி ஜலனி இரகுவரன்,
   உயிரியல் தொழிநுட்பம்
   ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம், கொழும்பு.
2. செல்வன் இ.கிருஷ்ஷான், க.பொ.த உயர்தரம் உயிரியல் பிரிவு (பெறுபேற்றுக்காகக் காத்திருக்கிறார்)

09. அரங்கேற்றிவரும் நாடக வகைகள் : சிறுவர் நாடகங்கள்
வளர்ந்தோருக்கான சமூக நாடகங்கள்

10. ஆய்வு மற்றும் அனுபவத்திற்காக பங்கெடுத்துக்கொண்ட பாரம்பரிய நாடக மரபுகள் :

1. நாட்டுக்கூத்து
2. விலாசக்கூத்து
3. இசை நாடகம்
4. கிறிஸ்தவக்கூத்து
5. காத்தவராயன் சிந்துநடைக்கூத்து.

11. நாடகத்துறையில் அதிக ஈடுபாட்டுடன் உழைக்கும் காலம் :
1988 இருந்து இன்றுவரை.

12. நாடகத்துறைக்குப் பங்களிக்கும் முறைமை :

1. நாடக ஆசிரயர்
2. இயக்குநர்
3. நாடகக்கல்வி ஆசான்
4. பாரம்பரிய நாடகத்துறை ஆய்வாளர்
5. நாடக நூல் வெளியீட்டாளர்

13. ஈடுபடும் பிறதுறைகள் :

1. சிறுகதை, நாவல், விமர்சனங்கள்
2. நாட்டாரியல்
3. சமூகவியல்
4. சுற்றுச்சூழலியல்
5. மரபுரிமைகள்

14. இதுவரை கிடைத்த விருதுகள் :

1. நாடகச்செம்மல் - தும்பளை மேற்கு கலைபண்பாட்டுக் கழகம்
2. கலைவாருதி - வடமராட்சி வலயக்கல்வி நிலையம்
3. யாழ்முத்து - யாழ்ப்பாணப் பிரதேச செயலகம்.

15. இதுவரை எழுதிவெளியிட்ட நூல்கள் :

1. ஊரும் வாழ்வும் (தும்பளைக் கிராமம் பற்றிய சமூகவியல் ஆவணம் - 2001)
2. கல்லூரி நாடகங்கள் - பகுதி 01 - 2006
3. பிராமண வீதி சரிதம் - 2009
4. பருத்தித்துறையூராம் - 2012
5. பண்டைத்தமிழர் நாடகங்கள் - 2003
6. சீன, யப்பாணியப் பாரம்பரிய நாடகங்கள் - 2007
7. வடமராட்சியில் நாட்டுக்கூத்துக்கள் - 2016
8. கண்டல் காடுகள் - 2018
9. கல்லூரி நாடகங்கள் தொகுதி 02 - 2019

16. இனி வெளியிடத் தயார் நிலையில் உள்ள நூல்கள் :

1. சுற்றுச்சூழல் விஞ்ஞானக் கவிதைகள்
2. கற்கோவளம் - கடற்கரை கிராமம் (சமூகவியல் ஆவணம்)
3. சிறுதெய்வ வழிபாடு
4. வடமராட்சியில் விலாசக்கூத்து
5. வடமராட்சியில் இசைநாடகங்கள்.

# அகவை

# 60








தீபன் பதிப்பகம், பருத்தித்துறை - 0776520315